Regd. No. M. 5771

870

பூஞ்சோலை

கௌரவ ஆசிரியர்: அழ. வள்ளியப்பா

மலர் 4 இதழ் 3

ஜூன் 1954
விலை அணா நான்கு

சிறுவர் மாத இதழ்



1. 'மலரும் உள்ளம்' முதல் பிரதியை ஒரு குழந்தையிடம் கொடுக்கிறுர், கல்வி மந்திரி கனம் சி. சுப்பிரமணியம் அவர்கள்.
2. நூலாசிரியர் பாராட்டுரைகளுக்கு நன்றி தெரிவிக்கிறுர்.
3. குழந்தைகளின் கதம்ப நிகழ்ச்சி ஆரம்பமாகு முன் சபையோருடன் ஸ்ரீ கல்கி, கனம் மந்திரி, ஸ்ரீ. சின்ன அண்ணுமலை.

M. G. Prasad
News Agent
... JN., NAGERCOIL

★ புலி ஒரு சமயத்தில் இரண்டிலிருந்து ஆறு குட்டிகள்வரை போடுகிறது.

★ இரண்டு வயதாகும் வரை குட்டிகள் தாய்ப் புலியுடனே இருக்கும், அப்போது 'வேட்டையாடும் கலை'யைத் தாய்ப்புலி தன் குட்டிகளுக்குக் கற்றுக் கொடுக்கிறது.

★ ஆசியாவில் அநேக இடங்களில் புலி வசிக்கிறது. இலங்கையில் புலி இல்லை.

★ இந்தியப் புலிக்குத்தான் நல்ல வளர்ச்சி உண்டு. நன்றாக வளர்ந்த புலி 10 அடி நீளமும், 550 பவுண்டு எடையும் இருக்கும்.

★ புலியின் தோல் மஞ்சள் நிறத்தில் குறுக்கே கறுப்புக் கோடுகளுடன் இருக்கிறது.

★ புலிக்கு நன்றாக நீந்தத் தெரியும். இரையைத் தேடி அடிக்கடி நதியைக் கடந்து செல்லும்.

★ புலிக்கு மரம் ஏறத் தெரியாது. ஆனாலும், மரத்திலே வேட்டைக்காரர்கள் இருப்பது தெரிந்தால், கீழேயிருந்து 18 அடி உயரம்வரை தாவி மரக்கிளையில் தொத்திக்கொண்டுவிடும்!

★ மான், காட்டுப் பன்றி முதலியவையே புலியின் முக்கிய ஆகாரம். சில சமயம் குரங்கு, முள்ளம் பன்றி, ஆடு மாடுகள் முதலியவற்றையும் அடித்துத் தின்னும்.

★ குட்டிகளுக்கு ஆகாரம் கிடைக்காதபோதும், வயதாகிக் கிழடு தட்டி விட்டபோதும் பக்கத்திலுள்ள ஊர்களுக்குள் புகுந்து ஆடு மாடுகளையும், மனிதரையும் கொன்று தின்ன ஆரம்பித்துவிடும்!

★ இந்தியாவில் வருடத்திற்குச் சராசரி 800 பேர் புலியால் கொல்லப்படுகின்றனர்.

★ நம் தேசத்திலும், பர்மாவிலும் உள்ள சில கிராமவாசிகள் புலியைத் தெய்வ அம்சம் பெற்றதாக நினைத்து அதைக் கொல்வதில்லை.

★ அடைத்து வைத்திருக்கும்போது சரியாக இரை கிடைக்காதபோனால், தான் பெற்ற குட்டியையே புலி தின்றுவிடுமாம்!

ஆவணக் காப்பக

ஆசிரியர் சொல்லுகிறார்

முதன் முதலில் நாங்கள் உங்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும். 'எதற்காக மன்னிப்பு!' என்று கேட்கிறீர்களா? பிச்சைக்கார இளவரசன் தொடர் கதை இந்த இதழில் ஆரம்ப மாகப் போவதாக நாங்கள் அறிவித்திருந்தோம். நீங்களும் ஆவலாக அதை எதிர்பார்த்திருக்கிறீர்கள். ஆனால், சில எதிர் பாராத காரணங்களால் அந்தத் தொடர்கதையை இந்த இதழில் ஆரம்பிக்க இயலாது போயிற்று. அதற்காகத்தான் உங்களிடம் மன்னிப்புக் கோருகிறோம். தயவு செய்து மன்னித்துவிடுங்கள். அடுத்த இதழில் நிச்சயம் ஆரம்பித்துவிடுகிறோம். சந்தேகமே வேண்டாம்.

'பாலர் கவி அரங்கம்' பகுதிக்குப் பல அற்புதமான கவிதை களையெல்லாம் அனுப்பி வருகிறார்கள் பல தம்பி தங்கைகள். சிலர், தாங்களும் அப்பகுதியில் கலந்துகொள்ள வேண்டுமென்ற ஆசையில், பிறருடைய பாடல்களை அப்படி அப்படியே அழகாக எழுதி நமக்கு அனுப்பிவிடுகிறார்கள்! இது மிகப் பெரிய தவறு. சொந்தமாக எழுத முடிந்தால் எழுதி அனுப்பவேண்டும். இல்லா விட்டால், இது மாதிரி செய்து பெயரைக் கெடுத்துக்கொள்ளக் கூடாது. சிலர், தங்களுடைய வயதைக் குறிப்பிட மறந்துவிடு கிறார்கள். வயதைக் குறிப்பிடாவிட்டால், கவிதையை ஏற்றுக் கொள்ள இயலாது.

இந்த இதழில் 'நான் பிறந்தது ஆந்திரம்' என்ற தலைப்பில் ஆந்திர தேசத்துத் தம்பி ஒருவனின் கட்டுரையை வெளியிட முயன்றோம்; முடியவில்லை. இடப் பஞ்சமே காரணம். அடுத்த இதழில் அக் கட்டுரை வெளிவரும்.

இந்த மாதம் நீங்கள் எல்லோரும் மறுபடியும் பள்ளி செல்ல ஆரம்பித்து விடுவீர்கள். பரீட்சையில் தேர்ச்சி பெற்று மேல் வகுப்புகளுக்குச் செல்லும் தம்பி தங்கைகள் அனைவருக் கும் எங்களது வாழ்த்துக்கள். தோல்வியடைந்தவர்கள் தோல் வியை நினைத்தே வருத்தப்படுவதில் பயனில்லை. விடாமுயற்சி யுடன் இனிப் படிக்கவேண்டும். வெற்றி நிச்சயம் கிடைக்கும். ஐயமுண்டு; பயமில்லை.

—அழ. வள்ளியப்பா

199269

நாலாவது வரைதான் படித்தார். ஆனால், பல நல்ல நல்ல ஆங்கில நூல்களையெல்லாம் தமிழிலே தந்திருக்கிறார்! திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியரா யிருந்தார். இன்று சிறந்த ஒரு பத்திரிகையின் ஆசிரியராய்த் திகழ்கின்றார்!

கணிதம் பயிலும் கதாசிரியர்

கணக்குப் போடாமல் கவி எழுதினார் கவியரசி சரோஜனி. அவரைப் பற்றி உங்களுக்குத் தெரியும். ஏற்கனவே 'பூஞ்சோலை'யில் படித்திருக்கிறீர்கள். கணக்குப் பாடத்தை ஒழுங்காகப் படிக்க முயன்றதால் சிறந்த கதாசிரியன் ஆனான் ஒரு சிறுவன். அவன் யார் என்று உங்களுக்குத் தெரியுமா?

நாற்பது வருஷங்களுக்கு முன்பு ஒருநாள்; பதின்மூன்று பதினான்கு வயதுச் சிறுவன் ஒருவன், 'அல்ஜிப்ரா' கணிதம் போட்டுக்கொண்டிருந்தான். கணக்குகள் எல்லாம் ஆங்கிலத்தில் இருந்தன. அவனுக்கோ ஆங்கிலம் அவ்வளவாகத் தெரியாது. நிமிஷத்துக்கு ஒரு முறை அகராதியைப் புரட்டிப் புரட்டிப் பார்த்துத்தான் அர்த்தம் தெரிந்துகொள்வான். அவனுக்குக் கணிதத்தில் அபார மோகம். ஆயினும், ஆங்கில ஞானம் தடை செய்கிறதே! இது அவனுக்கு எரிச்சலூட்டியது. அதற்காகக் கணிதம் கற்பதை அவன் நிறுத்திவிடவில்லை. தீவிரமாக ஆங்கிலத்தையும் கற்க ஆரம்பித்துவிட்டான்!

அவன் பள்ளிக்கூடத்தில் அதிகம் படித்ததில்லை. சிறு வயதில் நான்கு வருஷ காலம் 'மிஷனரி' பள்ளிக்கூடத்தில் படித்தான். பிறகு தனக்குத் தானே வாத்தியாராக இருந்துகொண்டு ஆங்கில இலக்கியம், தமிழ் இலக்கியம், தத்துவம்,

விஞ்ஞானம், பெரியோர் வரலாறு முதலிய விஷயங்கள் பற்றிய புத்தகங்களை ஏராளமாகப் படிக்க ஆரம்பித்துவிட்டான். 'எனக்கு இந்தப் பாடத்தில் அதிக மார்க்கு வந்தது; அந்தப் பாடத்தில் குறைவான மார்க்கு வந்தது' என்ற கவலைகள் அவனுக்கு இல்லை. பிடித்த பாடத்தைப் பிடித்தபோது படித்தான். எந்த விஷயமும் அவனுக்குப் பிடித்த விஷயம்தான்!

அவ்வாறு சகல துறையிலும் விரும்பிக் கற்றதால்தான் பிற்காலத்தில் அச்சிறுவனால் உயர்ந்த 'டைஜஸ்ட்' பத்திரிகையான மஞ்சரியின் ஆசிரியராக விளங்க முடிந்தது!

ஆம், மஞ்சரி ஆசிரியர் தி. ஜ. ர. என்னும் தி. ஜ. ரங்கநாதன்தான் அச்சிறுவன்.

திருப்பழனம் அருகே உள்ள திங்களூர் தி.ஜ.ர. வின் பூர்வீகம். ஆனால், அவர் அதில் இரண்டு மூன்று நாளைக்குமேல் போய்த் தங்கியதில்லையாம். அவர் தந்தை ஜகத்ரக்ஷகன், பட்டுக்கோட்டை தாலுகாவில் உள்ள ஒக்கனாடு என்ற ஊரில் கர்ணமாக இருந்தார். தி. ஜ. ர. சிறுவயதில் படித்த கிறிஸ்தவ மிஷனரி பள்ளிக்கூடத்தில் ஏ. வி. சாமுவேல் என்ற ஓர் உபாத்தியாயர் இருந்தார். தி. ஜ. ர. விடம் அவருக்குப் பிரியம் அதிகம். பள்ளிக்கூடத்தை நிறுத்திய பிறகும் சாமுவேலிடம் தி.ஜ.ர. பாடம் படித்து வந்தார்.



அப்போதுதான் அவர் கணக்குக் கற்றுக்கொள்ள ஆரம்பித்தார். கணக்கிலே பெரும் மோகம் ஏற்பட்டுவிட்டது. க்ஷேத்திர கணிதம், பீஜ கணிதம், 'ட்ரிக்னாமெட்ரி' முதலியவற்றை ஆர்வமுடன் கற்றுக்கொண்டார். பதினைந்து பதினாறு வயதுக்குள் இராமாயணம், பாரதம், கீதை போன்ற தமிழ் வசன நூல்களை யெல்லாம் படித்துவிட்டார்! பைபிள் கதைகள் அவருக்கு மிகவும் பிடிக்கும். வகுப்பில் முதலாவதாகத் தேறினார். அதற்காக வந்த பரிசைப் பெற்றுக் கொள்ளுமுன் தி. ஜ. ர. பள்ளிக்கூடத்தை விட்டுவிட்டார். ஆனால் சாமுவேல் சொந்த முறையில், "இந்தா, இதைப்படி; இங்கிலீஷில் நல்ல ஞானம் அடையலாம்" என்று சொல்லி அவருக்கு ஒரு பெரிய பைபிளைப் பரிசளித்தார்.

தி. ஜ. ர. வுக்குப் பத்திரிகை படிப்பதில் மிகவும் ஆசை. பத்திரிகை மூலம்தான் அவர் வெளியுலகத் தொடர்பு வைத்திருந்தார். அவர் இருந்த ஊரில் தபாலாபீஸ் கூட இல்லை. மூன்று நாளைக்கு ஒருமுறைதான் தபால்காரரே வருவார்.

தபால்காரரை ஆவலோடு எதிர்பார்த்து நிற்பார் தி. ஜ. ர. தபால்காரர் ஆனந்த போதினி என்ற பத்திரிகையைக் கொடுத்து விட்டுப் போவார். அப்போது இருந்த பிரபலமான பத்திரிகை அது. அந்தப் பத்திரிகையி





விருந்த கதைகட்டுரைகளைப் போலத் தாமும் எழுத ஆசைப்படுவார் தி. ஜ. ர. அவர் எழுதுவதைப் பார்த்து அவருடைய தந்தை மகிழ்ச்சியடைவார். மகனைத் தந்தை உற்சாகப்படுத்துவார்.

வ. ரா. என்ற புகழ்பெற்ற எழுத்தாளரின் தந்தையும், தி.ஜ.ர.வின் தந்தையும் நண்பர்கள். "ராஜாவின் பிள்ளைகூட எழுதுகிறான். நீயும் எழுதுகிறாயா? எழுது, எழுது!" என்று கூறுவாராம் தி. ஜ. ர.வின் தந்தை.

பத்திரிகைத் தொழிலில்சேர்ந்துஉழைக்க ஆசைப்பட்டார் தி. ஜ. ர. அப்போது அவருக்கு வயது இருபத்து மூன்று. தஞ்சாவூரிலிருந்த சமரச போதினி என்ற பத்திரிகையில் உதவி ஆசிரியராகச் சேர்ந்தார். சில மாதங்கள் அதன் ஆசிரியராகவும் வேலை பார்த்தார். அப்பத்திரிகையைச் சீக்கிரத்திலேயே மூடிவிட்டார்கள். தி. ஜ. ர. என்ன செய்வார்? தம் மனைவியின் ஊரான காளி என்ற கிராமத்துக்குப் போனார். அங்கே திண்ணைப் பள்ளிக்கூட உபாத்தியாயரானார்!

பத்திரிகைத் தொழிலில் மோகம் கொண்டவர் எத்தனை நாள் திண்ணைப் பள்ளிக்கூட வாத்தியாராக இருப்பார்? மறுபடியும் பட்டணத்துக்குத் திரும்பினார். அப்போது காரைக்குடியில் 'ஊழியன்' என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்த வ. ரா. அவரை அழைத்துத் தமக்கு உதவியாக அமர்த்திக் கொண்டார். பிறகு, தி. ஜ. ர. சுதந்திரச்சங்கு, ஜயபாரதி, தமிழ் நாடு, ஹநுமான், சக்தி, பாப்பா, ஹிந்துஸ்தான் முதலிய பத்திரிகைகளில் உதவி ஆசிரியராகவும், ஆசிரியராகவும் இருந்திருக்கிறார்.

தமிழ் நாடு பத்திரிகையிலும், ஊழியனிலும் அவர் வ. ரா. வுடன் சேர்ந்து வேலை செய்தார்.

வ. ரா. வும், தி. ஜ. ர. வும் சிறந்த நண்பர்கள். தி. ஜ. ர. விடம் வ. ரா. வுக்கு மிகுந்த அபிமானம். தம் நண்பர்களிடம், "பாருங்கள் ஐயா, நமது தி. ஜ. ர. நாலாவது தான் படித்தார். ஆனால், ட்ரிக்னாமட்ரி போடுகிறார்!" என்று பெருமையாகச் சொல்வாராம். வ. ரா. வின் சகோதரர்களில் தி. ஜ. ர. வும் ஒருவர் என்று எத்தனையோ பேர் நினைத்திருந்தார்கள்.

1932-ல் காரைக்குடி 'ஊழியன்' பத்திரிகையில் தி. ஜ. ர. வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது, நாட்டில் தேசியக் கிளர்ச்சி பெரிதாக எழுந்தது. லண்டன் வட்ட மேஜை மகாநாட்டிலிருந்து திரும்பிவந்த மகாத்மா காந்தியை அரசாங்கத்தார் சிறைப் படுத்திவிட்டனர். அரசாங்கத்தை எதிர்த்து இரண்டு கூட்டங்களில் தி. ஜ. ர. பேசினார். அவரைச் சிறைப் படுத்தினார்கள். திருச்சி சிறையில் 11 மாதங்கள் இருந்தார்.

தி. ஜ. ர. சக்தி பத்திரிகை ஆசிரியராக இருந்தபோது சக்தி காரியாலயத்தார் 'பாப்பா' என்ற குழந்தைப் பத்திரிகையை ஆரம்பித்தார்கள். அதற்கும் தி. ஜ. ர. இரண்டு வருஷம் ஆசிரியராக இருந்தார். அப்போது அவர் குழந்தைகளுக்காக ஏராளமான கதை கட்டுரைகள் எழுதினார். பஞ்ச தந்திரம், ராமாயணம், மகா பாரதம், பைபிள் முதலிய இலக்கியங்களிலிருந்து கதைகளை எடுத்துக் குழந்தைகளுக்கு ஏற்ற இனிய, எளிய தமிழில் எழுதியிருக்கிறார். சின்னச் சின்னப் பாடல்கள் சில இயற்றியிருக்கிறார்.

அப்போது ஆசிரியர் தி. ஜ. ர. வைப் பார்க்கப் போனால் அவர் மேஜையிலே தீக்குச்சிகளை வைத்து விளையாடிக் கொண்டிருப்பதைக் காணலாம். 'செய்து பாருங்கள்', 'தீக்குச்சி விளையாட்டு' முதலிய பரிசோதனைப் பகுதிகளை அவர் தாமே செய்து பார்த்துத் திருப்தி அடைந்த பிறகுதான் பத்திரிகையில் வெளியிடுவார்.

'பாப்பா' வுக்கு முன்பேயே, 'பாப்பா மலர்', 'பாலர் மலர்' முதலிய குழந்தைப் பத்திரிகைகள் தமிழில் வெளிவந்திருக்கின்றன. ஆனாலும், 'பாப்பா' தான் புதுமாதிரியான முறையில் புதுப்புது விஷயங்களோடு வந்த முதல் குழந்தைப் பத்திரிகை!

லூயி காரல் என்ற ஆங்கில ஆசிரியர் எழுதிய இரண்டு குழந்தைப் புத்தகங்கள் உலகப் பிரசித்தி பெற்றவை. அவற்றில் ஒன்றைத் தழுவி அலமுவின் அதிசய உலகம் என்ற பெயரில் தொடர்ச்சியாய் 'பாப்பா' வில் எழுதினார். அந்தக் கதையும், தி. ஜ. ர. வின் குழந்தைக் கதைகளும் புத்தக வடிவில் வெளிவர இருக்கின்றன.

அவர் எழுதிய சமர்த்து மைனா

என்ற புத்தகம் சமீபத்தில் வெளி வந்திருக்கிறது. (கண்ணன் வெளியீடு.) விலங்குகள், பறவைகளின் பழக்க வழக்கங்களைப் பற்றி சுவாரசியமாகக் கதைபோல் எழுதியிருக்கிறார்.

'சக்தி', 'பாப்பா' பத்திரிகைகளை விட்ட பிறகு, தி. ஜ. ர. சில காலம் 'ஹிந்துஸ்தான்' பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். 1947-ஆம் வருஷத்தில் கலைமகள் காரியாலயத்தில் சேர்ந்தார். சென்ற எழு வருஷமாக மஞ்சரியின் ஆசிரியராக இருந்து அப் பத்திரிகையை மிகச் சிறந்த முறையில் நடத்தி வருகிறார்.

இதுவரை அவர் எழுதிய சிறு கதைகள் சந்தனக் காவடி, நொண்டிக் கிளி, காளி தரிசனம் என்ற புத்தகங்களாக வெளி வந்திருக்கின்றன. மஞ்சேரி எஸ். ஈச்வரன் என்பவர் தி. ஜ. ர. வின் ஆப்த நண்பர். ஆங்கிலேயரும் புகழும்படி ஈச்வரன் ஆங்கிலம் எழுதுவார். அவர் தி. ஜ. ர. வின் பல கதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டிருக்கிறார்.

தி. ஜ. ர. வின் கட்டுரைத் தொகுதிகள் ஆகா ஊகூ, இது என்ன உலகம், பொழுது போக்கு, எழுத்தும் எழுத்தாளரும், எப்படி எழுதினேன், யோசிக்கும் வேளையிலே என்ற புத்தகங்கள்.

தி. ஜ. ர. நான்காம் வகுப்பு வரைதான் படித்திருந்தாலும், பல அருமையான ஆங்கில நூல்களை அற்புதமாக மொழி பெயர்த்துத் தந்திருக்கிறார். நேருஜியின் 'அரசியல் நிர்ணய சபை', வெண்டல் வில்கீயின் 'ஒரே உலகம்', டால்ஸ்டாயின் 'குழந்தைகள் அறிவு', ஹரீந்திரநாத் சட்டோபாத்யாயாவின் 'கூண்டுக் கிளி' என்ற நாடகத் தொகுதி, 'அட்லாண்டிச் சாசனம்', 'லெனின் கதைகள்', ராஜாஜியின் 'அபேத வாதம்' முதலிய புத்தகங்களை அவர் மொழி பெயர்த்திருக்கிறார்.

தி.ஜ.ர.வுக்குச் சிறு வயதிலேயே பெரியோர்கள் வாழ்க்கை வரலாறு படிப்பதில் ஆசை உண்டு. அவரும் சில வாழ்க்கை வரலாறுகளை எழுதியிருக்கிறார். தலைவர் ஜவாஹர், புதுமைக் கவி பாரதி, தீனபந்து ஆண்ட்ரூஸ், புகழ்ச் செல்வர், விமான அசுரன் கோயரிங் என்பவை அவர் எழுதிய வரலாற்று நூல்கள்.

அவருடைய பொழுது போக்கு என்ற புத்தகத்தைச் சிறுவர் சிறுமியரும் படிக்கலாம். அது சிறுவருக்காகவே எழுதப் பட்டது அல்ல என்றாலும் உயர்ந்த ரக நகைச்சுவை மிக்க இலக்கியம்.

'குழந்தைகளுக்கு வெளிவரும் கதைகள் பற்பல வகைகளில் இருக்கவேண்டும். சாகசச் செயல்கள் நிறைந்த கதைகளும் வேண்டும்; நற்போதனைக் கதைகளும் வேண்டும். எதுவானாலும் சுவாரசியமாயிருக்க வேண்டும்' என்று அவர் கூறுவார்.

தி. ஜ. ர. வுக்கு இரண்டு ஆசைகள் உண்டு. ஆறு முதல் பன்னிரண்டு வயதுவரை உள்ள குழந்தைகளுக்கு ஒரு சிறந்த பத்திரிகை வெளிவர வேண்டும் என்பது ஓர் ஆசை. எளிய விஞ்ஞான உண்மைகளைக் கதைபோல் சொல்லி விளக்கும் புத்தகங்கள் அதிகம் வெளிவர வேண்டும் என்பது மற்றோர் ஆசை.

'பத்திரிகைகள், முக்கியமாகக் குழந்தைப் பத்திரிகைகள் இலக்கணப் பிழையில்லாமல் வெளி வர வேண்டும்' என்று அடிக்கடி தி. ஜ. ர. சொல்வார்.

தி. ஜ. ர.வுக்குப் பிடித்த விஷயங்கள் இரண்டு: ஒன்று கணிதம்; மற்றொன்று சதுரங்கம். சதுரங்கம் ஆடுவதில் அவர் வல்லவர்; நேரம் போவதே தெரியாமல் அந்த ஆட்டத்தில் அவர் மூழ்கி விடுவார்.

எழுத்தாளர் தி. ஜ. ர. ஒரு 'போட்டோகிராப'ருங்கூட. போட்டோவைப் பெரிதாக்கும் கருவி (என்லார்ஜர்) ஒன்றை அவர் செய்திருக்கிறார். தம்மைத் தாமே கூடப் படம் எடுத்துக் கொள்வார். ஹாஸ்யம், சாந்தம், கோபம், முதலிய ஒன்பதுவகை பாவங்களில் முகத்தை வைத்துக் கொண்டு தம்மைத் தாமே படம் எடுத்துக் கொண்டிருக்கிறார்!

இன்று தி. ஜ. ர.வுக்கு ஐம்பத்து மூன்று வயது ஆகிறது. (அவர் பிறந்தது 1901 ஏப்ரலில்.) ஆனால், அவர் இன்னும் மாணவராகத்தான் இருக்கிறார். கணிதம், வான சாஸ்திரம் முதலிய ஏதாவது ஒரு விஷயத்தைத் தினம் கற்றபடி இருக்கிறார்; தம் வீட்டிலேயே ரேடியோ ரிப்பேர், மின்சார ரிப்பேர் ஏதாவது செய்தபடி இருக்கிறார்.

தி. ஜ. ர. இன்று மஞ்சரியின் மூலம் தமிழ் மக்களிடையே அறிவைப் பரப்பும் தொண்டு புரிந்து வருகிறார். சிறு வயதில் மாணவனாயும் ஆசிரியனாயும் இருந்தது போலவே, இன்றும் அவர் மாணவராயும் இருக்கிறார்; அறிவைப் பரப்பும் ஆசிரியராயும் இருக்கிறார்.

தி. ஜ. ரங்கநாதன்
[ஆசிரியர், மஞ்சரி]
32, எழும்பூர் ஹைரோடு
எழும்பூர். சென்னை-8

பிள்ளையார்மேல் கோபம்!

சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப் பிள்ளை யவர்கள் ஒரு கூட்டத்தில் கூறினார்கள். "பிள்ளையாரிடத்தில் எனக்கு மிகுந்த பக்தி உண்டு. அவர் மிகவும் நல்லவர். ஆனாலும், அவரிடத்தில் எனக்குக் கொஞ்சம் கோபம். 'என்ன கோபம்?' என்று கேட்கிறீர்களா? சென்னையில், எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும் அவருடன் பேசும்போது 'நீ', 'நீ' என்றே மரியாதையில்லாமல் பேசுகிறார்கள். ஆனால், தெற்கே போகப் போக மரியாதை அதிகம். செட்டியை செட்டியார் என்றும், முதலியை முதலியார் என்றும் குறிப்பிடுவார்கள். ஆனால், என்னைப்போன்ற ஒரு பிள்ளையை, 'பிள்ளையார்' என்று அழைக்க முடியாதபடி இந்தப் பிள்ளையார் செய்துவிட்டாரே!"

ஒரே லட்சியம்

தி. ஜ. ர

தர்மன், பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் என்று ஐந்து ராஜகுமாரர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு நூறு பங்காளிகள் இருந்தார்கள். அவர்களில் மூத்தவனுக்குத் துரியோதனன் என்று பெயர்.

இந்த நூற்றி ஐந்து பேருக்கும் துரோணர் என்று ஒரு குரு இருந்தார். இவர்கள் எல்லாருக்கும், அவர் வில் வித்தை கற்றுக் கொடுத்தார்.

பல மாத காலம் ஆயிற்று. பிறகு, ஒருநாள், துரோணர் இவர்களைப் பரீட்சை செய்ய விரும்பினார். மண்ணினால் ஒரு குருவிப் பொம்மை செய்தார். ஒரு மரக்கிளையில் அதைக் கட்டினார். தர்மனைக் கூப்பிட்டார்.

"தர்மா! இதோ இந்தக் குருவிப் பொம்மையைப் பார். இதன் தலையை உன் வில் அம்பினால் அடித்து விழுத்தவேண்டும். செய்வாயா?" என்று குரு கேட்டார்..

"ஆஹா! செய்கிறேன்" என்றான் தர்மன்.

தர்மன் தன் வில்லை எடுத்தான். அதன் நாணிலே அம்பைத் தொடுத்தான். வாங்கி விட, தயாரானான்.

"தர்மா! இப்போது உன் கண்ணிலே என்ன தெரிகிறது? யார் யார் தெரிகிறார்கள்?" என்று துரோணர் கேட்டார்.

"ஆசார்யரே! நீங்கள் தெரிகிறீர்கள். என் தம்பிகள் தெரிகிறார்கள். மரம் தெரிகிறது. குருவி தெரிகிறது" என்றான் தர்மன்.

"தர்மா! கவனமாய்ப் பார். இப்போது என்ன தெரிகிறது?"

என்று மறுபடியும் கேட்டார் துரோணர்.

மறுபடியும் அதே பதிலைச் சொன்னான் தர்மன்.

"தர்மா! இன்னும் கூர்ந்து பார். இப்போது என்ன தெரிகிறது?" என்று மூன்றாம் முறையும் கேட்டார் துரோணர்.

அப்போதும் அதே பதிலைச் சொன்னான் தர்மன்.

"அப்படியா? அப்படியானால், அந்தக் குருவியை அடித்துத் தள்ள உன்னால் முடியாது. நீ அப்பாலே போ" என்றார் துரோணர்.

அடுத்தபடியாக, துரியோதனனை அழைத்தார்.

துரியோதனன் தன் வில்லை எடுத்து, அம்பைத் தொடுத்து, குருவியைப் பார்த்துத் தயாராய் நின்றான்.

"துரியோதனா! இப்போது உன் கண்ணிலே என்ன தெரிகிறது? யார் யார் தெரிகிறார்கள்?" என்று குரு கேட்டார்.

"ஆசார்யரே! நீங்கள் தெரிகிறீர்கள். என் சகோதரர்கள் தெரிகிறார்கள். மரம் தெரிகிறது. குருவி தெரிகிறது" என்றான் துரியோதனன்.

"கூர்ந்து பார். இப்போது என்ன தெரிகிறது?" என்று மறுபடியும் கேட்டார் குரு.

மறுபடியும் அதே பதிலைச் சொன்னான் துரியோதனன்.

"இப்போது என்ன தெரிகிறது?" என்று மூன்றாம் முறையும் கேட்டார் குரு.

மூன்றாம் முறையும் அதே பதிலைச் சொன்னான் துரியோதனன்.

"அப்படியா? அப்படியானல், அந்தக் குருவியை உன்னுல் அடித்துத் தள்ள முடியாது. நீ அப்பாலே போ" என்ருர் குரு.

அர்ச்சுனனைத் தவிர, மற்ற நூற்றி இரண்டு பேரையும் தனித் தனியாய்த் துரோணர் அழைத்தார். இதே மாதிரி குருவியைக் குறி பார்த்து. அவர்கள் நின்ருர்கள். இதே கேள்வியை, மும்மூன்று முறை ஒவ்வொருவனையும் குரு கேட்டார். அவர்களும் இதே பதிலைத்தான் சொன்னுர்கள். அவர்களை யெல்லாம், குரு அப்பாலே போகச் சொல்லி விட்டார்.

கடைசியில், அர்ச்சுனனை அவர் அழைத்தார்.

அவனும் வந்து, வில்லைப் பிடித்து, நாணைப் பூட்டி அம்பைத் தொடுத்து, குருவியைக் குறிபார்த்து நின்ருன்.

"அர்ச்சுனு! இப்போது உன் கண்ணிலே என்ன தெரிகிறது? யார் யார் தெரிகிருர்கள்?" என்று குரு கேட்டார்.

"ஆசார்யரே! ஒன்றே ஒன்று தான் தெரிகிறது. வேறே எதுவும் தெரியவில்லை; யாரும் தெரியவில்லை" என்ருன் அர்ச்சுனன்.

குரு: நான் தெரிகிறேனு?

அர்ச்சுனன்: இல்லை.

குரு: உன் சகோதரர்கள் தெரிகிருர்களா?

அர்ச்சுனன்: இல்லை.

குரு: மரம் தெரிகிறதா?

அர்ச்சுனன்: இல்லை.

குரு: குருவி தெரிகிறதா?

அர்ச்சுனன்: இல்லை.

குரு: அதுவும் தெரியவில்லையா? பின்னே என்னதான் தெரிகிறது?

அர்ச்சுனன்: ஆசார்யரே! மன்னிக்க வேண்டும். குருவியின் தலை ஒன்றுதான் இப்போது என் கண்ணுக்குத் தெரிகிறது.

குரு: பலே, நீதான் வில்லாளி. உன்னுல்தான் அதை அடித்துத் தள்ள முடியும். ஒரு குறியிலே, ஒரு லட்சியத்திலே மனம் ஈடுபட்டவன், மற்ற எதையும் மறந்து விடவேண்டும். அப்போதுதான், அந்தக் குறியை அவன் அடிக்க முடியும்; அந்த லட்சியத்தை அவன் அடையமுடியும். குருவியின் தலையை அடித்துத் தள்ளு.

அர்ச்சுனன் அம்பைக் காதளவும் வாங்கி விட்டான். அம்பு நேராகக் குருவியின் தலையில் பாய்ந்து, அதை அடித்துத் தள்ளி விட்டது.

பின்னுல், குரு அவனுக்கு அபூர்வமான பல வில் வித்தைகளைக் கற்றுக் கொடுத்தார். அர்ச்சுனனைப்போல் வில்லாளி உலகத்திலேயே கிடையாது என்று, என்றென்றும் அவன் கீர்த்தி பெற்று விட்டான்.

[குறிப்பு: இக் கதை 1945 பிப்ரவரி இதழ் பாப்பாவில் வெளிவந்தது.]

O

செய்தி கேளுங்கள்!

குழந்தைகளுக்கான படங்கள்

புதுடில்லியில் கலாசார 'பிலிம் சங்கம்' என்ற ஒரு சங்கம் இருக்கிறது. அந்த சங்கத்தார் குழந்தைகள் பட இயக்கம் ஒன்றை ஆரம்பித்திருக்கிறார்கள். அந்த இயக்கத்தை எல்லோரும் ஆதரிக்க வேண்டுமென்றும், வெளி நாடுகளில் குழந்தைகளுக்கென்றே படங்கள் தயாரிப்பதுபோல் நம் நாட்டிலும் தயாரிக்கவேண்டும் என்றும் நேருஜி கூறினார். அந்த சங்கத்தின் ஆதரவில் காட்டப்பட்ட ஜெக்கோஸ்லவேகியா படம் ஒன்றையும் நேருஜி குழந்தைகளோடு குதூகலத்துடன் பார்த்து மகிழ்ந்தார்.

புதிய கல்வித்திட்டம் கைவிடப்பட்டது

ராஜாஜி கொண்டுவந்த புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தை சென்னை சர்க்கார் ரத்து செய்துவிட்டது. கல்வி மந்திரி சுப்பிரமணியம் அவர்கள் இந்த விஷயத்தை சட்ட சபையில் அறிவித்துவிட்டு, "இத்திட்டத்தில் நன்மைகள் எவ்வளவோ இருக்கின்றன. ஜாதி முறையை ஒழிக்கவும், ஏழைக் குழந்தைகள் எல்லோரும் கல்வியறிவு பெறவும் இத்திட்டம் உதவுகின்றது. ஆயினும், பொது மக்களின் ஆதரவு இல்லாததாலே கைவிட வேண்டியது வந்தது" என்று கூறினார்.

கோவையில் டென்னிஸ் பந்து உற்பத்தி

இந்தியாவில் முதல் முதலாக டென்னிஸ் பந்துகளை உற்பத்தி செய்யக் கோயம்புத்தூரில் ஒரு கம்பெனி முன் வந்திருக்கிறது. அங்கு தயாராகும் பந்துகள் சர்வதேச கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவையாயிருக்கும் என்று கூறுகிறார்கள்.

மாணவர்கள் சாலை அமைத்தனர்!

சென்னையிலுள்ள 16 பள்ளிக்கூடங்களைச் சேர்ந்த 300 மாணவர்கள் திருக்கழுக்குன்றத்தில் முகாம் போட்டனர். அங்கிருந்து மூன்று மைல் நீளமுள்ள ஒரு ரஸ்தாவை அவர்கள் 16 நாட்களில் அரும்பாடுபட்டு அமைத்தனர். அந்த மூன்று மைலில் ஒரு மைல் தூரம் ஏரிக்கரையின்மீது போடப்பட்டதாம்!

மலையாளப்படத்தில் மாணவர்கள்!

'பத்திரிகை விற்கும் பையன்' (Newspaper Boy) என்று மலையாளத்தில் ஒரு படம் எடுக்கப் போகிறார்கள். இப்படத்தில் இளம் மாணவர்களே முக்கிய நடிகர்களாக இருப்பார்களாம்.

வல்லவனுக்கு வல்லவன்

கருத்து : ஈசாப் பாடல் : **வள்ளியப்பா**

சிங்க ராஜன் தலைநி மிர்ந்து
செல்லு கின்ற வேளையில்
எங்கி ருந்தோ தேனீ ஒன்று
எதிரே வந்து சேர்ந்தது.

" சின்னஞ் சிறிய ஜந்து வே,நீ
சிறிதும் அச்சம் இன்றியே,
என்றன் எதிரில் வருகிறாயே ?"
என்று சிங்கம் கேட்டது.

" தீர னென்றும், வீர னென்றும்
செப்பித் திரியும் சிங்கமே,
போரில் என்னை வெல்லு தற்குப்
போதும் சக்தி உள்ளதோ ?

கூர்மை யான நகங்க ளோடு
கொடிய பற்கள் இருப்பினும்,
சோர்ந்து கீழே வீழ வைப்பேன்.
சொல்லி விட்டே செய்கிறேன் "

என்று கூறிச் சிங்கம் அதனை
எதிர்த்து மூக்குக் காதினுள்
சென்று மென்மைப் பகுதி யாவும்
நன்கு கொட்ட லானது.

கொட்டும் வலியைத் தாங்கி டாமல்,
கோபம் கொண்ட சிங்கமும்
எட்டுத் திக்கும் கிடுகி டுக்க
இரைச்சல் போட லானது.

தேனீ சிறிதும் அஞ்சி டாமல்
திரும்பத் திரும்பக் கொட்டவே,
மேனி நடுங்கி, மூளை கலங்கி
வீழ்ந்த தந்தச் சிங்கமே.

சிங்க ராஜன் தன்னை வென்ற
செருக்கி னோடு தேனீயும்
அங்கு மிங்கும் மகிழ்ச்சி யோடு
ஆடிப் பாடித் திரிந்தது.

சிறிது நேரம் சென்ற தென்று
செப்பு தற்கு முன்னரே,
அருகில் இருந்த சிலந்தி வலையில்
ஐயோ, சிக்கிக் கொண்டது!

பிழைத்துச் செல்ல எண்ணித் தேனீ
பின்னும் முன்னும் உடலினை
வளைத்துப் பார்த்துத் துடிது டித்து
வாடி வருந்த லானது.

சிலந்தி தனது வலையில் வந்து
சிக்கித் தவித்து மெத்தவும்
கலங்கி நிற்கும் தேனீ தன்னைக்
களித்துத் தின்று தீர்த்தது!

வல்ல வர்க்கும் வல்ல வர்கள்
வைய கத்தில் உண்டென
சொல்லு முன்னர் தெரிந்து கொண்டீர்,
சுலப மாகக் கதையினால்!

★

பிறந்த நாள் பரிசு!

கோபு தயங்கித் தயங்கித் திண்ணைக்கு வந்தான். அவன் தாத்தா திண்ணையின் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தார். கோபு யோசனை செய்தவாறு தாத்தாவிடம் சென்றான்.

தாத்தாவின் பக்கத்தில் போய் அமைதியுடன் உட்கார்ந்தான். பேரப் பிள்ளையைப் பார்த்த தாத்தா, "ஏண்டா கோபு, இன்றைக்கு முழுதும் வீட்டிலேயே உட்கார்ந்திருக்கிறாயே, விளையாடப் போகவில்லையா?" என்று பரிவுடன் கேட்டார்.



"இன்றைக்கென்னவோ..... எனக்கு விளையாடவே பிடிக்கவில்லை தாத்தா. ஆமாம் தாத்தா, உங்களுக்குப் பிறந்த நாள் சமீபத்தில் வருகிறது என்கிறீர்களே, அது எப்பொழுது வருகிறது?" என்று மிகவும் அக்கறையுடன் கேட்டான் கோபு.

"ஏண்டா கண்ணே! என் பிறந்த நாளைப் பற்றி எதற்காக இவ்வளவு அக்கறையுடன் கேட்கிறாய்?" என்று மகிழ்ச்சியுடன் வினவினார் தாத்தா.

"இல்லை தாத்தா! உங்களுக்குப் பிறந்தநாள் பரிசு ஒன்றுவாங்கிக் கொடுக்க உத்தேசித்திருக்கிறேன்..."

"அடா, அப்படியா! என் பிறந்தநாள் இன்னும் மூன்று மாதங் கழித்துத்தான் வருகிறது...என்ன பரிசு கொடுக்கப் போவதாக உத்தேசம்..." என்று பூரிப்புடன் கேட்டார் தாத்தா.

"மூன்று மாதம் கழித்துத்தானே உங்கள் பிறந்த நாள்

வருகிறது? நல்லதாகப் போயிற்று. அதற்குள் கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் சேர்த்து உங்களுக்குப் பிறந்த நாள் பரிசாகப் புதிய மூக்குக் கண்ணுடி ஒன்று வாங்கி வந்து விடுவேன்.'' என்று கூறினுன் கோபு, மிகுந்த மகிழ்ச்சியுடன்.

''ஏண்டா, மூக்குக் கண்ணுடியா வாங்கப் போகிருய்? என்னிடம்தான் ஒரு மூக்குக் கண்ணுடி இருக்கிறதே! வேறு நல்லதாக உபயோகமுள்ளதாகப் பார்த்து ஏதாவது வாங்கிக் கொடடா.'' என்ருர் தாத்தா.

''இல்லே தாத்தா...வந்து... தாத்தா இன்று காலேயில் உங்களிடமுள்ள மூக்குக் கண்ணுடியை...எடுத்தேன்...கையிலிருந்து ... நழுவிக் கீழே விழுந்து...சுக்கு நூருக உடைந்து......!'' என்று தயங்கியபடியே கூறினுன் கோபு.

இவ்வளவு நேரமும் கோபுவின் பேச்சில் மகிழ்ந்திருந்த தாத்தா திடுக்கிட்டார். 'விருட்'டென்று எழுந்தார். ''அடப் பாவி'' என்றுகத்திக்கொண்டே அருகிலிருந்த கைத் தடியை எடுத்தார். ஆனுல், அதற்குள் தான் கோபு பறந்துவிட்டானே பறந்து!

—டி. ஹிதயதுல்லா

★ ★ ★

பழைய அனுபவம்

மாலேயில் பலகாரம் சாப்பிட்டதும், சுந்தரமும், கிட்டுவும் திண்ணேக்கு வந்தார்கள்; அமர்ந்தார்கள். சுந்தரம் ஏதோ பத்திரிகை படிக்க ஆரம்பித்தான். கிட்டு சும்மா காலாட்டிக் கொண்டிருந்தான்.

சிறிது நேரமாயிற்று. கிட்டு என்ன நினைத்துக் கொண்டானே? 'களுக்'கென்று சிரித்து விட்டான். சுந்தரம் சட்டென்று திரும்பிக் கிட்டுவைப் பார்த்தான்,

''ஏண்டா சிரித்தாய்?''

''இல்லே...''

''சிரித்துவிட்டு இல்லே என்று சொல்கிருயே, என்னடா? எதற்குச் சிரித்தாய்?'' என்று கேட்டான், சுந்து.

''ஒன்றுமில்லே...'' என்று கூறிவிட்டு, கிட்டு ஆரம்பித்தான்.

''இன்றுமாலே, எங்கள் பள்ளிக்கூடத்தில் ஒரு தமாஷான சம்பவம்நடந்தது. பள்ளியின் விளேயாட்டு மைதானத்தில், டிரில் வாத்தியார் எங்களுக்கு டிரில் நடத்திக்கொண்டிருந்தார். ஏரோப்ளேன்

விளையாட்டு, தவளைப் பாய்ச்சல், வாத்து நடை எல்லாம் நடந்த பிறகு, நடைப் பயிற்சி நடந்தது. வாத்தியார் 'லெப்ட்—ரைட், லெப்ட்—ரைட்' என்று ராணுவத்தோரணையில் சொல்லிக் கொண்டிருந்தார். நாங்கள், குட்டிச் சிப்பாய்களைப் போல 'டக், டக்'கென்று நடந்து பழகிக் கொண்டிருந்தோம்.

அப்போது, மைதானச் சுவருக்கு அந்தப் பக்கத்திலிருந்த தெருவிலிருந்து 'தொப்' என்ற சப்தத்துடன், 'ஆ!...' என்ற அலறலும் கேட்டது!

இதைக் கேட்டவுடன், எங்களில் ஒரு சிலர் மதில் சுவரில் ஏறி அப்பால் பார்த்தனர். அவர்களைப் பின்பற்றி வாத்தியாரும் சுவர் ஏறிப் பார்த்தார்.

அங்கே—ஒரு பெரிய பால் குடம் கீழேவிழுந்து உடைந்து, தரையெல்லாம் பாலாய்க் கொட்டிக் கிடந்தது. அதனருகே ஒரு தள்ளாத கிழவர் சோகமே உருவாய் நின்று கொண்டிருந்தார். டிரில் வாத்தியார் அக் கிழவரை என்ன வென்று விசாரித்தார்.

“எல்லாம் பழைய அனுபவந்தான். நான் வாலிபனாயிருந்த போது, சிப்பாயாக இருந்தேன். இப்போது, மைதானத்துக்குள்ளேயிருந்து 'லெப்ட்-ரைட்' 'அட்டன்ஷன்!' என்ற சப்தத்தைக் கேட்டவுடன், பழைய பழக்கப்படி, தலையிலிருந்த குடத்தைவிட்டுவிட்டு, என்னையறியாமல் நானும் 'அட்டென்ஷ'னில் நின்றேன். குடம்...பா...ல்...” என்று அந்தக் கிழவர் அசடுவழியக் கூறினார். இதைக் கேட்டு விட்டு நாங்கள் சிரித்த சிரிப்பு இன்னும்கூட என் மனத்திற்குள் மிச்சமிருக்கிறது. அதுதான் சிரித்தேன்” என்று கூறிவிட்டுச் சிரித்தான், கிட்டு. அவனுடன் சுந்தரமும் சிரித்தான்.

—கு. வ. அக்பர்

★ ★ ★

ஆசை தீராதா!

எங்கள் வீட்டில் அப்பொழுதுதான் புதியதாய் டெலிபோன் வைத்தார்கள். எனக்கு அந்த டெலிபோனில் பேசுவதற்கு ஆசையாய் இருந்தது.

அன்று என் அப்பா என்னைக் கூப்பிட்டார். “நான் வெளியூருக்குப் போகிறேன். அதனால் யாராவது போனில் பேசினால் மணி அடிக்கும். உடனே நீ, அவர்கள் யார், எங்கு இருக்கிறார்கள் என்று கேட்டு வைத்துக்கொள்ள வேண்டும்” என்று சொல்லிவிட்டு ஊருக்குப் போய்விட்டார்.

எனக்குத்தான் போனில் பேசுவதற்கு ஆசையாயிற்றே!

அதனால் போனுக்குப் பக்கத்திலேயே போய் உட்கார்ந்து கொண்டேன். நிமிஷங்கள் ஓடின. அப்பொழுதும் யாரும் பேசவில்லை. ஒரு மணி ஓடிவிட்டது. அப்பொழுதும் யாரும் பேசவில்லை. இன்னும் யாரும் பேசமாட்டார்கள் போலிருக்கிறதே என்று அலுத்துக் கொண்டே உட்கார்ந்திருந்தேன்.

அப்பொழுது...

'கிர் கிர் கிர்' என்று மணி அடித்தது. எனக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. போனைக் காதில் வைத்துக்கொண்டேன்.

"யாரது?" என்று அப்பா சொன்ன முதல் கேள்வியைக் கேட்டேன்.

அந்தப் பதில் பின்னால் இருந்து வருவதுபோல் கேட்டது. பேசுவது பின்னாலிருந்து வருவது போல்தான் கேட்கும் போலிருக்கிறது என்று எண்ணிக் கொண்டேன்.

"எங்கிருக்கிறீர்கள்?" என்று அடுத்த கேள்வியைக் கேட்டேன்.

"உங்கள் வீட்டின் வாயிற்படியில் இருக்கிறேன்" என்று திரும்பப் பதில் வந்தது.

"வாயிற்படியிலா!" என்று கேட்டுக் கொண்டே போனைக் கீழே வைத்துவிட்டு வாசல் பக்கம் போய்ப் பார்த்தேன்.

அங்கே சலவைத் தொழிலாளி வடிவேல் நின்று கொண்டிருந்தான்.

கூப்பிடும் மணியை (காலிங் பெல்) அவன் அடித்ததும், போன் மணி தான் அடிக்கிறது என்றுஎண்ணி, போனில் பேசி ஏமாற்றம் அடைந்தது இப்பொழுதுதான் எனக்குப் புரிகிறது.

அட கடவுளே! எனக்கு உண்மையிலேயே போனில் பேசும் சந்தர்ப்பம் விரைவில் கிடைக்காதா? என் ஆசை தீராதா!

—M. P. ராஜன்

புத்தக முடிச்சு

'மலரும் உள்ளம்' வெளியீட்டு விழாவுக்குத் தலைமை வகித்த கல்கி அவர்கள், "மந்திரி சி. சுப்பிரமணியம் அவர்கள் எத்தனையோ அரசியல் முடிச்சுக்களை அவிழ்த்தவர். இந்தப் புத்தகத்திலுள்ள முடிச்சையும் அவிழ்த்து வெளியீட்டு விழாவை ஆரம்பித்து வைக்குமாறு அவரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்" என்றார்.



"கல்கி அவர்கள் கூறியபடி நான் இந்தப் புத்தகத்தில் உள்ள முடிச்சைத்தான் அவிழ்க்கின்றேன். ஆனாலும், இந்தச் செய்தியைச் சில பத்திரிகைகள் கொட்டை எழுத்துக்களில், 'முடிச்சவிழ்க்கும் மந்திரி!' என்று போட்டாலும் போடலாம்" என்று கரகோஷத்திற்கிடையே சிரித்துக் கொண்டே கூறினார் கல்வி மந்திரி!

வம்புத் தம்பி

● செங்கோட்டையில் சினிமாக் கட்டணம் குறைக்கப் பட்டது.

—செய்தி

'கடவுளே! என் அப்பாவை செங்கோட்டைக்கு மாற்ற அருளுங்கள்' என்று பிரார்திக்கிறான், சினிமாப் பைத்தியமான ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தரின் மகன்.

● 12 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள கடிகாரங்களைக் கடத்தியவர் கைது. —சென்னைச் செய்தி

கைதான அவர் நெஞ்சு கடிகாரங்களைவிட வெகு வேகமாக 'டிக்டிக்' கென்று அடித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

● 'கார்டு' விற்கும் இயந்திரம் முக்காலணக் கார்டை அரையணாவுக்கு விற்று விட்டது. —டில்லிச் செய்தி

அடடே! உயிரும், உணர்வுமற்ற அந்த இயந்திரம்கூட ஏழைகளின் கஷ்டத்தை உணர்ந்து விலையைக் குறைத்து விற்றிருக்கிறதே!

● கைவிலங்குடன் தப்பிய கைதி சிறைத் தண்டனை அடைந்தான். —மதுரைச் செய்தி

இப்போது அவனுக்குக் கால் விலங்கும் போட்டப்பட்டிருக்கும் என நினைக்கிறேன்.

● புதிய கல்வித் திட்டம் கைவிடப்பட்டது. இனி இரண்டு நேரமும் பள்ளிக்கூடம் உண்டு.

—சென்னைச் செய்தி

"இரவு நேரத்தில்கூடப் பள்ளிக்கூடம் வைத்துக்கொண்டால் வீட்டில் நிம்மதியாயிருக்கலாமே!" என்கிறார், தொந்தரவு பொறுக்காமல் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பிவரும் ஒரு தந்தை.

● மே தினத்தில் இலவசமாக முகக்ஷவரம் செய்யப்பட்டது. —மதுரைச் செய்தி

'இப்படியே இலவசமாகத் தின்பண்டம் வழங்குதல், இலவசமாக சினிமாப் பார்க்க அனுமதித்தல் முதலியவற்றையும் செய்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!' என்று ஏங்குகிறான், காரியத்திலே கண்ணாயிருக்கும் ஒரு தம்பி.

● தென்னாப்பிரிக்க பார்லிமெண்டில் சலசலப்பு.

—கேப்டவுன் செய்தி

'பனங்காட்டு நரி இந்தச் சலசலப்புக்கு அஞ்சாது' என்று ஒரு பழைய பார்லிமெண்ட் அங்கத்தினர் கூறுவதாகத் தெரிகிறது.

● கட்டாய ராணுவ சேவைக்குப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்ற உத்தரவை எதிர்த்து நூறு சீன மாணவர்கள் போலீசாருடன் சண்டை செய்தனர்.

—சிங்கப்பூர் செய்தி

அடடே! போலீசாருடன் சண்டை போடத் தெரிந்த மாணவர்கள் ராணுவத்தில் இருந்தால் எவ்வளவு உதவியாயிருக்கும்!

—EYE-GOD

புத்தகத் திருவிழா

சுந்தரம் ஸ்ரீநிவாஸன்

கூட்டமான கூட்டம்—சபை
கொள்ளவில்லை கூட்டம்!
பாட்டு நூலைப் போற்ற—நான்
பார்த்ததில்லை கூட்டம்!

இவ்வளவு அழகான கவியை இயற்றியவர் யார் என்று யோசிக்கிறீர்களா? வேறு யார்? அடியேன்தான்! இதை எப்போது, ஏன் இயற்றினேன் என்று கேட்கிறீர்கள்? அந்தக் கதையைச் செல்லுகிறேன்; கேளுங்கள்,

சென்ற மாதம் ஆரும் தேதி மாலை சென்னை அரண்மனைக்காரத் தெரு வழியே நான் போய்க் கொண்டிருந்தேன். செயின்ட் மேரி மண்டபம் என்ற பெரிய மண்டபத்தின் வாசலில் பலர் திரண்டிருந்தார்கள். வாயிற் புறத்தில் தாமரை மலர்களிலேயே தோரணம் கட்டியிருந்தது. 'எவ்வளவு அழகாயிருக்கிறது இந்தத் தோரணம்!' என்று நான் வியந்தேன். அப்போது 'மலரும் உள்ளம் வெளியீட்டு விழா' என்ற அறிக்கை என் கண்ணில் பட்டது.

'மலரும் உள்ளம்' என்பது ஒரு புதிய சினிமாவா அல்லது நாடகமா என்று தெரியாமல் சற்று அருகே சென்று பார்த்தேன். குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா இயற்றிய பாடல் தொகுதிக்குத்தான் அங்

தப் பெயர் இட்டிருக்கிறார்கள் என்று அறிந்தேன்.

'வாருங்கள், உள்ளே வாருங்கள்' என்று யாரோ இனிமையான குரலில் அழைத்தார்கள். திரும்பிப் பார்த்தேன். என்னைத்தான் உள்ளே வரும்படி ஓர் இளைஞர் கூப்பிட்டார்.

வள்ளியப்பாவின் பாடல்களை நான் படித்திருக்கிறேன். ஆனால், அவரைப் பார்த்ததில்லை. அவரைப்பார்க்கவேண்டும் என்ற ஆசையில் தயக்கத்துடன் உள்ளே சென்றேன்.

அங்கே இன்னும் இரண்டு மூன்று பேர் என்னை வரவேற்றார்கள். ஒருவர் மணக்கும் சந்தனம் கொடுத்தார்; ஒருவர் இனிக்கும் கற்கண்டு கொடுத்தார்.

இன்னொருவர் என் கையில் ஒரு சிறு புத்தகத்தைத் திணித்தார். அது என்ன என்று நினைக்கிறீர்கள்? 'மலரும் உள்ளம்' என்று அதன் அட்டையில் எழுதியிருந்தது.

என்னை வரவேற்றவர்கள் எல்லோரும் பூவண்ணன், ரேவதி, தெய்வசிகாமணி போன்ற சிறந்த குழந்தை எழுத்தாளர்கள் என்பதைப் பிறகுதான் தெரிந்து கொண்டேன்.

"இவ்வளவு சிறிய புத்தகத்துக்கா இத்தனை ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்?" என்று நினைத்துக்கொண்டே உள்ளே போய் உட்கார்ந்தேன். அந்தப் புத்தகத்தைப் பிரித்துப் பார்த்தேன்.

நான் நினைத்தது தவறு என்பது அப்போதுதான் தெரிந்தது. என்னிடம் இலவசமாகக் கொடுக்கப்பட்டது ஒரு 'சாம்பிள்' புத்தகம்தான் என்பதை அறிந்தேன். மற்றும் கீழ்க்கண்ட விஷயங்களை அந்த 'சாம்பிளி'லிருந்து அறிந்தேன்:

மலரும் உள்ளம் என்பது குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா சென்ற பன்னிரண்டு வருஷங்களில் இயற்றிய பாடல்களின் ஒரு பகுதி.

உயர்தரக் காகிதத்தில், உயர்ந்த முறையில் அச்சிடப்

—— ராஜாஜி ——

திரு. அழ. வள்ளியப்பா,

ஆசீர்வாதம்.

'மலரும் உள்ளம்' பார்த்து மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். அன்புடன் புஸ்தகம் அனுப்பியதற்கு நன்றி.

திருவிழாவுக்கு நான் வரவில்லை யென்று வருத்தப்பட வேண்டாம். பல பாடல்களைப் படித்து அனுப வித்துவிட்டேன். மிக நல்ல பிரசுரம். தேசிகவிநாயகம் பிள்ளையவர்களே வாழ்த்துப் பாடிவிட்ட பிறகு நானும் சொல்லப் பார்ப்பது அதிகப் பிரசங்கம். பதவுரை, விசேஷ உரை வேண்டாத ஒரு தமிழ் நூல் வெளியானது ஒரு பெரிய விசேஷம். புஸ்தகம் சரியே. ஆனால், வாத்தியார்களுக்கும், பெற்றோர்களுக்கும் பாடத் தெரிய வேண்டும்.

—இராஜகோபாலாச்சாரி

பட்ட 240 பக்கங்களும், 200 படங்களும் கொண்டது அப் புத்தகம். அதில் ஏழு பகுதிகள் உள்ளன.

குழந்தைகளுக்கு முதல் முதலாகப் பெரிய அளவில் வெளி வரும் தமிழ்க் கவிதைத் தொகுதி இதுவே.

இப்படி யெல்லாம் சில விவரங்களோடு, 'மலரும் உள்ளம்' புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒவ்வொரு பாட்டு வீதம் ஏழு பாடல்களை அதில் எடுத்துப் போட்டிருந்தார்கள். கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்களின் வாழ்த்தும், சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப் பிள்ளை அவர்களின் முன்னுரையும் அதில் காணப்பட்டன.

* *

விழா மேடையைப் பார்த்தேன். அங்கும் பல தாமரை மொட்டுக்கள் அலங்காரமாக வைக்கப்பட்டிருந்தன. அந்த மொட்டுக்கள் சிறிதுசிறிதாக மலர்ந்து கொண்டிருப்பதாக எனக்குத் தோன்றிற்று.

மணி ஆறு அடித்தது. கல்கி ஆசிரியர் **ரா. கிருஷ்ணமூர்த்தி** அவர்கள் தலைமை வகிக்க, விழா தொடங்கியது.

சின்னஞ் சிறு பையன் ஒருவன் மேடைமீது ஏறினான்.

வெள்ளைத் தாமரைப் பூவினிலே
விளங்கும் தாயே, வணங்குகிறேன்.
கள்ளம கபடம் இல்லாமல்
கற்று நன்மை புரிந்திடவும்,
உள்ளும் புறமும் தூய்மையுடன்
உலகில் வாழ்ந்தே உயர்ந்திடவும்
அள்ளி அள்ளிக் கலைகளையே
அளிப்பாய், அறிவை வளர்ப்
[பாயே!

என்ற சரஸ்வதி வணக்கத்தைத் தன் மழலை மொழியில் அழகாகப் பாடினான்.

ஏற்கனவே வந்து நெருக்கமாக உட்கார்ந்திருந்தவர்களையும், இடமில்லாமல் கால் வலிக்க நின்றவர்களையும் பார்த்து வரவேற்புக் கூறினர், கா. அ. செல்லப்பன். அவர் தாம் மலரும் உள்ளம் புத்தகத்தை வெளியிட்ட பாரி நிலைய அதிபர் என்று அறிந்து கொண்டேன்.

ராஜாஜி, ஒரிஸா கவர்னர் குமாரசாமி ராஜா, நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை, இன்னும் ஆதீனத் தலைவர்கள், தமிழறிஞர்கள், சங்கங்கள், பதிப்பகங்கள், தம்பி தங்கைகள் முதலியோரிடமிருந்து பல வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

தலைவர் கல்கி தமது முன்னுரையிலே "ஒரு பாட்டுப் புத்தக வெளியீட்டு விழாவுக்கு இத்தனை ரசிகர்கள் கொண்ட பெரும் கூட்டம் கூடும் என்று நான் நினைக்கவே இல்லை!" என்று வியப்புடன் கூறினர். புத்தக வெளியீட்டைத் துவக்கிவைக்கும்படி கல்வி மந்திரி கனம் சி. சுப்பிரமணியம் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

கல்விமந்திரி கனம் சி. சுப்பிரமணியம் எழுந்தார். அவர் எதிரே மேஜைமேல் ஒரு பொட்டலம் இருந்தது. அதன் மேலிருந்த அழகிய பட்டு நாடாவை அவிழ்த்தார். சல்லாக் காகித உறையை நீக்கினர். உள்ளே இருந்தது அழகான ஒரு

புத்தகம் எங்கே?

'மலரும் உள்ளம்' புத்தகத்தை நான் என் மேஜை மேல் வைத்ததும், எங்கள் வீட்டுக் குழந்தைகள் அதைத் தூக்கிக் கொண்டுபோய்ப் போட்டி போட்டுப் படிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

அந்தக் காட்சியைப் பார்த்ததும் எனக்கு என்னவோ போல் இருந்தது. பாட்டு எழுதுகிற ஒருவன் வீட்டுக் குழந்தைகள் மற்றொருவர் எழுதிய பாடல்களை ஆசை ஆசையாகப் படிப்பதென்றால் அவனுக்கு எப்படியிருக்கும்? அப்படித்தான் எனக்கும் இருந்தது. நான் எழுதிய பாட்டுப் புத்தகம் என் மேஜை மேல் எத்தனையோ நாட்கள் இருந்திருக்கின்றது. என் குழந்தைகள் அதை என்றாவது தொடவேண்டுமே! என்றாவது ஒரு நாள் என் புத்தகத்தைக் காணமல் குழந்தைகளிடம் கேட்டால், "ஏன் அப்பா உன் புத்தகத்தைத் தொடுகிறோம்?" என்று சொல்லிவிடுகிறார்கள்! – இப்படி வேடிக்கையாகக் கூறினர், **கொத்தமங்கலம் சுப்பு.**

ஒரிஸா கவர்னர்

அன்பர் வள்ளியப்பாவிற்கு,

'மலரும் உள்ளம்' என்ற புத்தகத்தின் வெளியீட்டு விழா பற்றி அறிய மெத்த சந்தோஷம். அதைப் பற்றி 'பூஞ்சோலை'யில் தோன்றியுள்ள அறிக்கை யொன்றையும் நான் படித்துள்ளேன்.

தாங்கள் இயற்றியுள்ள குழந்தைப் பாடல் தொகுதி, நம்முடைய சிறுவர்களுக்கும், சிறுமியருக்கும் மெத்த மகிழ்ச்சியைப் பயக்குமென்பதில் சிறிதும் ஐயமில்லை......

—பி. எஸ். குமாரசாமிராஜா

புத்தகம். அந்தப் புத்தகத்தை ஒரு குழந்தையிடம் அன்போடு அளித்தார்.

அப்போது என்ன கரகோஷம்! எவ்வளவு சந்தோஷ ஆரவாரம்!

சமீபத்தில் காலஞ்சென்ற ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் சொல்வார், 'நல்ல தமிழ்க் கவிதை ஒன்று கிடைத்து விட்டால் அதற்காக ஒருவிழாக்கொண்டாடலாமே!' என்று.அருமையான 135 குழந்தைப் பாடல்கள் வெளிவந்து விட்டால் எவ்வளவு பெரிய விழாக் கொண்டாட வேண்டும்!—இவ்வாறு நான் அப்போது சிந்திக்கத் தொடங்கினேன்.

பாட்டுப் பாடுவது ஒரு தொத்து வியாதி போலிருக்கிறது. அப்போது என் உள்ளத்திலும் சில கவிதைகள் எழுந்து விடும் போல் தோன்றியது. அப்போதே என் கையில் பேனவும்,காகிதமும் இருந்திருந்தால் எத்தனை பாடல்கள் இயற்றி யிருப்பேனே தெரியாது...!

மலரும் உள்ளம் வெளியாகி விட்டது!

"மலரும் உள்ளம்! எவ்வளவு பொருத்தமான பெயர்!" என்று சொல்லிச் சொல்லி மகிழ்ந்தார் மந்திரி சுப்பிரமணியம். மேலும் அவர் கூறினர்:

"பகல் முழுதும் சட்டசபையில் வேலைசெய்து களைத்துப் போய் நான் இங்கே வந்தேன். இங்கே உள்ள மலர்ந்த முகங்களைப் பார்த்ததும் என் களைப்பெல்லாம் போய்விட்டது. வெயிலிலிருந்து நிழலுக்கு வந்து தென்றலை அனுபவிப்பது போல் இருக்கிறது. இதற்கு நான் நன்றி தெரிவிக்கிறேன்.

"மலரும் உள்ளம் ஒரு சிறந்த குழந்தைப் புத்தகம். குழந்தைகள் தாமே விரும்பிப் படிக்கும்படி அமைந்திருக்கிறது இந்நூல். இதுதான் சிறந்த குழந்தைப் புத்தகத்தின் லட்சணம். இம்மாதிரிப் பல புத்தகங்கள் வெளிவரவேண்டும். வள்ளியப்பாவைப் போல் பல வள்ளியப்பாக்கள் எழுத முன் வரவேண்டும்.

"விலையுயர்ந்த விளையாட்டுச் சாமான்களையும், பட்டு ஆடைகளையும் பலர் குழந்தைகளுக்கு நிறைய வாங்கிக் கொடுக்கிறார்கள். அவற்றைவிடச்சிறந்த பரிசு இந்த நூல். படிக்கத் தெரிந்த குழந்தைகள் அவைகளை அனுபவிப்பதைவிட இது போன்ற புத்தகத்தை அதிகம் அனுபவித்து மகிழ்வார்கள்.

"குழந்தைச் செல்வம்தான் நமது சிறந்த செல்வம். நல்ல சூழ்நிலையில், நல்ல பண்பாட்டுடன் வளர்ந்த குழந்தைகள் இருந்துவிட்டால் நமக்கு வேறு செல்வமே தேவையில்லை. குழந்தைகள் நல்ல பண்பாட்டோடு வளர இம்மாதிரிப் புத்தகங்கள் உதவும். வள்ளியப்பாவின் பாடல்கள் நன்றாயிருக்கின்றன என்று பேசிப் பாராட்டினால் போதாது. நமது பாராட்டைத் தெரிவிக்கச் சரியான வழி புத்தகத்தை விலை கொடுத்து வாங்குவதே"

மந்திரியின் பேச்சுக்குப் பிறகு கொத்தமங்கலம் சுப்புவும், லீலாவதிராமசுப்பிரமணியமும், சோ. லெ. இலக்குமணச் செட்டியாரும், சின்ன அண்ணாமலையும் பேசினார்கள். வள்ளியப்பாவின் பாடல் அழகையும், அவர் குழந்தைகளுக்குப் புரிந்து வரும் தொண்டையும் பாராட்டினார்கள்.

"பாரதி பரம்பரையில் வந்தவர் வள்ளியப்பா" என்று சுப்பு குறிப்பிட்டார். "தமிழையும் தமிழ்க் கலைகளையும் வளர்த்த செட்டி நாட்டில் பிறந்து

கெஞ்சிக் கேட்டேன்

'மலரும் உள்ளம்' விழாவுக்கு என்னை அழைத்தவர்கள் முதலில் ஒருபிரதியை என்னிடம் கொடுத்துப் படித்துப் பார்க்கச் சொன்னார்கள். நான் படித்துப் பார்ப்பதற்கு முன்னால் என் பெண் அதை எடுத்துக்கொண்டு போய் விட்டாள்.

சிலநாள் கழித்து, நான் இன்னொரு பிரதியைப் பெற்றுக் கொண்டேன். அதையும் என் இரண்டாவது பெண் பிடுங்கிக் கொண்டு போய் விட்டாள். நான் புத்தகத்தைப் படித்துப் பார்க்காமல் எப்படி இந்த விழாவுக்கு வருவது? எப்படிப் பேசுவது? கடைசியில் மெதுவாக என் குழந்தைகளிடம் கெஞ்சிக் கேட்டு, 'மலரும் உள்ளத்'தை வாங்கிப் படித்த பிறகே இங்கு வந்தேன்.

—இப்படிக் கல்வி மந்திரி கனம் **சி. சுப்பிரமணியம்** அவர்கள் கூறினார்.

நாமக்கல் கவிஞர்

அன்பார்ந்த திரு. அழ. வள்ளியப்பா அவர்களுக்கு,

நலம்.

தங்களுடைய குழந்தைப் பாடல்கள் 'மலரும் உள்ளம்' என்ற நூலுக்கு வெளியீட்டு விழா நடப்பது பற்றி மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். தங்கள் கவித்திறமை நாளுக்கு நாள் வளர்ந்தோங்கிப் புகழ் பெருக இறைவனை வணங்கி மனமார வேண்டுகின்றேன்.

—வெ. இராமலிங்கன்

* * *

வையாபுரிப் பிள்ளை

குழந்தை உள்ளம் ஒரு சிறிய தடாகம். அதிலுள்ள நீர் தூயதாய், தெளிந்ததாய், இனியதாய் இருப்பது. அதற்கு அழகும், ஒளியும் தருவதாய் விளங்கும் நறிய பல நிற மலர்களை 'மலரும் உள்ளம்' என்ற இச்செய்யுள் - நூலில் சிறுவர்களும் முதியோர்களும் நுகர்ந்து அனுபவிக்கலாம். இத்தகைய இனிய பாடல்கள் பல இயற்றித் தமிழ் நாட்டுக்குத் தொண்டு புரியும்படி அழ. வள்ளியப்பா அவர்களுக்கு இறைவன் அருள் புரிக.

மலரும் உள்ளம் வாழ்க!
வள்ளியப்பா வாழ்க!

—எஸ். வையாபுரிப் பிள்ளை.
திருவிதாங்கூர் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்.

வளர்ந்த வள்ளியப்பா, அழகிய இனிய கவிதைகள் இயற்றுவதில் என்ன வியப்பு? 'மலரும் உள்ளம்' என்பது புத்தகத்தின் பெயர். புத்தகத்தைப் படித்தால், உள்ளம் மலரும் என்பது என் அனுபவம்; மீண்டும் குழந்தை உள்ளம் பெற்று விடுவோம். முன்பெல்லாம் கவிகளை ஆதரிக்க ராஜாக்கள் இருந்தனர்; இப்போது எல்லாரும் இந்நாட்டு மன்னர். கவிஞர்களை நாம் தான் ஆதரித்து அவர்களின் புத்தகங்களை வாங்கிப் படித்துப் பாராட்ட வேண்டும்." என்று சுப்பு பேசியதோடு கவிமணியின் அற்புதமான வாழ்த்துப் பாடல் ஒன்றையும் காது குளிரப் பாடிக் காட்டினர்.

நீலாவதி ராமசுப்பிரமணியம் கூறினர்: "வள்ளியப்பா, எளிமையாய், இனிமையாய்ப் பாடுவதில் வல்லவர். என் கடைசிக் குழந்தையின் மனத்தில் அவர் பாடல்கள் நன்கு பதிந்துவிட்டன. சந்தர்ப்பம் ஏற்பட்டபோதெல்லாம் அவன் அவற்றைச் சொல்லிக் காட்டுகின்றான். அரிய

கருத்துக்களைச் சுருக்கமாகத் தெரிவிக்கிறது குறள். வள்ளியப்பா சில இடங்களில் மேலான கருத்துக்களைக் குறளைவிடச் சுருக்கமாயும் எளிமையாயும் பாடி விடுகிறார். 'நாவிற்கு அழகு இன்சொல்' என்பது அத்தகைய இடங்களில் ஒன்று'' என்று அவர் பாராட்டினார். சில பாடல்களை எடுத்துக் காட்டி அவற்றின் சிறப்பையும் உணர்த்தினார்.

சென்ற பத்து வருஷ காலத்தில் தமிழில் குழந்தை இலக்கியம் வளர்ந்ததைப் பற்றிப் பேசினார் சோம. லெ. "வள்ளியப்பா குழந்தைகளுக்காகவே தம்மை அர்ப்பணம் செய்து கொண்டிருக்கிறார். அவர் இயற்கையான எளிய நடையில் எழுதிக் குழந்தை உள்ளங்களைக் கவர்ந்து விடுகிறார். அவர் பாடல்களில் அன்பு, நல்லெண்ணம் போன்ற சிறந்த பண்புகளைத்தான் காண முடியும்'' என்றார் அவர்.

பிறகு சின்ன அண்ணாமலை பேசினார். ''குழந்தைகளுக்கு எழுதுவது எவ்வளவு கஷ்டம், ஒரு நல்ல நூலை வெளியிட்டு விற்பனை செய்வது எவ்வளவு சிரமமான காரியம் என்றெல்லாம் எனக்கு அனுபவத்தால் நன்கு தெரியும். இந்த நூலை எல்லாரும் வாங்கி இந்த வெளியீட்டை வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்று நான் வேண்டுகிறேன்'' என்று கூறினார். புத்தகத்திலிருந்து 'இரகசியம்' என்ற பாடலையும் கணீரென்று பாடிக் காட்டினார் சின்ன அண்ணாமலை.

இத்தனை பேரும் வள்ளியப்பாவையும், அவர் பாடல்களையும் பாராட்டினார்களே தவிர, வள்ளியப்பா என்பவர் யார் என்பதை என்னால் கண்டு பிடிக்கமுடியவில்லை. மேடையிலிருந்த பலரையும் சுட்டிக் காட்டி, 'இவர்தான் வள்ளியப்பாவாக இருக்க வேண்டும்' என்றும், 'இல்லை, இருக்காது, அதோ அவர்தான்!' என்றும் பலவாறாக நானும் என் பக்கத்திலிருந்த ஒருவரும் விவாதித்துக் கொண்டிருந்தோம்.

கடைசியில் எங்கள் சந்தேகத்தைத் தீர்த்து வைக்க வள்ளியப்பாவே 'மைக்'கின் முன் வந்து நின்று பேசத் தொடங்கினார். இவ்வளவு நேரம் இவர் எங்கே ஒளிந்து கொண்டிருந்தார் என்று நான் ஆச்சரியப்பட்டேன்!

பாராட்டுரைகளுக்கு வள்ளியப்பா அடக்கமாக, ஆனால் தகுந்த முறையில், நன்றி செலுத்தினார். தாம் பன்னிரண்டு ஆண்டுகளில் எழுதிய பாடல்களின் ஒரு தொகுதியே இந்த நூல் என்பதைத் தெரிவித்தார். தமது இருபத்து மூன்று பாடல்களை **மலரும் உள்ளம்** என்ற இதே பெயரில் பத்து வருஷங்களுக்கு முன் வெளியிட்டதைப் பற்றிக் கூறினார்.

''**ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்** என்பது குறள். இந்தப் புத்தகம் என் குழந்தையைப்

போன்றது. இதை அறிஞர்கள் இன்று பாராட்டியபோது என் மனமும் அந்தத் தாயின் மனத்தைப் போலவே இருந்தது. கல்விச் செல்வம், பொருட்செல்வம், கேள்விச் செல்வம் என்றெல்லாம் சொல்லுவார்கள். அச்செல்வங்களெல்லாம் என்னிடம் அதிகமில்லாவிட்டாலும், 'நட்புச் செல்வம்' என்பது நிறைய இருக்கிறது. குழந்தைகளுக்குப் பாட்டு எழுத வேண்டும் என்ற ஆசை விதை என் உள்ளத்தின் ஒரு மூலையிலே முடங்கிக் கிடந்தது. நண்பர்கள் அளித்த ஊக்கத்தாலும், உற்சாகத்தாலும் அது மெதுவாக முளைக்க ஆரம்பித்தது. பின்னர் அது செடியாகி, மரமாகி இன்று மலர்தர ஆரம்பித்திருக்கிறது. இனி, அது காயாகி நல்ல கனியாகிப் பாலருக்கும் பலருக்கும் உதவ வேண்டும். அதற்கு ஆண்டவன் அருளும், பெரியோர்களின் ஆசியும் வேண்டும்'' என்று முடித்தார்.

விழாத் தலைவர் 'கல்கி' தமது முடிவுரையில் ''வள்ளியப்பாவின் பாடல்களை ஐந்தாறு வருஷங்களாகவே பார்த்து வருகிறேன். அவை மிகவும் நன்றாகக் குழந்தைகள் உள்ளத்தைக் கவரும் வகையில் இருக்கின்றன. இவ்வளவு சிறந்த புத்தகத்தைக் குழந்தையுள்ள ஒவ்வொரு வீட்டிலும் வாங்கி வைக்க வேண்டும். ஒரு முறை நாம் குடும்பத்தோடு சினிமாவுக்குப் போய் வந்தாலே ஐந்து ரூபாய்க்குக் குறையாமல் செலவாகிறது. ஆனால், ஐந்து ரூபாய் கொடுத்து 'மலரும் உள்ளம்' புத்தகம் வாங்கி விட்டால் குழந்தைகள் அதைப் பல முறை படித்து இன்பம் அடைவார்கள்'' என்று கூறினர்.

சொற்பொழிவுகள் எல்லாம் முடிந்த பிறகு, ஓர் அழகான கதம்ப நிகழ்ச்சியைக் கண்டு களித்தோம். அதைத் தயாரித்தவர் சென்னைக் குழந்தைகள் தோட்டப் பள்ளிக்கூட ஆசிரியை எஸ்.சாந்தலக்ஷ்மி என்று அறிந்தேன்.

கதம்ப நிகழ்ச்சியில் சுமார் நாற்பது குழந்தைகள் பங்கெடுத்துக் கொண்டனர். வள்ளியப்பாவின் பல பாடல்களை அவர்கள் அபிநயத்துடன் ஆடிப் பாடி மகிழ்வித்தனர். 'பட்டணம் பெரும் பட்டணம்' 'வெண்ணெய் திருடிய கண்ணன்' 'ஆரம்பப் பள்ளியும் கல்லூரியும்' முதலிய பாடல்கள் இன்னும் என் காதில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

'அழகிய குழந்தைக் கவிபாடும்
அழ. வ. வாழ்க வாழ்கவே!'

என்று பாடிக் கொண்டே வீடுவந்து சேர்ந்தேன் நான்! வெறும் கையுடனா வந்தேன்? இல்லை. மண்டப வாயிலில் விற்பனைக்குத் தயாராயிருந்த 'மலரும் உள்ளம்' பிரதி ஒன்றை ஐந்து ரூபாய் கொடுத்து வாங்கிக்கொண்டு தான் வந்தேன்!

o

‘மலரும் உள்ளம்’ வாழ்த்துரைகள்

[‘மலரும் உள்ளம்’ வெளியீட்டு விழாவுக்கு வாழ்த்துரைகள் அனுப்பியிருந்தனர் பலர். அறிஞர்களின் வாழ்த்துரைகளில் சில வற்றைக் கீழே காணலாம். —ஆசிரியர்]

‘பாரி நிலையம்’ தக்க தமிழ்ப் புத்தகங்களைப் பல்லாண்டு களாக வெளியிட்டு வரும் சிறந்த இலக்கிய நிலையம். கவிஞர் அழ. வள்ளியப்பாவின் ‘மலரும் உள்ளம்’ இளைஞர்க் கேற்ற இனிய நூல்......செந் தமிழ்ச் சொக்கர் திருவருளால் யாவும் இனிதே நிறைவெய்துக.

—ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
தருமபுர ஆதீனம்

தங்கள் கவியுள்ளம் பொங் கிப் பொலிய எல்லாம்வல்ல காளத்தியானைச் சிந்திக்கின் றேன். எதிர்காலச் சிற்பிகளான குழந்தைகளின் உள்ளம் விரி வடையத் தாங்கள் இயற்றும் தொண்டு மகத்தானது.

—குன்றக்குடி அடிகளார்

குழந்தைக் கவிஞராகிய தங் கள் முயற்சிகளைப் பெரிதும் பாராட்டுகிறேன். ‘மலரும் உள்ளம்’ தமிழ்க் குழந்தை களின் உள்ளம் மலர்ச்சி பெறுவதற்கு விரைந்து உதவ வேண்டும் என்று இறைவனை இறைஞ்சுகின்றேன்.

—பி. ஸ்ரீ. ஆச்சார்யா
ஆனந்த விகடன்

ஆசிரியர் அழ. வள்ளியப்பா அவர்களின் கவிதை வன்மை சிறப்புற்று வளர்க. பாரி நிலை யம் இத்தகு சிறந்த நூல்களை வெளியிட்டு வளம் பெறுக.

—சோ. முருகப்பா
கம்பர் பதிப்பகம், அமராவதி புதூர்

குழந்தைகளுக்குப் பூச் சாண்டி காட்டப் பழகியிருக் கும் தமிழகத்தில் குழந்தை யுள்ளத்தின் தனிக் கவிஞராக வள்ளியப்பா அவர்கள் அற் புதங்களை சாதித்து வருகிறார்.

—திருலோக சீதாராம்
ஆசிரியர், ‘சிவாஜி’, திருச்சி

குழந்தைக் கவிஞர் வள்ளி யப்பா அவர்கள், ‘மலரும் உள் ளம்’ என்ற குழந்தைப் பாடல் தொகுதியை இயற்றினதற்கு அவருக்குத் தமிழகம் மிகமிகக் கடமைப்பட்டுள்ளது.

—ஜி. ராமமூர்த்தி
செயலாளர், பாரதி தமிழ்ச் சங்கம், கல்கத்தா

குழந்தைகளுக்கு என்று கிண்கிணி ஒலியுடன் தீஞ் சுவைப் பாடல்களை இயற்றி வரும் திரு அழ. வள்ளியப்பா வின் ‘மலரும் உள்ளம்’ மிகச் சிறப்பாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அவருடைய இந்தத் தொகுதி தமிழ் நாட் டின் இல்லம் தோறும் என் றென்றும் ஒலித்துக்கொண் டிருக்கும் என்பதும் நிச்சயம்.

—ஆர்வி.
ஆசிரியர், ‘கண்ணன்’

நன்றி

'மலரும் உள்ளம்' வெளியீட்டு விழாவுக்கு வாழ்த்துக்கள் அனுப்பி ஊக்கமளித்த அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி.

—அழ. வள்ளியப்பா

இன்றையக் குழந்தைகள் நாளை நமது நாட்டின் தலைவர்கள். அவர்கள் பலனடைய அவர்கள் அறிவு வளர நண்பர் வள்ளியப்பாவின் கவிதா சக்தி துணை புரிகிறது. கவிஞர் வள்ளியப்பாவையும், அவருடைய கவிதைப் பொக்கிஷத்தைக் குழந்தை உலகுக்கு அளிக்கும் பாரி நிலையத்தாரையும் பாராட்டுகிறேன்—வாழ்த்துகிறேன்.

—ப. ந. தியாகராஜன்
பொதுச் செயலாளர், கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்கம்

மலரும் உள்ளங்களை உய்விக்கக் கவிஞர் செய்துள்ள அரும் கவிதைகளை வெளியிட்டதற்காகப் பாரி நிலையத்தாருக்குக் குழந்தை உலகம் என்றும் நன்றி செலுத்தும்.

—கி. சந்திரசேகரன்
மயிலாப்பூர்

குழந்தைக் கவிஞர் வள்ளியப்பாவின் குழந்தைப் பாடல்களைப் பெரியோரும் படித்து இன்புறுவர் என்பது என் எண்ணம். கவிஞருக்கு என் உளமார்ந்த பாராட்டு.

—மயிலை சிவமுத்து
தலைவர், மாணவர் மன்றம், சென்னை - 1

துப்பாக்கியும் முகமூடியும் தரித்த வீர சாகசக் கதாநாயகர்களைக் கொண்டு 'குழந்தை இலக்கியம்' என்ற பெயரால் ஒருசிலர் குழந்தைகளின் மனத்தையும், உணர்வையும் கெடுத்துவரும் இந்நாளில், நண்பர் அழ. வள்ளியப்பா அடக்கமாக இருந்து குழந்தைகளுக்குப் பயன்படும் எளிய இனிய கவிதைகளைப் படைத்து வருகிறார். அவரது முயற்சியை நல்ல முறையில் பாராட்ட வேண்டியது அவசியமே.

—ரகுநாதன், **திருநெல்வேலி டவுன்**

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவைப் பெருமைப்படுத்துவது தமிழ்நாட்டுக் குழந்தைகளுக்குப் புரியும் அரிய சேவையாகும்.

—தணிகை உலகநாதன்
அமைச்சர், சென்னை மாணவர் மன்றம்

குழந்தை உள்ளங்களை மலர்விப்பதில் வள்ளியப்பாவுக்கு நிகர் அவரேதாம்.

—அகிலன், **திருச்சி**

பாட்டுக்கொரு புலவன் பாரதி பிறந்த தமிழ் நாட்டில், குழந்தைகளின் பாட்டுக்கொரு புலவராக வள்ளியப்பா பிறந்திருப்பது மிகவும் பாராட்டத் தக்கது.

—நெற்குப்பை
ராமசுப்பிரமணியன்

பாலர் கவி அரங்கம்

கலைவாணி

அல்லல் நீக்கும் அறிவைத்
[தருவாள்.
அருங்கலை யாவும் ஒளிரச் செய்
[வாள்.
சொல்லை இனிமை பயக்கச் செய்
[வாள்.
சுவேதத் தாமரை மலர்மிசை
[இருப்பாள்.
முல்லை நகையை அணியாய் உடை
[யாள்.
முகத்திரு கண்ணும் கல்வியை
[அளிப்பாள்.
எல்லை இல்லா இன்னிசை பொழி
[வாள்.
எளியோன் எனக்குத் துணையாய்
[நிற்பாள்.
மண்ணும் விண்ணும் உயரச்
[செய்வாள்.
மக்கள் தமக்கு மதியைத்
[தருவாள்.
பெண்ணும் உயர்வே எனவுரைத்
[திடுவாள்.
பேரன் புடையாள், அருள்திரு
[முகத்தாள்.
பண்ணும் பொருளும் எனக்களித்
[தருள்வாள்.
பாக்கள் பற்பல உதித்திடச்
[செய்வாள்.
எண்ணும் எழுத்தும் ஏனைய
[அனைத்தும்
என்பால் அருள்வாள், என்தாய்
[வாணியே!

—ரா. லக்ஷ்மி, கல்கத்தா-26

புடலங்காய்

பாம்பு போன்ற புடலங்காய்.
பச்சை நிறப் புடலங்காய்.
தாம்புக் கயிற்றைப் போலவே
தடித்திருக்கும் புடலங்காய்.

பச்சைக் கொடியில் தொங்கிடும்.
பந்தலின் கீழ் ஆடிடும்.
இச்சை யுடன் தங்கையதை
இங்கு மங்கும் ஆட்டுவாள்.

அம்மா தண்ணீர் ஊற்றியதன்
அழகைக் கண்டு மகிழுவாள்.

சும்மா அப்பா சுற்றியதில்
சொட்டை கண்டு சொக்குவார்.

இத்தனையும் பார்க்க வேண்டின்
எங்கள் வீட்டின் பின்புறம்
சத்த மேதும் செய்திடாமல்,
சற்றே வந்து நில்லுங்கள்!

—அ. அப்துல் முத்தலிபு, சென்னை-26



பட்டம்

பறக்குது, பட்டம் பறக்குது.
பாய்ந்து வானில் பறக்குது.
இறக்கை யுடைய பறவைபோல்
எங்கள் பட்டம் பறக்குது.

சுற்றிச் சுற்றிப் பறக்குது.
சுழன்று சுழன்று பறக்குது.
பற்றிக் கயிற்றை இழுத்திடின்,
பாய்ந்து கீழே இறங்குது.

தலையை ஆட்டிப் பறக்குது.
'தம்பி வா'வென் றழைக்குது.
இலைபோல் பச்சை நிறத்துடன்
எங்கள் பட்டம் பறக்குது.

தெருவில் பட்டம் பறப்பதைத்
திரண்டு காண வாருங்கள்.
இருட்டி விட்டால் உடனேநான்
இறக்கி விடுவேன், அதனையே!

—நா. சந்திரன் சென்னை-5

அவர்தான்...

ஒருவரின் வருகையை ஆவலுடன்
ஊரார் பலரும் எதிர்பார்ப்பார்.
வருவார் எப்போ தெனஎண்ணி
வாசலில் காத்து நின்றிருப்பார்.

பிணியால் வாடும் உறவினரின்
பிள்ளையின் நலத்தை அறிவிப்
[பார்.
தினமும் இதுபோல் பலசேதி
தெரிவித் தவரும் சென்றிடுவார்.

கற்பனை செய்தே கதைஎழுதிக்
காசைக் கரைத்தே அனுப்பு
[கிறோம்.
நிற்போம் முடிவை அறிந்திடவே,
நிதமும் அவரை எதிர்நோக்கி.

இத்தகை சேதிகள் கொடுத்துதவி
எத்தனை நன்மைகள் செய்
[கின்றார்?
அத்தகை மனிதர் எவரென்று
அறிவீர்; அவர்தான் தபால்காரர்!

—V. H. கிருஷ்ணன், சென்னை-7

கடற்கரை

இன்பக் காற்றை நுகர்ந்திடவே
இருவரும் கடற்கரை செல்வோ
[மடா.
துன்பம் கவலைகள் நீங்குமடா.
சோர்வுமே நம்மைவிட் டோடு
[மடா.
சர்க்கரை போன்ற மணலினிலே
சந்தோஷ மாக அமர்வோமடா.
அக்கரை நோக்கியே கப்பல்
[செல்லும் அதை
அகமகிழ் வோடுநாம் காண்போ
[மடா

—'எச்கேஜி', சென்னை-7

காசியின் கவலையைத் தீர்த்ததும் அந்தப் பொம்மைதான்; கண்ணனுக்குக் கஷ்டத்தைக் கொடுத்ததும் அந்தப் பொம்மைதான்!

கண்ணன் தந்த பொம்மை

கே.கே.கோமளா

'பளீர்! பளீர்!' என்ற ஓசை கேட்டது. அதைத் தொடர்ந்து "ஐயோ! அப்பா!" என்ற அழுகைக் குரலும் எழுந்தது.

கடையில் மும்முரமாக ஒரு 'செலூலாயிட்' பொம்மையின் காலை ஒட்டவைத்துக்கொண்டிருந்த கண்ணன், இச்சப்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். கடைக்குச் சிறிது தூரத்தில் சுமார் நான்கு வயது மதிக்கத்தக்க ஒரு குழந்தை நின்று கொண்டிருந்தது. அதன் அருகில் அதன் தந்தை இன்னும் கையை ஓங்கியபடி இருந்தார். ஆனால், குழந்தையின் கண்கள், கண்ணன் வைத்திருந்த பொம்மையின் மேலேயே பதிந்திருந்தன.

"டேய், இப்போது வரப்போகிறாயா இல்லையா?" என்று உறுமியபடியே திரும்பவும் அடிக்கப் போனார் அந்த அப்பா.

"இந்தாய்யா! இவ்வளவு சின்னக் குழந்தையைப் போட்டு இப்படியா அடிக்கிறது?" என்றான் கண்ணன்.

"அடிக்காமல் என்ன செய்வதாம்! நாளைக்குக் குடிக்கக் கஞ்சிக்கு வழியைக் காணோம். இந்தத் துரைக்கு, பொம்மை வேணுமாம் பொம்மை!" என்றார் அவர்.

"குழந்தை பொம்மை கேட்காமல் பின்னே அம்மியா கேட்கும்? சும்மா ஒன்று வாங்கிக் கொடய்யா! விலை சரசந்தான்!" என்று கூறியவாறு கண்ணன் அக்குழந்தையைப் பார்த்தான்.

உடனே தன் தந்தை வாங்கிக் கொடுத்துவிட்டது போல மலர்ந்த கண்களுடன் பொம்மையை வாங்க ஆவலாகக் கையை நீட்டியது அந்தக் குழந்தை.

"என்ன விலை தம்பி?"

"விலை கொஞ்சந்தான்! மூணு ரூபாய்!"

"ஐயோடா! மூணு ரூபாய் உனக்குக் கொஞ்சமா தம்பீ! அந்தப் பணம் இருந்தால் நான் இந்த வாரத்தை நிம்மதியாக ஓட்டிவிடுவேனே!" என்றார் அந்த ஏழைத் தொழிலாளி.

குழந்தை காசி மீண்டும் முரண்டு செய்யவே முதுகில் நான்கு அறைகள் வைத்துத் தாதரவென்று இழுத்துப்போனான்.

கண்ணனுக்கு மனது என்னவோ போல் இருந்தது. அக் குழந்தையின் அழகிய முகம் அந்தப் பொம்மையைக் கொடு என்று கேட்பது போல் அவன் மனக் கண் முன் தோன்றியது. ஆனால், அவன் தான் என்ன செய்ய முடியும்? அவனும் ஓர் ஏழைத் தொழிலாளி தானே! மேலும், அவன் ஓர் அனாதை. அது அவனுடைய சொந்தக் கடையாக இருந்தால் அந்த 'செலுலாயிட்' பொம்மையைக் குழந்தை காசிக்குச் சும்மாவே கொடுத்திருப்பான். ஆனால், அது தான் அவன் சொந்தக் கடையில்லையே!

அதற்குப் பிறகு அவன் மனம் வியாபாரத்தில் செல்லவேயில்லை. அக் குழந்தையைப் பற்றியே சிந்தனை ஓடிற்று.சாதுரியமாகப் பேசி, வந்தவர்கள் தலையிலெல்லாம் ஏதாவது ஒரு பொருளைக் கட்டி அனுப்பும் கண்ணன், இப்பொழுது கேட்ட சாமான்களைக்கூடச் சரியாக எடுத்துத் தர முடியாமல் தடுமாறினான்.

மறுநாள் காலையில் கண்ணன் கடையில் உட்கார்ந்து வியாபாரத்தைக் கவனித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது, முதல் நாள் குழந்தையுடன் வந்த மனிதர் அவசர அவசரமாகக் கையில் மருந்துப் புட்டியுடன் சென்று கொண்டிருந்தார். கண்ணன் அவரைக் கூப்பிட்டுக் குழந்தை காசியைப் பற்றி விசாரித்தான்.

"தம்பீ! உன் பேச்சைக் கேட்காமல் குழந்தையை மிருகத்தனமாக அடித்துவிட்டேன். தாயில்லாக் குழந்தையை அடித்து விட்டோமென்று இப்போதுதான் மனசு கிடந்து உழலுது. அடித்த அடியிலே நல்ல ஜுரம் வந்து விட்டது தம்பீ! கார்ப்பரேஷன் ஆஸ்பத்திரிக்குப் போகிறேன்" என்றார், கண்களில் துளிர்த்த நீரைத் துடைத்தபடி.

கண்ணனுக்கு அக்குழந்தையைப் பார்க்கவேண்டும் போலிருந்தது. அவருடைய வீடு எங்கிருக்கிறது என்று விசாரித்துக்கொண்டான். பிறகு, சாப்பாட்டு வேளையில் நேராகக் காசியினுடைய வீட்டிற்குச் சென்றான்.

அது வீடு என்று கூறும்படியாக இல்லை. வெய்யிலை மறைக்கப் போட்ட ஒரு சிறிய கொட்டகை போலவே இருந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில சட்டிகள், மாதக் கணக்கில் மூட்டாமல் கிடக்கும் அடுப்பு இவை யெல்லாம் அவ்வீட்டின் ஏழ்மைச் சின்னங்களாக விளங்கின.

ஒரு மூலையில் பல பொத்தல்களையுடைய கோரைப் பாயில் காசி துவண்டு படுத்திருந்தான். அவன் அருகில் கவலையே உருவாக உட்கார்ந்திருந்தார் பொன்னன். அவர்தான் காசியின் தந்தை.

அக்குடிசையுள் நுழைந்ததும் அவன் செவிகளில் விழுந்தது, "அப்பா!...பாப்பா!...ம்...!ம்!... அடிக்காதே! ஐயோ!" என்ற குரல் தான். அதைக் கேட்ட கண்ணனின் கண்கள் கலங்கின. குழந்தையின் நிலையைத் தூரத்திலிருந்தபடியே ஓரளவு தெரிந்து கொண்டான்.

வந்த சுவடு தெரியாமல் திரும்பினான், கண்ணன். கடையைச் சேருவதற்குள் ஒரு முடிவிற்கு வந்துவிட்டது அவன் மனம். கடைக்குள் நுழைந்த மறுநிமிடமே வெளியே திரும்பினான். இப்பொழுது அவன் கைகளில் 'செலுலாயிட்' பொம்மை ஒன்று காட்சியளித்தது. 'விறுவி'டென்று நடந்து காசியின் குடிசையை அடைந்தான்.

குழந்தை அருகில் சென்று "காசி! காசி! இதோ பார் பாப்பா! இந்தா,வைத்துக்கொள்" என்றான்.

"என்ன தம்பீ இது !" என்று கேட்டார் வியப்புடன் பொன்னன்.

"ஒன்றுமில்லை.பாவம் குழந்தை! பொம்மை, பொம்மை என்று உயிரை விடுகிறது. இதைப் பார்த்ததும் காசியின் ஜுரமெல்லாம் பறந்துவிடப் போகிறது, பாருங்கள்!" என்றான் கண்ணன்.

"என் தம்பி, இதைக் கடையிலேயிருந்து எடுத்துவந்து விட்டாயே! முதலாளி கேட்டால் என்ன செய்வாய்?" என்றார் பொன்னன்.

'முதலாளி' என்ற சொல்லைக் கேட்டதும், கண்ணனின் மனம் 'திடுக்'குற்றது. ஆனாலும், ஒருவாறு சமாளித்துக் கொண்டு, "முதலாளி கேட்டால் பணம் கொடுத்து விட்டால் போகிறது" என்றான்.

"இப்போது என்னிடம் செல்லாத ஒரு காசுகூட இல்லையே தம்பி !" என்று கவலையுடன் கூறினார் பொன்னன்.

"நீங்கள் கொடுக்க வேண்டாம்.

தானே கொடுக்கிறேன். சரி, நேரமாகிறது. நான் வருகிறேன். நாளைக்கு நீங்கள் அந்தப் பக்கமாகப் போகும்பொழுது குழந்தைக்கு எப்படியிருக்கிறது என்று வந்து சொல்லுங்கள்'' என்று கூறிவிட்டுக் கடையை நோக்கி நடந்தான் கண்ணன்.

கடையில் ருத்திரமூர்த்தியாக முதலாளி உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும், கண்ணனின் சப்தநாடியும் ஒடுங்கி விட்டன. கண்ணனின் கால்கள் துவண்டன. உடம்பு நடுங்கியது. மெதுவாகக் கடையை அடைந்தான்.

''உம்...! இது எத்தனை நாளாக நடக்கிறது? அந்தப் பொம்மைக்கு எவ்வளவு ரூபாய் கிடைத்தது?''

''..........''

''என்னடா, திருட்டு விழி விழிக்கிறாய்? உண்மையைச் சொல்லிவிடு! இல்லையோ தோலை உரித்து எடுத்து விடுவேன்'' என்று கர்ஜித்தார் முதலாளி.

''ஐயா! நான் சொல்லுவதைக் காது கொடுத்துக் கேளுங்கள்''

''என்னடா சொல்லப் போகிறாய்? 'நான் எடுக்கவில்லை' என்றுதானே சொல்லப்போகிறாய்! போனால் போகிறது; ஏழைப் பையனாக இருந்தாலும் நல்லவனாகத் தெரிகிறதே என்று வேலைக்கு வைத்துக் கொண்டால், உண்ட வீட்டிற்கே இரண்டு நினைக்கிறாயா? திருட்டுப் பயலே! நீ செய்திருக்கிற வேலைக்கு உன்னைப் போலீஸில் ஒப்படைக்க வேண்டும். போனால் போகிறது என்று விட்டு விடுகிறேன். இனி என் கண்முன்னே வராதே. ஓடிவிடு'' என்று பொரிந்து தள்ளினார் முதலாளி.

அவர்தான் என்ன செய்வார்? அவர் கண்ணனை மிகவும் நம்பியிருந்தார். அவருக்குக் குழந்தை குட்டிகள் இல்லை. இன்னும் சிறிது காலத்திற்குப் பிறகு கண்ணனைத் தன் பிள்ளையாகச் சுவீகாரம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்றுகூட எண்ணியிருந்தார்.

அன்று காலை முதல் அவர் ஏதோ காரணத்தினால் மிகவும் கோபமாக இருந்தார். பிற்பகல் கடைக்கு வந்ததும் கடையில் கண்ணனைக் காணவில்லை. அது அவர் கோபத்திற்குத் தூபம் போட்டது போலாயிற்று.

கடையில் மற்றொரு சிறுவன் வேலை பார்த்து வந்தான். அவனுக்குக் கண்ணன் மேல் எப்போதும் பொறாமை. முதலாளி அவனிடத்தில் மட்டும் எப்போதும் அன்பாயிருக்கிறாரே என்பதுதான் அப்பொறாமைக்குக் காரணம். ஆகவே, அவன் இச்சந்தர்ப்பத்தை நன்கு பயன் படுத்திக் கொண்டான்.

கண்ணன் சில நாட்களாகவே பொம்மைகளை வெளியே எடுத்துச் சென்று அதிக விலைக்கு விற்று வருகிறான் என்றும், இன்றும் அது போல ஒரு பொம்மையைக் கண்ணன் எடுத்துப் போனான் என்றும், தான் அதை நேரில் பார்த்ததாகவும் கூறினான். அவன் அப்படிக் கூறியதும் கோபத்தில் தன் மதியை இழந்திருந்த முதலாளி சுந்தரம் பிள்ளை அதை அப்படியே நம்பிவிட்டார்.

நம்பிக்கைத் துரோகம் செய்த கண்ணன்மேல் அவருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. கண்ணன் வந்ததும் அவன் கூற வந்ததைக்கூடக்

கேட்காமல் ‘குதி குதி’ யென்று குதித்தார்.

அவர் இருந்த நிலையில், தான் கூறுவது எதுவும் அவர் காதில் ஏறாது என்பதை அறிந்தான் கண்ணன்.

“ஐயா! நீங்கள் நினைக்கிறபடி நான் செய்யவில்லை! போகும் உயிரைத் தடுத்து நிறுத்தவே அந்தப் பொம்மையை எடுத்துப் போனேன். அதிக விலைக்கு விற்பதற்காகவல்ல. நான் எப்படியும் இன்னும் இரண்டு மூன்று நாட்களில் அந்தப் பொம்மையின் விலையைக் கொடுத்துவிடுகிறேன். அப்பொழுது மட்டும் உங்களைப் பார்க்க அனுமதியுங்கள்” என்று கூறிவிட்டு அவர் பாதங்களைத் தன் கண்களில் ஒற்றிக் கொண்டான். பிறகு, திரும்பிக்கூடப் பாராமல் வேகமாக நடந்து சென்றான்.

அவன் போவதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த சுந்தரம் பிள்ளை அவன் தலை மறைந்ததும் மேஜை மேல் தலையைக் கவிழ்த்துக் கொண்டு விம்மி விம்மி அழுதார்.

இரண்டு நாட்கள் ஓடி மறைந்தன. மூன்றாம் நாள் பிற்பகல் கடையைக்

எலும்பிலே ஒற்றுமை!



மனிதனுக்கும், கொரில்லா என்ற குரங்குக்கும் எலும்பைப் பொறுத்தவரை வித்தியாசமே இல்லை! மனிதனுக்கும் 206 எலும்புகள் தான்; கொரில்லாவுக்கும் 206 எலும்புகள் தான்!

‘மந்தியிலிருந்து மனிதன் வந்தான்’ என்று சும்மாவா சொல்லுகிறார்கள்? எல்லாம் இந்த மாதிரி ஒற்றுமைகளைப் பார்த்துவிட்டுத்தான்!

கவனித்துக் கொண்டிருந்தார் முதலாளி. அவர் மனம் நிம்மதி இழந்து தவித்துக் கொண்டிருந்தது.

"பாவம், ஏதோ பணம் வேண்டுமென்று அந்தப் பொம்மையை விற்று விட்டிருக்கிறான் கண்ணன். அதற்காக அவனை அப்படிப் பேசித் துரத்தி விட்டோமே! இத்தனை நாளும் உண்மையாக வேலை செய்ததை நினைத்துச் சும்மா விட்டிருக்கக் கூடாதா? நம் கெட்ட காலம் தான் அப்படியெல்லாம் பேசச் செய்தது!" என்று ஒரு சமயம் நினைத்துத் தம்மையே நொந்து கொண்டார்.

மற்றொரு சமயம், "ஏதாவது பணம் வேண்டுமானால் என்னைக் கேட்டிருந்தால் கொடுக்க மாட்டேனா? ஏன் இம்மாதிரி திருட்டுக் காரியம் செய்ய வேண்டும்? இந்தச் சிறிய விஷயத்திற்கு வருவது தானே நாளைக்குப் பெரிய விஷயத்திற்கும் வரும்? அப்படித்தான் எடுத்துப்போய் விற்றானே, நான் அதட்டும்போது, 'தெரியாது செய்துவிட்டேன். மன்னித்து விடுங்கள். இம்மாதிரி இனிச் செய்யமாட்டேன்' என்று ஒரு தடவை சொல்லியிருந்தால் எல்லாம் சரியாய்ப் போய்விட்டிருக்குமே! அவனுக்கு வேண்டும். இதுதான் சரியான தண்டனை" என்று நினைத்தார்.

"உம்...சரி, எப்படியும் அவன் இங்கு வருவான். அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம்." என்ற முடிவிற்கு வந்தார் சுந்தரம் பிள்ளை.

அப்பொழுது அங்கு பொன்னன் வந்தார். "ஐயா! இங்கே ஒரு சிறு பிள்ளை இருந்தானே, அவன் எங்கே?" என்று விசாரித்தார்.

"யார் கண்ணனா? அவன் இல்லை. ஏன் கேட்கிறாய்?" என்றார் முதலாளி.

"நீங்கள்தான் முதலாளியா? ஒரு செலுலாயிட் பொம்மைக்குப் பணம் கொடுக்கவேண்டும், இந்தாருங்கள்" என்று பணத்தை எடுத்து நீட்டினார் பொன்னன்.

"அந்தப் பொம்மையை உனக்குத்தான் கொடுத்தானா? கேட்டதற்கு வாயைத் திறக்கவே இல்லையே!" என்று ஆச்சர்யத்துடன் கேட்டார் முதலாளி.

"ஆஹா! அந்தச் சிறு பிள்ளைக்கு எவ்வளவு இளகிய மனசு! எமனிடமிருந்து என் குழந்தை காசியின் உயிரை மீட்டுக் கொடுத்த அந்தப் பையன் எங்கே? எங்கே ஐயா? அவனுக்கு என் நன்றியைத் தெரிவிக்கவேண்டும்" என்று பரபரப்புடன் கூறிய பொன்னன் சுற்றுமுற்றும் பார்த்தார். அங்கு கண்ணன் இருந்தால்தானே!

"போகும் உயிரைத் தடுத்து நிறுத்தவே அப்பொம்மையை எடுத்துப் போனேன்" என்று கண்ணன் கூறியது முதலாளியின் காதுகளில் அப்போது ஒலித்துக்கொண்டிருந்தது.

பொன்னனை சாந்தப்படுத்தி விஷயத்தை விவரமாகக் கூறும்படி கேட்டார் முதலாளி. அப்படியே பொன்னனும் எல்லாவற்றையும் விரிவாகக் கூறினார்.

"அப்பொழுது என்னிடம் பணமில்லாததால் குழந்தைக்கு அந்தப் பொம்மையை வாங்கித் தரமுடிய

வில்லை. ஆனால், தம்பி பொம்மையைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு, 'கவலைப்படாதீர்கள்' என்று சொல்லிவிட்டுப் போனான். ஆனால், எப்படி நான் கவலைப்படாமல் இருக்கமுடியும்? அது பிறர் பொருள் இல்லையா? பணத்தையும் கொடுத்துவிட்டுப் பையனுக்கு நன்றியையும் தெரிவித்துவிட்டுப் போகலாம் என்றுதான் வந்தேன்" என்று கூறி முடித்தார் பொன்னன்.

உடனே முதலாளி, "அடடா! விஷயம் இப்படியா! அவசரப்பட்டு நான் அவனைக் கடையிலிருந்து துரத்தி விட்டேனே! அவன் கூற வந்ததைக்கூடக் கேட்காமல் அடித்துத் துரத்தி விட்டேனே!" என்று வாய் விட்டுக் கூறினார்; மிகவும் வருந்தினார். பொன்னனும் அவருடன் சேர்ந்து வருந்தினார்.

சிறிதுநேரம் சென்று, "ஒன்றும் கவலைப் படாதீர்கள். எங்கேயிருந்தாலும் நான் கண்டுபிடித்துக் கண்ணனைக் கொண்டுவந்து விடுகிறேன்" என்றார் பொன்னன்.

மேலும் இரண்டு நாட்கள் கழிந்தன. அன்றும் கவலையுடன் சுந்தரம் பிள்ளை கடையில் உட்கார்ந்திருந்தார். அப்பொழுது அவசர அவசரமாகப் பொன்னன் ஓடி வந்தார்.

"ஐயா, கண்ணன் கிடைத்து விட்டான்!"

"எங்கே! எங்கே என் கண்ணன்!" என்று கத்தினார் சுந்தரம் பிள்ளை.

"என் குடிசையில் இருக்கிறான்!" என்று கூறியதும், "எப்படி வந்தான்?" என்று அவசர அவசரமாகக் கேட்டார் முதலாளி.

ஒரு சிறு கிராமம். அந்தக் கிராமத்திலே ஒரு பெரிய பணக்காரர். அவருக்கு ஒரு பர்லாங்க் நீள முள்ள ஒரு வீடு. அந்த வீட்டுக்கு இன்னும் மின்சார விளக்கு வரவில்லை.

அந்தப் பணக்காரரிடம் ஒரு சிறுவன் வேலை பார்த்து வருகிறான். அவனுக்குப் பகல் முழுதும் ஓயாத வேலையிருக்கும். இரவிலே வேலை அதிகமாயிராது. சில சமயம் அவன் சும்மா நின்று கொண்டிருப்பான்.

அப்போது பணக்காரர் அவனைப் பார்த்து, "டேய் ரத்னம், முன் கட்டில் இருக்கும் ஹரிக்கேன் விளக்கை எடுத்துக்கொண்டு போய் சமையல் கட்டில் வைத்து விட்டு, அங்குள்ள விளக்கை எடுத்து வந்து முன் கட்டில் வை" என்பார்.

உடனே அச்சிறுவன் முதலாளி உத்தரவுப்படி முன்கட்டில் உள்ள விளக்கை எடுத்துக் கொண்டு போய் ஒரு பர்லாங் தூரத்தில்-அதாவது பின் கட்டில் உள்ள சமையலறையில் வைத்துவிட்டு அங்குள்ள விளக்கை எடுத்துக் கொண்டு முன்கட்டுக்கு வருவான்.

'இரண்டும் ஹரிக்கேன் விளக்குகள் தானே! எதற்காக இப்படி மாற்றிவைக்க வேண்டும்?' என்று தானே கேட்கிறீர்கள்?

சம்பளம் வாங்கும் அச் சிறுவன் சும்மா இருக்கலாமா? அவனை வேலை வாங்கவே இந்த உத்தரவு!

"வாருங்கள். நடந்து கொண்டே பேசலாம். பகல் பன்னிரண்டு மணியிருக்கும். ஒரு வேலையாகக் கொத்தவால்சாவடிப் பக்கம் போயிருந்தேன். அங்கே நடை பாதையிலே ஓர் இடத்தில் ஒரே கும்பலாயிருந்தது. என்னவென்று பார்க்க நானும் கூட்டத்திற்குள் நுழைந்தேன். அங்கே—நமது கண்ணன் மயக்கமாய்ப் படுத்துக் கிடந்தான். விசாரித்ததில், நாலு நாளாக அங்கேதான் கூலி வேலை செய்து கொண்டிருந்தான் என்று தெரியவந்தது. நாலு நாளாகச் சரியாகச் சாப்பிடாததாலேயே அங்கே மயக்கம் போட்டு விழுந்து விட்டான் போலிருக்கிறது. நான் அவனை வண்டியிலே போட்டு வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்தேன்" என்று கூறி முடிப்பதற்கும் அவர்கள் குடிசையை நெருங்குவதற்கும் சரியாக இருந்தது.

பரபரப்பாகக் குடிசையுள் நுழைந்த சுந்தரம் பிள்ளை, ஒரு மூலையில் கோரைப்பாயில் தன் நினைவு தெரியாமல் கண்ணன் படுத்திருப்பதைக் கண்டார். டாக்டரை அழைத்து வரும்படி பொன்னனை அனுப்பிவிட்டு, கண்ணனருகில் சென்று "கண்ணு! கண்ணு!" என்றழைத்தார்.

டாக்டர் வந்து பரிசோதித்து விட்டு, "பயப்படும்படியாக ஒன்றுமில்லை" என்று கூறினார். மயக்கம் தெளிய ஓர் ஊசியும் போட்டார்.

சிறிது நேரத்தில் மயக்கம் தெளிந்தது. "ஐயோ! நான் எங்கிருக்கிறேன்?" என்று முனகியவாறு புரண்ட கண்ணன் எதிரே முதலாளி உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும் எழுந்து உட்கார முயன்றான். அவனைப் படுத்தே இருக்கும்படி வற்புறுத்தினார் சுந்தரம் பிள்ளை.

"ஐயா! இதோ பொம்மைக்குரிய பணம். இன்னும் இரண்டணாக் குறைகிறது. ஒருநாள் பொறுத்துக் கொள்ளுங்கள். எப்படியாவது சம்பாதித்துக் கொடுத்துவிடுகிறேன்" என்று மெல்லிய குரலில் கூறியவாறு தன் இடுப்பிலிருந்த பையை எடுத்தான் கண்ணன்.

அப்போது சுந்தரம் பிள்ளையின் கண்களில் நீர் துளிர்த்தது. "கண்ணு! கண்ணு!" என்றார். அதற்கு மேல் அவர் நாக்கு அசைய மறுத்தது.

"ஐயா! என்னை மன்னித்து விடுங்கள். உங்கள் அன்பிற்கு நான் அருகதை அற்றவனாகி விட்டேன். உங்களைக் கேட்காமல் நான் பொம்மையை எடுத்து விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்!" என்றான் கண்ணன். அவன் கண்களில் கண்ணீர் வழிந்தது.

"கண்ணு! பத்தரை மாற்றுப் பசும் பொன்னாகிய உன்மீது சந்தேகம் கொண்டுவிட்டேன். கவலைப்படாதே!" என்று கூறி அவனை அன்போடு அணைத்துக்கொண்டார், முதலாளி.

அந்தக் காட்சியைக் கண்டு பொன்னனும், அவர் அருகே நின்ற காசியும் புன்னகை பூத்தனர். காசியின் கையிலிருந்த செலுலாயிட் பொம்மைகூட அப்போது சிரிப்பது போலிருந்தது!

★

சுகுமாரன்

கே. கண்ணுச்சாமி

தொடர் கதைப் பாடல்

செல்வம் இருக்கையில் வண்டு கள்
போல்
தினமும் அவனை மொய்த்தவர்கள்
மெல்லவே விலகி ஓடினரே.
மிகவும் அவனை வெறுத்தனரே.

உற்றார் உறவினர் ஒருவருமே
உதவிட முன்னால் வரவில்லை.
மற்றோர் எப்படி உதவிடுவார்,
வாழ்வில் கெட்டவன் அவனுக்கே?

வீடுகள், நிலங்கள், தோட்டங்கள்
விதவிதமான அணிகலன்கள்
காடுகள் கழனிகள் போனதன்பின்
கண்கள் திறந்தன கயவனுக்கே.

நெல்லிக் கனிபோல் நன்மொழிதான்
நிச்சயம் கசந்திடும் முன்னாலே.
நெல்லிக் கனியின் இனிப்பதுபோல்
நிச்சயம் இனிக்கும் பொன்மொழி
தான்.

இந்நல் உண்மையை அன்றறிந்
தான்,
இறந்ததன் தந்தையை நினைந்திட்
டான்.
கண்களில் நீரும் வழிந்திடவே
கதறியே வீழ்ந்து அழுதிட்டான்.

" அப்பா! உங்கள் சொல்மறந்தேன்.
அழிந்தேன்; நலிந்தேன். அதனாலே
இப்பொழுதே நான் விஷமுண்டு
இறப்பேன்; இனியும் வாழேனே "

என்றே கூறி லட்சுமியை
எடுத்துக் கானகம் சென்றிட்டான்.
அன்பே உருவாம் லட்சுமியும்
அனுதாபத்துடன் சென்றதுவே.

மரங்கள் சூழ்ந்திடும் மறைவிடத்தில்
வைத்தனன் அந்த லட்சுமியை.
திறந்தனன் அதன் தோல் பட்டை
தனை.
திகைத்தனன் உள்ளே உறை
கண்டு.

உறையினைக் கிழித்திட, இருந்தனவே
ஒன்பது உயரிய வைரங்கள்!
நிறைந்த மதிப்புள அவற்றுடனே
நிருபம் ஒன்றும் இருந்ததுவே.

நிருபம் தன்னைச் சுகுமாரன்
நீட்டிப் பிடித்தான் தன்னெதிரே.
'விரு விரு' என்றே வாசித்தான்.
வியப்புடன் பார்த்தே விழித்
திட்டான்.

"அன்புக் கனியே சுகுமாரா,
அரும்பெரும் பேறே, என்மகனே!
துன்பம் அடைவாய் நிச்சயமாய்
துர்நடத் தையினால் நிதியிழந்தே"

என்பதை முன்பே அறிந்ததனால்
ஏற்பா டிதனைச் செய்தேன் நான்.
அன்புடை மகனே உனக்காக
அற்புத வழிதனை வகுத்திட்டேன்.

ஒன்பது வைரம் இதன்விலையை
ஒருவரும் மதித்திட இயலாது.
கண்ணே, இவற்றை விற்றிடுவாய்;
கண்ணிய வாழ்வைத் துவக்கிடு
வாய்"

என்றே யிருந்ததைப் படித்திட்டான்;
இன்பம் மிகவும் அடைந்திட்டான்.
தந்தையின் அன்பினை மிகவியந்து
தன்னிலை மறந்தே நின்றிட்டான்.

அன்றே அடைந்தான் அயலூரை,
அருமை 'லட்சுமி' நாயுடனே.
ஒன்பது வைரமும் விற்றிட்டான்;
உயரியவாழ்வைத் துவக்கிட்டான்.

ஆனந் தன்பெயர் விளங்கிடவே
அமைத்தான் பள்ளிகள் பல
வற்றை.
மாணவர் தமக்குத் தாய்தந்தை
மாண்பினைத் தினமும் போதித்
தான்.

'தந்தைசொல் தவறிச் சென்றாலே
தடுக்கிநாம் விழுவோம் படு
குழியில்'
என்றனன். அம்மொழி மாணவரின்
இதயந் தன்னில் வாழ்ந்ததுவே!

(முற்றும்)

குண்டுமணியின் கைபடாத கலையே இல்லை. ஆனால், ஒவ்வொரு கலையிலும் அவனுக்குப் படுதோல்விதான்!

கலை அனுபவம்

சு. சுப்பிரமணியன்

தாடையிலே கைகளை ஊன்றிக் கொண்டு நாற்காலியில் மிகுந்த யோசனையுடன் அமர்ந்திருந்தான் குண்டுமணி. அவனை இந்தநிலையிலே பார்ப்பவர்கள் அவன் ஏதோ ஒரு பெரிய கோட்டையைப் பிடிக்கப் போவதாகவே எண்ணுவார்கள்.

அவனுக்குக் 'கலை'யிலே ஆர்வம் அதிகம். ஏதேனும் ஒரு கலையிலே 'நிபுணன்' என்ற பெயர் வாங்க வேண்டுமென்று நெடு நாளாகத் திட்டமிட்டுக் கொண்டிருந்தான். எந்தக் கலையை அணுகுவது என்பதே அவனது பெரிய யோசனை.

புத்தர் பெருமானுக்குப் போதி மரத்தடியில் 'ஞான ஒளி' தோன்றியது போல், குண்டுமணிக்கு ஒரு யோசனை 'பளிச்' சென்று தோன்றியது.

மகிழ்ச்சிபொங்கும் முகத்துடன், இடத்தை விட்டு 'அச்சா' என்று கத்திக் கொண்டே புழக்கடைப்பக்கம் ஓடினான். ஒருமூலையிலே கிடந்த பெரியபாறாங் கல்லை மிகவும் சிரமத்துடன் புரட்டிக்கொண்டு வந்தான். உடனே, எங்கோ போய் ஒரு சுத்தியும், உளியும் வாங்கி வந்தான். தான் புரட்டி வந்த கல்லை உளி கொண்டு செதுக்க ஆரம்பித்தான். கல் துண்டுகள் நாலாபுறமும் சிதறி ஓடின. ஒரு மணி நேரம் வரை செதுக்கிக்கொண்டிருந்தான்.

இந்தக் காட்சியைக் கண்டவர்கள் "ஓஹோ! மிஸ்டர் குண்டுமணி அவர்கள் சிற்பக் கலை நிபுணராக மாறப்போகிறாரோ!" என்று கிண்டலாகக் கூறினார்கள்.

குண்டுமணிக்குக் கைகளெல்லாம் வலித்தன. தோள்பட்டை மூட்டிலே கடுப்பு வலி கண்டது. ஆனால், கல் ஒரு நேரான உருவங்கூடக் கொள்ளவில்லை! அன்று அவன் தன் முயற்சியை அத்துடன் விட்டுவிட்டான். கைகளுக்கு வெந்நீர் ஒத்தடம் கொடுத்தான்.

ஆனால் குண்டுமணி சளைக்கவில்லை. தீவிர முயற்சியுடன் மூன்று நாட்களாக, சிற்ப வேலையிலே

ஈடுபட்டான், எப்படியாவது ஓர் உருவத்தைச் செதுக்கி விட வேண்டுமென்பது அவனது அவா. கல்லின் உருவம் வரவர சிறுத்துக் கொண்டே வந்தது. கல்லின் துண்டு துணுக்குகள் அருகே மலை மாதிரி குவிந்து வந்தன. பாவம், கல் உடைக்கும் வேலையை அவன் செய்திருந்தால்கூட இந்த மூன்று நாட்களில் அவன் மூன்று ரூபாயாவது கூலி சம்பாதித்திருப்பான்! ஆனால், இப்போது அவன் கை விரல்கள் தான் காய்த்துப்போயின. அத்துடன் சில செதுக்க வேண்டிய கல்லும் இருந்த இடம் தெரியாமல் சிறுத்து விட்டது!

குண்டுமணியின் உள்ளமும் கைகளும் சோர்வடைந்தன! 'சிற்பக் கலை'க்கே ஒரு பெரிய நமஸ்காரம் செய்தான். அத்துடன் 'சிற்பக் கலை ஒழிக!' என்று வாய் கிழியக் கோஷமிடவும் ஆரம்பித்தான்.

* * *

ஆனால், குண்டுமணி 'கலை'யை அடியோடு வெறுத்துவிட வில்லை. அதில் உள்ள பற்று நீங்கவில்லை. அடுத்தது அவன் மனத்தை உறுத்தியது, ஓவியக் கலை! 'இதிலாவது நாம் நன்கு தேர்ச்சி பெற்று 'பெரிய ஓவியன்' என்று உலகமே போற்றும்படி ஆகிவிட வேண்டும். பெரிய மனிதர்களின் பாராட்டுதல்களையெல்லாம் பெற்றுவிட வேண்டும். அப்புறம் பத்திரிகைக்காரர்களெல்லாம் நம் வீட்டைச் சுற்றி வட்டமிடுவார்கள், நம் கையால் வரைந்த சித்திரங்களைத் தங்களது பத்திரிகைகளில் போடுவதற்குப் போட்டி போடுவார்கள், நாம் அப்போது 'கிராக்கி' பண்ணிக் கொள்ள வேண்டும்' என்றெல்லாம் மனக் கோட்டை கட்டினான் குண்டுமணி.

ஓவியன் ஆவதற்கான முயற்சியில் ஈடுபட்டான். 'டிராயிங் பேப்பர்'களும் 'பென்சில்'களும், 'வாட்டர் கலர் பாக்ஸ்க'ளும் அவனது மேஜையை நிரப்பின. நமது குண்டுமணி எடுத்த எடுப்பிலேயே 'இயற்கைக் காட்சி'களை அனாயாசமாகத் தீட்டத் தொடங்கினான். 'வாட்டர் கலர்'களெல்லாம் சித்திரத்தில் பங்கு பெற்றன. அவன் 'பிரஷ்' பிடித்திருந்த விதமே அலாதியாயிருந்தது!

பெருத்த சிரிப்பொலி கேட்டுத் திரும்பினான் குண்டுமணி. அங்கு அவனது நண்பன் பாசு, வயிறு வெடிக்கச் சிரித்துக்கொண்டிருந்தான்.

"ஏண்டா பாசு, உனக்கென்ன பைத்தியம் கியித்தியம்..."

"ஏன், நான் சொல்ல வேண்டுவதை நீயே சொல்லிவிடலாமென்று முந்திக்கொள்கிறாய்?"

"என்னது! நானா பைத்தியம்? அப்படியென்றால்?......"

"சந்தேகமில்லால் நீ அதுதான். உனக்கு இந்த அருமையான 'டிராயிங் பேப்பர்'களையும் 'கலர்'களையும் வீணாக்க இதைவிட வேறு சிறந்த வழி தோன்றவில்லையோ!"

"என்டா பாசு, அப்படியென்றால், அவ்வளவு மோசமாகவா இருக்கிறது, இந்த இயற்கைக் காட்சி?"

"என்ன இது, இயற்கைக் காட்சியா! அடடே, எனக்கு இப்போதுதான் அது என்னவென்றே புரிந்தது. ஏதேது! மற்ற ஓவியர்களெல்லாம் உன்னிடம் பிச்சை வாங்கவேண்டும் போலிருக்கிறதே! நீ ஏதோ வர்ண ஆராய்ச்சி செய்கிறாயாக்கும் என்றல்லவா நான் நினைத்தேன். சரிதான்!"

குண்டுமணி தனது சித்திரத்தைக் கூர்ந்து பார்த்தான். அவனுக்கே சிரிப்பு வந்து விட்டது. ஏன் தெரியுமா? அவன் எழுதிய சித்திரம் கோழி கிளறிய மண் தரையைப் போல்-ஒழுங்கீனமாக-அலங்கோலமாக—பேயும் நடுங்கும் கோர சொரூபத்துடன் காட்சியளித்தது. அவனது மனக்கோட்டைகளெல்லாம் சரிந்து விழுந்து நொறுங்கின. தன் நண்பன் கூறியது உண்மைதான் என்று அவனுக்குத் தோன்றிவிட்டது. 'நல்லவேளை, வர்ணத்தில் பாதியாவது மிஞ்சியிருக்கிறதே!' என்று நினைத்துச் சந்தோஷப் பட்டான். அத்துடன் 'சித்திரக்கலையே இனி நமக்கு வேண்டாம்' என்று திடசங்கல்பமும் செய்து கொண்டான். அவனுடைய சித்திரம் சுக்கு நூறாகக் கிழிக்கப்பட்டுக் குப்பைக் கூடையைத் தஞ்சம் புகுந்தது!

"உன்னுடைய இந்த முடிவால் 'ஓவியக்கலை'யே புனிதமடைந்தது!" என்று கூறினான் பாசு, கேலிச் சிரிப்புடன்.

* * *

குண்டுமணிக்குப் 'பாடுவது' என்றால் குழந்தை முதற்கொண்டே அலாதி ஆசை. ஆகையால், 'எது எப்படி வேண்டுமானாலும் போகட்டும்; நாம் இசைக் கலையிலாவது முன்னேறுவோம்' என்று நினைத்தான். (ஏனெனில், அதில் 'டிராயிங் பேப்ப'ருக்கோ, 'வாட்டர் கல'ருக்கோ இடமில்லை, பாருங்கள்!)

'உன் பாட்டியின் மாமியார் உபயோகப்படுத்திய பழைய 'ஹார்மோனியம்' ஒன்று பரண்மீது இருக்கிறது' என்று அவனுடைய தாத்தா முன்பு கூறியது அவனுக்கு இப்போது ஞாபகத்துக்கு வந்தது. உடனே, அதைப் பரணிலிருந்து கீழே இறக்கினான். ஒட்டடை, அழுக்கு முதலியவை இல்லாமல் சுத்தமாகத் துடைத்தான். இனி அவனுடைய பாட்டு சாதகம் ஆரம்பம் ஆகவேண்டியதுதான்!

அந்த 'ஹார்மோனிய'த்திலிருந்து எழும்பிய ஓசை கர்ணகடூரமாக இருந்தது! (அப்படியானால் அது குண்டுமணிக்குப் பொருத்தமானதுதான் என்று யாரோ கூறுவது காதிலே விழுகிறது.) ஆனால், அதனைக் குயிலோசையாக எண்ணி, உபயோகப்படுத்தினான் குண்டுமணி. மதுரை மணியாகத் தன்னைப்

பாவித்து நீட்டி நீட்டிக் கத்தினான். (அந்தக் கத்தலுக்குப் பெயர்தான் பாட்டு என்று அவனே சொல்லிக்கொள்கிறான்)

தான் பள்ளிப் பாடப் புத்தகத்தில் படித்த செய்யுட்களையெல்லாம் பாடித் தீர்த்தான். பக்கத்து வீட்டுக்காரர் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார். அவராலேயே தாள முடியவில்லை. கடைசியிலே 'சிடுசிடு' என்ற முகத்துடன் ஒருநாள் நேரே குண்டுமணியின் அப்பாவிடம்வந்தார். "சார், உங்கள் பையனைக் கொஞ்சம் பாடாமல் இருக்கச் சொல்லுங்கள். இல்லையென்றால், அண்டை அயலுக்குக் கேட்காமல் மெதுவாகப் பாடச் சொல்லுங்கள். நாங்களெல்லோரும் பக்கத்திலே குடியிருக்கிறோம் என்பது ஞாபகம் இருக்கட்டும். இவனது கத்தலைக் கேட்டுவிட்டு, எங்கள் பெண்ணுடைய பாட்டுவாத்தியார் கூட இரண்டு நாட்களாக வரவில்லை சார்!" என்று இரைந்தார்.

தன்னுடைய பாட்டின் மகத்துவம் இன்னதென்பதை இப்போதுதான் குண்டுமணி உணர்ந்தான். இனியும் பாடுவதற்கு அவன் என்ன முட்டாளா, என்ன? ஹார்மோனியம் தன் பழைய 'இருப்பிடத்தை' ஜாக்கிரதையாக அடைந்தது. (எனினும், அந்த நிலையில் அதற்குக் கால்உயிர்தான் இருந்தது என்பதை சொல்லிவிடவேண்டும்!)

* * *

குண்டுமணி இப்போது கடைசியாக 'எழுத்துக் கலை'யில் புகுந்து விட்டான். நூற்றுக் கணக்கான கதைகள் எழுதிக் குவிக்கத் திட்டமிட்டான்.

நல்ல வெள்ளைத் தாளாக அரை 'ரீம்' வாங்கினான். கதை எழுதும் ஆயுதங்களான மைக்கூடும், பேனாவும் அவன் மேஜையில் வந்து அமர்ந்தன...நாற்காலியில் அமர்ந்த குண்டுமணியின் மனம் கற்பனையுலகிலே சஞ்சரிக்கத் தொடங்கியது. ஆனால் அந்த உலகம் வெறும் சூன்யமாக இருந்தது அவனுக்கு. அரைமணிநேரம் யோசனை செய்தான். ஒரு கதைகூட அவனுக்குத் தோன்றவில்லை. 'சரி, பிரபல எழுத்தாளர்கள் என்றால் எழுதிக்கொண்டே இருப்பார்கள். யோசனை ஊறிக்கொண்டே இருக்கும்' என்ற யாரோ சொன்னது ஞாபகத்துக்கு வந்தது அவனுக்கு. எழுத ஆரம்பித்தால் தனக்கும் தன்னால் வரும் என்று நினைத்து எழுத ஆரம்பித்தான்.

'ஒரே ஒரு ஊரிலே ஒரு......' என்று ஆரம்பித்தான். உடனே 'சே, சே...இது மாதிரிக் கதைகள் இந்தக் காலத்திலே ஒருத்தருக்கும் பிடிக்காது. ஆகையினால், புதுமாதிரியாக எழுத வேண்டும்' என்று நினைத்தான்.

'பள்ளிக்கூட மணி ஐந்துமுறை அடித்து ஓய்ந்தது...பள்ளிச் சிறுவர்கள் சிட்டுக் குருவிகளைப்போல் வெளியே ஓடிவந்தனர். அப்போது

அங்கு வெகு வேகமாக 'ப்யூக்'கார் ஒன்று.....'

இதற்குமேல் அவனுக்குயோசனை தோன்றவில்லை. 'என்னடா இது! ஆரம்பம் நன்றாக இருக்கிறது. மேலே எழுத வரமாட்டேனென்கிறதே!' என்று வருந்தினான்.

இன்னொரு கதை ஆரம்பித்தான். அதுவும் ஆரம்ப சூரத்தனமாகத்தானிருந்தது. அதை அப்படியே விட்டுவிட்டான்.

இதுமாதிரி, 'நன்றாக இல்லை, நன்றாக இல்லை' என்று எண்ணிக் கசக்கி எறிந்த காகிதங்கள் மட்டுமே ஒரு மணங்கு இருக்குமென்றால் அவனது முயற்சியைப் பாராட்டாமல் இருக்க முடியுமா?

கடைசில் எப்படியோ ஒரு கதையை எழுதி முடித்தான். குழந்தைகள் பத்திரிகை ஒன்றிற்கு அனுப்பினான். அத்துடன் ஒரு கடிதமும் வைத்திருந்தான்.

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம். நான் ஒரு சுவாரஸ்யமான கதை அனுப்பியுள்ளேன். தங்கள் பத்திரிகையில் அவசியம் இதை வெளியிட்டுப் பரிசளிக்கக் கோருகிறேன்.

தங்கள் அன்புள்ள,

குண்டுமணி.

ஆனால், அவனது கதை சுவரிலே விட்டெறியப்பட்ட பந்தைப்போல் மறு வாரமே அவனைத் தேடி வந்து தஞ்சம் புகுந்தது. அத்துடன் கூட ஆசிரியர் ஒரு கடிதமும் வைத்திருந்தார்.

அன்புள்ள குண்டுமணிக்கு,

நீ 'கதை' என்று கூறிய ஒரு காகிதக் கற்றையை இத்துடன் திருப்பியனுப்ப நேர்ந்ததற்கு வருந்துகிறேன். எங்கள் பத்திரிகை நன்கு நடப்பது உனக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது. தயவு செய்து இனி நீ கதை அனுப்பவேண்டாம்.

இப்படிக்கு,

ஆசிரியர், ரோஜா.

இதைப் படித்த குண்டுமணியின் கண்களில் தீப்பொறி பறந்தது. கடிதத்தை ஆத்திரம் தீரக் கிழித்தெறிந்தான்.

அவனது மனம் சோர்வுற்றது. கடைசியாக அவன் கதை எழுதுவதைவிடக் கட்டுரை எழுதியாவது பெயரெடுக்கலாம் என்று தீர்மானித்தான். தீர்மானித்தபடி தன் அனுபவத்தையெல்லாம் ஒரு கட்டுரையாக எழுதி ஒரு பத்திரிகைக்கு அனுப்பினான்.

மாதம் இரண்டாகியும் கட்டுரை வெளி வரவில்லை. 'சரி, நமக்கும் கலைக்கும் வெகு தூரம். கலைக்கே ஒரு பெரும் கும்பிடு!' என்று ஒரு பெரும் கும்பிடு போட்டான். அப்போது வாசலிலே 'தபால்' என்ற சப்தத்துடன் ஒரு கார்டை விட்டெறிந்துவிட்டுச் சென்றான், தபால்காரன்.

குண்டுமணிக்கு அக்கடிதத்தைப் படிக்கவும் மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. ஆசை தீரப் படித்தான்.

'அன்புள்ள தம்பிக்கு,

நீ அனுப்பிய 'கலை அனுபவம்' என்ற கட்டுரையை அடுத்த இதழிலே பிரசுரிக்கிறோம்.

இப்படிக்கு,

ஆசிரியர், அணுகுண்டு.

இதுதான் அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது!

முன் கதைச் சுருக்கம்

நள்ளிரவிலே, அப்பாவின் பணத்தைத் திருடிய குற்றத்துக்காகப் பயந்து ஊரைவிட்டே ஓடுகிறான், ரமணி. மறுபடியும் வருகிறான். விளக்குக் கம்பத்தில் ஏறி மாடிக்குச் செல்கிறான். அங்கே தங்கை வனஜாவைச் சந்திக்கிறான். அவள் அவன் செய்த குற்றத்தை இடித்துக்காட்டிப் புத்திமதி கூறுகிறாள். அப்பாவின் கோபம் தணியும்வரை தலைமறைவாயிருக்கப் போவதாகக் கூறுகிறான், ரமணி. அக்காலத்தில் பட்டினி கிடக்காதிருக்கத் தன்னுடைய ஒரு ஜிமிக்கியைக் கழற்றிக் கொடுக்கிறாள், வனஜா. அத்துடன் அவளுக்குத் தெரியாமல் வெள்ளி டம்ளரையும் எடுத்துக் கொண்டு ஓடுகிறான் ரமணி. பக்கத்து ஊரான மின்னூருக்குச் செல்கிறான். அங்குள்ள ஓர் இடிந்தகோயிலில் போய்த் தங்குகிறான். ஜிமிக்கியையும், டம்ளரையும் கோவில் சுவரில் ஒளித்துவைத்துவிட்டு, மறுநாள் அவைகளை எடுத்துப் பார்க்கையில்—பக்காத்திருடன் ராக்கப்பனால் அவை பறிபோகின்றன!

ராக்கப்பன் பறித்துவந்த நகைகளில் ஜிமிக்கியை எடுத்துக்கொண்டு கண்ணனூருக்குச் செல்கிறான், ராக்கப்பன் மகனான சாமியப்பன். நோய்வாய்ப்பட்ட தன் தாய்க்கு ஜிமிக்கியை விற்று அப் பணத்தில் சிகிச்சை செய்யலாம் என்பது அவன் எண்ணம். போகிற வழியில் அகஸ்மாத்தாக காரில் அகப்பட்டுக் கொள்ளவிருந்த ரமணியைக் காப்பாற்றி அவன் அன்பையும் பெற்றுச் செல்கிறான்.

கண்ணனூர் பொற்கொல்லர் ஒருவரிடம் ஜிமிக்கியை விலை கூறிய சாமியப்பன், கொல்லரின் தந்திரத்தால் போலீஸில் ஒப்படைக்கப்படுகிறான். போலீஸ்காரர் ஜிமிக்கி கிடைத்துவிட்ட செய்தியைக் கூறி வனஜாவின் அப்பாவையும், அவளையும் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்கிறார்.

போலீஸ் ஸ்டேஷனில் கைதியாக நின்றிருந்த சாமியப்பனைக் கண்ட வனஜாவின் அப்பா ராமசாமி, ''ராக்கப்பன்...ராக்கப்பன்...கொலை...விஷம்...கிணறு...'' என்று உரத்தக் குரலில் திடீரென்று கத்திவிட்டு, தம் தலையில் மடேர் மடேரென்று அடித்துக்கொண்டே மூர்ச்சித்து விழுந்து விடுகிறார்! ஏன்...?

11. மற்றோர் ஆபத்து!

காளி கோயிலில், ரமணியிடமிருந்து அபகரித்த ஜிமிக்கியையும் வெள்ளி டம்ளரையும் மூட்டையில் வைத்துக் கட்டும் மும்முரத்தில், தான் எங்கிருந்தோ அடித்துக்கொண்டு வந்த கனத்த தோல் பையைத் தரையிலேயே போட்டுவிட்டுச் சென்றுவிட்டான், அந்தத் திருடன். இதை உணர்ந்துகொள்ள ரமணிக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. தோல் பையை அடக்க முடியாத ஆவலுடன் கையில் எடுத்துத் திறந்தான்.

அதே சமயத்தில், 'யாரடா அங்கே?' என்ற குரலைக்கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினன் ரமணி. சிறிது தூரத்தில் கையில் நீண்ட துப்பாக்கியுடன் ஒரு போலீஸ்காரர், 'டார்ச்' விளக்கை ஏற்றியபடி நின்றுகொண்டிருந்தார். இப்படி ஒரு சந்தர்ப்பம் நேருமென்று ரமணி கனவிலும் கருதவில்லை. நிலைமையின் சிக்கலை உணர்ந்துகொள்ளவும் அவனுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. அபாயம் நிறைந்த இந்த இக்கட்டான சூழ்நிலையில், தான் செய்யவேண்டியது இன்னதென்பது குறித்து ரமணியின் துடியான மூளை ஒரு நொடியில் முடிவுக்கு வந்துவிட்டது! எவனோ ஒருவன் செய்த ஜோபடித் திருட்டுக்குரிய தண்டனையைத் தான் அனுபவிக்க அவன் விரும்பவில்லை. யார்தான் விரும்புவார்கள்?

கையில் துப்பாக்கியுடன் நின்றுகொண்டிருந்த போலீஸ்காரர் தன்னை நெருங்கி வருவதற்குள் ஒரு புத்திசாலித்தனமான காரியம் செய்தான் ரமணி. பணப்பையைச் சுருட்டித் தன் அருகேயிருந்த ஓர் இடுக்கில் செருகி வைத்தான். பிறகு "ஹஹ்ஹஹ்ஹா! ..யாரோ, இவர் யாரோ, என்ன பேரோ?... ஹே! அர்ஜுனு! உள்ளத்தில் உண்மையுடன் எவனொருவன் என்னை வழிபடுகிறானோ, அவனுடைய கட்டளைகளை நிறைவேற்றி வைக்க நான் தயாராயிருப்பேன்...நான் யார் தெரியுமா? எல்லாம் வல்ல இறைவன்! கிருஷ்ண பரமாத்மாவாக்கும்!... கபர்தார்!...யாரோ...என் கண்முன்பு நிற்பவன் யாரோ? யாரோ எந்த ஊரோ? நேராகவே என் கண்முன் ஜோராகவே நிற்பவன் யாரோ?...ஹே, முட்டாள் ஜனங்களே! அறிவின்மையாகிற தூக்கத்திலிருந்து விழித்துக் கொள்வீர்களாக!...ஏண்டா கணபதி! உன்னுடைய கணக்கு நோட்டைக் கொஞ்சம் இரவல் கொடுக்கிறாயாடா?...காப்பியடித்துவிட்டுத் திருப்பித் தரு

கிறேன்!...ஐயோ! அம்மா! என்னைத் தனியாக விட்டுவிட்டுச் செத்துப் போய்விட்டாயே!...திருட்டுப் பயலே, உன்னைவிட்டேனா, பார்!..." என்று வாய்க்கு வந்தவற்றை யெல்லாம் உளறிக் கொட்டத் தொடங்கினான்.

வியப்பு உணர்ச்சி முகத்தில் குமிழியிட ரமணியை நெருங்கி வந்தார் போலீஸ்காரர். திடீரென்று தன்னிருப்பிடத்திலிருந்து ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்த ரமணி, போலீஸ்காரரின் கால்களைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு தரையில்விழுந்துவணங்கினான்.

"அப்பா! நான்தானப்பா உங்கள் அருமை மகன் ராமுடு! என்னை விட்டுவிட்டுப் போய்விடாதீர்கள்! செத்துப்போய் என்னை அனாதையாக்கிவிடாதீர்கள், அப்பா!" என்று போலீஸ்காரர் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டே கல்லும் கரையும்படியாய்ப் புலம்பினான் ரமணி. அப்போது அவன் முகத்தில் 'டார்ச்' விளக்கின் ஒளியைப் பரவச் செய்தார் போலீஸ்காரர். கண்களை ஒரு வினாடி அகல விரித்த ரமணி, "அடேயப்பா! சூரியனைக் கையிலே பிடித்துக்கொண்டு வந்துவிட்டீர்களே! என்னமாய்க் கூசுகிறது?" என்றான். பிறகு கடகடவென்று சிரிக்கத் தொடங்கினான்.

போலீஸ்காரர் ரமணியை இரக்கத்துடன் பார்த்தார். 'ஐயோ, பாவம்! எவனோ பைத்தியம்!' என்று தமக்குத்தாமே மெதுவாக முணுமுணுத்துக் கொண்டார்.

"என்ன சொன்னாய்?...நானா பைத்தியம்?...நான் யார் தெரியுமா? இந்தியப் பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேருஜியாக்கும்! ஆ..ம்..மா! என் பிள்ளை ராஜாஜியைத் தெரியுமோ உனக்கு?..." என்றான் ரமணி. போலீஸ்காரர் இடி இடி என்று சிரித்தார்.

"சிரிக்காதே, சிரிக்காதே. சீரழிய வச்சுடுவேன்!" என்று ஏதோ ஒரு சினிமாப் பாட்டைக் கர்ணகடூரமாகப் பாடினான் ரமணி. போலீஸ்காரரின் சிரிப்பு அதிகமாயிற்று.

"தம்பி! கொஞ்ச நேரத்துக்கு முன்னால், இந்த வழியாக ஒரு மனிதன் ஓடிப்போனானே, நீ கவனித்தாயா?" என்று கேட்டார் போலீஸ்காரர்.

"ஓ! அந்த ஆறடி மனுஷனா? ஏரோப்ளேனில் ஏறிக்கொண்டு அப்பொழுதே அமெரிக்காவுக்குப் போய்விட்டானே!" என்று கூறிக்கொண்டே ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தான் ரமணி.

"அட, இழவே!" என்று தலையில் அடித்துக்கொண்ட போலீஸ்காரர், தம் வழியைப் பார்த்துக்கொண்டே வேகமாய் நடையைக் கட்டினார். அவர் போன திசையை மௌனமாகப் பார்த்துக்கொண்டே நின்றான் ரமணி.

போலீஸ்காரரின் தலை மறைந்த பிறகுதான் ரமணியின் மனம் ஓரளவு நிம்மதியடைந்தது. அமைதியுடன் பெருமூச் செறிந்த ரமணி, பர்ஸை ஒளித்துவைத்த மறைவிடத்தை மெது வாக நெருங்கினுன். அங்கே பர்ஸ் பத்திரமாகவே இருந்தது. அதற்குள் அது எங்கே மறைந்துவிடப் போகிறது? இருந்தா லும், ரமணிக்குச் சந்தேகம். அந்த சந்தேகம் நிவர்த்தியானவுடன் அங்கேயே படுத்துக்கொண்டான்...

கொஞ்ச நேரத்துக்குள் நிகழ்ந்த ஆச்சரியமான நிகழ்ச்சிகள் எல்லாம் அவன் நினைவுத்திரையில் அசைவுப் படங்களாக நிழ லாடின. திடீரென்று திருடன் வந்து ஜிமிக்கியையும் டம்ளரை யும் தன்னிடமிருந்து பிடுங்கிக்கொண்டது, பர்ஸை அவன் கைத் தவறுதலாகப் போட்டுவிட்டுப் போனது, போலீஸ்காரர் வந்து அதட்டியது, பர்ஸை ஒளித்து வைத்துவிட்டுப் பைத்தியமாய் நடித்து, அவரை விரட்டியது—எல்லாம் கனவுபோல் அவனுக்குத் தென்பட்டன. உண்மையான பைத்தியம் தோற்கும்படியாய், அசல் கிறுக்கன்போலவே நடித்தது தான்தானு என்று அவ னுக்கே வியப்பாக இருந்தது.

'தவிர்க்க முடியாத ஆபத்துக்கள் உண்டாகும்போது மனிதனுடைய மூளை வியக்கத்தக்க வண்ணம் வேலை செய் கிறது என்பது எத்தகைய உண்மை?' என்று நினைத்துக் கொண்டான் ரமணி. திடுக்கிடச் செய்யும் கொலை, கொள்ளைக் கதை ஒன்றைப் படித்து முடித்த பிறகு ஏற்படும் ஓர் அச்சம் கலந்த உணர்ச்சி அவன் உள்ளம் முழுவதிலும் வியாபித்திருந் தது. என்னென்னவோ பயங்கர நினைவுகளுடன் புரண்டுகொண் டிருந்த ரமணி, சிறிது நேரத்துக்கெல்லாம் கண்ணயர்ந்தான்...

...யாரோ தன்னைப் பிடித்து உலுக்குவதைப்போல் உணர்ந்த ரமணி திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தான். இன்னும் தூக்கம் கலையவில்லை. கண்ணைத் தேய்த்துக்கொண்டே தலை நிமிர்ந்த ரமணிக்கு அச்சத்தினுல் வாயிலிருந்த ஈரமே வற்றி விட்டது.

அவனுக்கு எதிரில் கையில் கத்தியுடன் ஒரு மனித உருவம் நின்றுகொண்டிருந்தது. "டேய்! மரியாதையாக என் பணப் பையை எடுத்துக் கொடுத்துவிடு. இல்லாவிட்டால் கொன்று விடுவேன் கொன்று!" என்று அந்த உருவம் காது செவிடுபடும் படி கர்ஜித்தது. நகரவும் கால் எழாமல் கல்லாய் நின்றுகொண் டிருந்தான் ரமணி.

"உம்! மரியாதையாய் எடுத்துக் கொடுத்தாயோ பிழைத் தாய்! இல்லாவிட்டால்......" என்று பற்களைக் கடித்துக் கொண்டே பிச்சுவாவை ரமணியின் மார்புக்கு முன்னுல் நீட்டி னுன், அந்த ஜிமிக்கித் திருடன்.

1992

"இதோ...எடுத்துத் தாரேன்..." என்று குளறியடித்த ரமணி, அந்த மறைவிடத்திலிருந்து பணப் பையை எடுத்துத் திருடனிடம் கொடுத்துவிட்டான்.

"ஹஹ்ஹஹ்ஹா!" என்று சினிமா 'வில்லன்' மாதிரி அட்டகாசச் சிரிப்புச் சிரித்த திருடன், "அட மடப்பயலே! பர்ஸைக் கொடுத்தால் உன்னை உயிருடன் விட்டுவிடுவேன் என்று எண்ணிக்கொண்டிருக்கிறாய்?..." என்றபடியே தன் கையில் பிடித்துக்கொண்டிருந்த கத்தியை ரமணியின் நெஞ்சுக்குள் ஓங்கிப் பாய்ச்சிவிட்டான்!...

"ஐயோ! கொலை!" என்று மரணக் கூச்சல் போட்டுக் கொண்டே தரையில் சாய்ந்தான் ரமணி. வெற்றியும் வெறியும் கலந்த சிரிப்புடன், திருடன் விரைந்து சென்றதை, மார்பில் ஆறாய் ரத்தம் பெருகத் துடித்துக்கொண்டிருந்த ரமணியால் நன்றாகப் பார்க்க முடிந்தது.

மார்பில் கையை வைத்துப் பார்த்துக்கொண்டான் ரமணி. ரத்தத்தில் ஊறிய சட்டை நனைந்து கிடந்தது...'பாம் பாம்' என்ற காரின் சத்தம் கேட்டுச் 'சடக்'கென்று விழித்தான் ரமணி. அவனுடைய உடல் 'வெட' 'வெட'வென்று ஆடிக் கொண்டிருந்தது. கண்களைக் கசக்கிக்கொண்டு பார்த்தான். தான் கண்டது எல்லாமே கனவு என்பதை யூகிக்க அவனுக்கு அதிக நாழிகை செல்லவில்லை. அவனுடைய சட்டை மழைத் தண்ணீரால் நனைந்து கிடந்தது. மேலே முகட்டில் இருந்த பொத்தல்களின் வழியே சொட்டியிருந்த தண்ணீர்தான் ரமணியின் சட்டையை நனைத்திருந்தது; இரத்தம் அல்ல!

மழை பெய்துகொண்டிருந்த அந்தக் குளிர்ச்சியான வேளையிலும் ரமணிக்கு வியர்த்துக்கொண்டிருந்தது. 'விர்...ர்' என்று வீசிய குளிர்காற்றில் அவனுடைய தூக்கம் முழுவதும் கலைந்துவிட்டது. பணப் பையை ஒளித்து வைத்திருந்த மறைவிடத்தில் கையை நுழைத்துத் துழாவிப் பார்த்தான் ரமணி. பர்ஸ் பத்திரமாக இருந்தது. அதை எடுத்துத் தன் கால் சராய்ப் பையில் திணித்துக் கொண்டான்.

பொழுது விடிவதற்கு இன்னும் சிறிது நேரம்தான் இருந்தது. கிழக்கிலிருந்து சூரியனின் இளங்கதிர்கள் பாய்ந்துகொண்டிருந்தன. 'பாம் பாம்' என்று சத்தம் போட்டுக்கொண்டு வந்த கார், காளி கோயிலைத் தாண்டிக்கொண்டு போயிற்று. அது ஒரு போலீஸ் லாரி. அதில் சுமார் இருபது போலீஸ்காரர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். வண்டியை ஓட்டிக்கொண்டிருந்த இன்ஸ்பெக்டருக்குப் பக்கத்தில் அதற்கு முந்தைய இரவு அவனிடம் திருடனைப்பற்றி விசாரித்த போலீஸ்காரர் நின்று கொண்டிருந்தார்.

தன்னைச் சுட்டிக் காட்டி இன்ஸ்பெக்டரிடம் அந்தப் போலீஸ்காரர் ஏதோ சொல்லுவதைக் கண்டான் ரமணி. முந்திய இரவு அவருக்கு எதிரில் பைத்தியமாக நடித்தது போலவே இப்போதும் நடந்து கொள்ளுவதென்று தீர்மானித்தான். போலீஸ்காரர் ரமணியின் பக்கம் கையைக் காட்டி வண்டியை ஓட்டிக்கொண்டிருந்த இன்ஸ்பெக்டரிடம் என்னவோ சொன்ஞர் அல்லவா? உடனே வண்டி காளி கோவிலுக்குச் சற்று தொலைவிலேயே போய் நின்றது.

வண்டியிலிருந்து இன்ஸ்பெக்டரும் அந்தப் பழைய போலீஸ்காரரும் கீழே இறங்கினுர்கள். ரமணியை நெருங்கி வந்தார்கள்.

இன்ஸ்பெக்டருக்கு ஒரு 'சலாம்' செய்த ரமணி, "ஹலோ! ஜெனரல் ராஜேந்திர சிங்ஜீ! சௌக்கியமா?" என்று கேட்டான்.

"ஐயோ, பாவம்! இந்தச் சின்ன வயதிலேயா இப்படி அநியாயமாய்ப் பைத்தியம் பிடிக்கவேண்டும்?" என்று அநுதாபத்துடன் அங்கலாய்த்துக்கொண்டார் இன்ஸ்பெக்டர். தலைமயிரை இரண்டு கைகளாலும் பிய்த்து விட்டுக்கொண்டு இடி இடி என்று சிரித்தான் ரமணி.

"ஆமாம், 786! நீ வந்தபோது இந்தப் பையன் மண்டபத்தில்தான் இருந்தானு?" என்று விசாரித்தார் இன்ஸ்பெக்டர்.

"ஆமாம், சார்! அந்தத் திருடன் ஷண்முகநாதன் வீட்டிலே கொள்ளையடித்த சாமான்களுடன் இந்தக் காளி கோயில் பக்கம்தான் வந்தான். இங்கே ஒளிந்து கொண்டிருந்தாலும் இருப்பான் என்றுதான் கோவிலில் வந்து தேடினேன். இந்தப் பையன் மட்டும்தான் இங்கே புலம்பிக்கொண்டு கிடந்தான்...." என்று இழுத்தார் போலீஸ்காரர்.

"வெறும் பைத்தியம் என்று விட்டு விடுவதற்கில்லை. இவனையும் நீ அப்போதே நாலு திருச்சாத்துச் சாத்தி விசாரித்திருக்க வேண்டும்...வேண்டுமென்றே பைத்தியம் மாதிரி இவன் நடித்தும் இருக்கலாமல்லவா? ...ரொம்ப நாட்களாகவே எனக்குச் சந்தேகம்—இந்தக் கோயில், திருடர்களின் மறைவிடமாயிருக்கலாமோ என்று! இவனே திருடனுயிருக்கலாமல்லவா?" என்றுர் இன்ஸ்பெக்டர்.

இன்ஸ்பெக்டரின் கெட்டிக்காரத்தனத்தை மனத்திற்குள்ளாகவே வியந்து கொண்டான் ரமணி. ஆனுல், தன் முகத்தில் அந்த உணர்வைக் காட்டிக் கொள்ளவில்லை. போலீஸ்காரர்கள் இப்போதும்கூடத் தன்னைச் சோதனை போட்டாலும் போடலாம் என்று எண்ணிய போதே ரமணிக்கு நடுக்கம் எடுத்தது. கால் சராய்ப் பையிலிருந்த பணப் பையைத் தன்னையும் அறியாது அவன் தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

"ஏய் போலீஸ்! இந்த மேஜர் ஜெனரல் ராஜேந்திர சிங்ஜியைக் கைது செய்து சிறையிலே தள்ளு!......தீன கருணுகரனே நடராஜா நீலகண்டனே......நாத்ருதீம் தீம் தன...ரிஸாநிபசா நிபமகமபா...டேய்! என்னை யாரென்று நினைத்தாய்? கிங்காங்டா கிங்காங்...யார் வந்தாலும் விடமாட்டேன்! சவால்! எவர் வந்தாலும் விடமாட்டேன்!...ஹிஹிஹி..." என்று ஆரம்பித்து ஓயாமல் உளறிக்கொண்டே போன ரமணியைப் பார்த்துச் சிரித்தார் இன்ஸ்பெக்டர்.

"நல்ல முற்றிப்போன பைத்தியம்தான்!" என்ற இன்ஸ்பெக்டர், "எப்போதும் இந்தக் கோவிலில் ஒரு கண்ணிருக்கட்டும், என்ன?" என்று போலீஸ்காரரை நோக்கிச் சொல்லிவிட்டு லாரியை நோக்கி நடந்தார். இருவரும் ஏறிக்கொண்டதும் லாரி காற்றைக் கிழித்துக்கொண்டு கிளம்பிற்று.

தான் கண்ட பயங்கரக் கனவை மறுபடியும் மனக்கண்ணுல் நினைவுபடுத்திப் பார்த்துக்கொண்ட ரமணி பயத்துடன் உடலைச் சிலிர்த்துக்கொண்டான். இனிமேல், அந்த ஜனப் புழக்கமற்ற காளிகோவிலில் தங்குவது தவறென்று அவனுக்குத் தோன்றிற்று. பணப்பையை மறந்துபோய் வைத்துச்சென்ற திருடன்

அதை எடுத்துச் செல்லுவதற்காக மறுபடியும் திரும்பி வந்தாலும் வருவானென்று யூகித்துக் கொண்டான் ரமணி. எனவே, கூடிய விரைவில் அவ்விடத்தை விட்டுப் போய்விடுவதுதான் நல்லதென்று அவனுக்குப் பட்டது. அந்த ஊரைவிட்டே போய் விடவிரும்பினுன். பணத்துக்குத்தான் தற்போது கவலைப்பட வேண்டியதில்லையே!

எல்லாவற்றுக்கும் முன்னல், அந்தப் பணப்பையில் இருக்கும் பணம் எவ்வளவு என்பதைப் பார்த்துவிட விரும்பினுன். அதே கோயிலுக்குப் பின்புறம், ஓர் அரச மரத்தடியில் உட்கார்ந்து, பணப்பையை எடுத்தான். அதைத் திறந்து உள்ளே இருந்த நோட்டுக் கற்றைகளை வெளியே இழுத்த ரமணியின் கண்கள் தெறித்துவிடும் போல் பிதுங்கின. ஐந்து நூறு ரூபாய் நோட்டுகள்; இருபது பத்து ரூபாய் நோட்டுகள்; பத்து ஐந்து ரூபாய் நோட்டுகள்; ஐந்து ஒரு ரூபாய் நாணயங்கள், இவற்றைத் தவிர மூன்று ரூபாய்களுக்குச் சில்லறை வேறு!

'சோற்றுக் கவலை விட்டது. கவலையில்லை!' என்று நினைத்துக் கொண்டான் ரமணி. நோட்டுக் கற்றைகளை மறுபடியும் பையிலேயே திணித்து வைத்தான். அப்போது ஒரு சிறு காகிதம் பையிலிருந்து விழுந்தது. அதில் எழுதி இருந்ததை மங்கிய வெளிச்சத்தின் உதவியால் உற்றுப்பார்த்தான் ரமணி. 'கிறிஸ்தாபர், மானேஜர், கிராண்ட் சரோஜா சர்க்கஸ் கம்பெனி, புதுக்குளம்' என்ற விலாசம் காணப்பட்டது. அதைப் படித்ததுமே, பணப்பைக்குச் சொந்தக்காரர் அவராய்த்தான் இருக்க வேண்டுமென யூகித்தான் ரமணி. விலாசச் சீட்டு, நோட்டுக் கற்றைகள் எல்லாவற்றையும் மறுபடியும் பையினுள் போட்டான். பணப்பையைச் சராய்ப் பையினுள் பத்திரமாக வைத்துக் கொண்டு நடந்தான்.

'ரமணி! இனிமேலாவது நல்லவனுயிரு!' என்ற வனஜாவின் உருக்கமான புத்திமதி திடீரென அவன் காதுகளில் ஒலித்தது. தான் ஒரு தவருன காரியத்தைச் செய்வதாக அவனுக்குத் தென்பட்டது. 'யாருக்கோ சொந்தமான பணத்தை வைத்துக் கொண்டு, கவலையற்ற வாழ்க்கை நடத்தலாமென்று திட்டமிட்டிருக்கிருயே, இது நேர்மையான செய்கையா?'

இந்தக் கேள்வியை திருவாளர் மனச்சாட்சியார் கேட்டதும் ரமணி கொஞ்சம் திகைத்துத்தான் போனுன். அகத்துக்கும், புறத்துக்கு மிடையே நடந்த போராட்டத்தில், முடிவில் மனச்சாட்சிதான் வெற்றி பெற்றது. மனச் சாட்சியின் புத்திமதியை ஏற்றுக் கொள்ளுவதற்கு வேண்டிய நல்ல தன்மை தனக்குக் கூட வந்து விட்டதா என்று எண்ணிக் கொஞ்சம் இறுமாப்பு அடைந்தான் ரமணி.

மனச் சாட்சியின் கட்டளைக் கிணங்க, உடனே புதுக்குளம் போய், சர்க்கஸ் மானேஜர் கிறிஸ்தாபரைச் சந்தித்து, அவரிடம் எல்லாப் பணத்தையும் கொடுத்து விடவேண்டுமென்று தீர்மானித்தான். ரமணி, இந்தத் தீர்மானத்துடன் தெருவில் நடந்து போய்க் கொண்டிருக்கும் போதுதான், வழியில் எதிர்ப்பட்ட சாமியப்பன்மீது மோதிக்கொண்டான்! இருவரும்காரசாரமாகச் சண்டை போட்டது, லாரியில் அகப்பட்டுச் சாவதற்கிருந்த ரமணியை சாமியப்பன் சாக்கடையில் தள்ளிக் காப்பாற்றியது. ரமணி அவன் விரும்பிக் கேட்ட அரை ரூபாய்க்குப் பதில் ஒரு ரூபாயாக அவனுக்குக் கொடுத்தது, பிறகு அவரவர் வழியில் பிரிந்து சென்றது எல்லாவற்றையும்தான் முன்பே பார்த்தோமே!

...பல் துலக்கி விட்டு ஓர் உணவு விடுதியில் தன் வயிற்றை நிரப்பிக் கொண்டான் ரமணி. அதற்குள் காலை மணி ஏழு ஆகிவிட்டது. தன் மனச் சாட்சியின் கட்டளைக் கிணங்க ஏற்கனவே தான் திட்டமிட்டிருந்தபடி ஒரு சீட்டு வாங்கிக் கொண்டு புதுக்குளம் பஸ்ஸில் ஏறிக் கொண்டான். ஏறி உட்கார்ந்ததும் தன்னைச் சுற்றிலும் ஒரு கண்ணோட்டம் விட்டான். 'பஸ்'ஸிலே கொஞ்ச தூரத்தில் தன் வீட்டு வேலைக்கார முனுசாமி வெற்றிலையை மென்று கொண்டே உட்கார்ந்திருப்பதை ரமணி கண்டான். உடனே திடுக்கிட்டான்.

'தன்னைப் பிடித்து வருவதற்காக அப்பா அனுப்பிய முனுசாமியிடமே அகப்பட்டுக் கொண்டுவிடப் போகிறோமே!' என்று எண்ணியபோது ரமணியின் நா வறண்டு விட்டது. 'வண்டியிலிருந்து இறங்கி ஓடிவிடலாமா?' என்றுகூட அவன் நினைத்தான். அதைச் செய்தும் இருப்பான். ஆனால், அதற்குள் கண்டக்டர் 'ரைட்' சொல்லவே, வண்டி புறப்பட்டு விட்டது. திருதிருவென்று விழித்தபடியே உட்கார்ந்திருந்தான் ரமணி!



12. ராக்கப்பன் யார்?

'எங்கே, உன் கையை நீட்டு; பார்ப்போம்!' என்று ராமசாமி படபடப்புடன் கேட்டதுமே, சாமியப்பனின் உள்ளம் வியப்பும் திகைப்பும் வேதனையும் ஒருமித்துக் கலந்த விநோத உணர்ச்சி வசப்பட்டது.

மற்றவர்களுக்கெல்லாம் கைகளில் ஐந்து விரல்கள் இருக்கும்போது தனக்கு மட்டும் ஆறு விரல்கள் இருப்பது குறித்து சாமியப்பனுக்கு எப்போதுமே உள்ளூர வேதனை; அவமானம். பிறருடன் பேசும்போதெல்லாம் தன் கையின் விசேடமான அமைப்பை அவர்கள் கவனித்துவிடாதபடி அவன் மறைக்கமுயல்வது வழக்கம். இப்போது ஜிமிக்கி தன் கையில் வந்து சேர்ந்த வரலாற்றைத் தெரிவிக்கும்போதுகூட அவன் கைகளைப் பின்புறமாகக் கட்டிக்கொண்டுதான் இருந்தான். அதனால், தன் கைகளில் ஆறு விரல்கள் இருப்பதை ராமசாமி கவனித்திருக்க முடியாது என்று அவன் உறுதியாக எண்ணினான். அப்படியிருக்கும்போது, "எங்கே, உன் கைகளைக் காட்டு" என்று பரபரப்போடு அவர் கேட்டது அவன் வியப்பைத் தூண்டியது.

'என்னை இவருக்கு முன்னாலேயே தெரியுமா? ஏற்கனவே தெரிந்தவனைப் பார்ப்பதுபோலல்லவா உன்னிப்பாய்க் கவனிக்கிறார்!' என்று எண்ணிய சாமியப்பன், தயக்கத்துடனே தன் கைகளை ராமசாமியை நோக்கி நீட்டினான். தன் கைகளை அவர் காட்டச் சொன்னபோதுகூட சாமியப்பனுக்கு அவ்வளவு திகைப்பு ஏற்படவில்லை; அவர் தலையில் அடித்துக்கொண்டு மூர்ச்சையாகி விழுந்ததும்தான் சாமியப்பனின் வியப்பு அதன் வரம்பைக் கடந்துவிட்டது!

'அப்பா அவனை ஏன் அப்படி உற்றுப் பார்க்கிறார்?' என்று ஏற்கனவேயே திகைத்துக்கொண்டிருந்த வனஜா, 'ராக்கப்பன்... கிணறு...விஷம்...கொலை' என்று கூவிக்கொண்டே—தலையிலடித்தபடி—'தடா'ரென்று அப்பா கீழே விழுந்ததைக்கண்டு திக்பிரமை பிடித்துப்போய் நின்றுவிட்டாள். 'ராக்கப்பன், கொலை, விஷம், கிணறு முதலிய சொற்கள் எல்லாம் அப்பாவின் வாழ்க்கையில் நடந்த ஏதோ ஒரு பயங்கர நிகழ்ச்சியைத்தான் குறிக்கவேண்டும். இந்த சாமியப்பனின் தகப்பன் ராக்கப்பனை அப்பாவுக்கு முன்னாலேயே தெரிந்திருக்கவேண்டும். இந்தப் பையனைக்கூட முன்பே அவருக்குத் தெரிந்திருக்கவேண்டும்.

இல்லாவிட்டால் ஏன் அப்படி உற்றுப் பார்த்திருக்கவேண்டும்? அதுவும் அவனுடைய கைகளில் ஆறு விரல்கள் என்பது அப்பாவுக்கு—அவர் அவன் கைகளைப் பார்க்காத போதே எப்படித் தெரிந்தது? அப்பாவின் வாழ்க்கையில் ஏதோ மர்மமான நிகழ்ச்சி நடந்திருக்கிறது...அதில் அந்த ராக்கப்பனும் தொடர்பு கொண்டவனாக இருந்திருக்கக் கூடும்...'

ராமசாமி 'தடா'லென்று தரையை நோக்கிச் சாய்ந்துகொண்டிருக்கும்போதே, மேற்குறித்த எண்ணங்கள் எல்லாம் நொடிப் பொழுதுக்குள் வனஜாவின் உள்ளக் கடலில் அலை அலையாகப் புரண்டன.

திடீரென மூர்ச்சையான ராமசாமிக்குத் தக்க முதலுதவி எதுவும் செய்யத்தோன்றாமல் இன்ஸ்பெக்டர் பிரமித்துப்போய் உட்கார்ந்திருந்தார். அவ்வறையில் அமர்ந்திருந்தவர்களுள் கொஞ்சம் நிதானமாய் நடந்துகொண்டவர் அந்தப் போலீஸ்காரர்தான். சட்டென்று ஓடிப்போய் ஒரு செம்பில் குளிர்ந்த தண்ணீர் எடுத்து வந்தார். அதற்குள், இன்ஸ்பெக்டரும் ஒருவாறு சமாளித்துக்கொண்டு, மேஜை மேல் கிடந்த கனத்த அட்டையால் ராமசாமிக்கு விசிறத் தொடங்கினார். வனஜாவும் சாமியப்பனும் ஒருவரை ஒருவர் கூர்ந்து பார்த்துக்கொண்டார்கள்!



இன்ஸ்பெக்டரும், போலீஸ்காரரும் முதலுதவி அளித்த பிறகு, ராமசாமி மெதுவாகக் கண்களைத் திறந்து மிரள மிரள விழித்தார். அவர் ஒரு தினுசாக விழிப்பதைக் கண்ட வனஜாவின் பயம் அதிகமாயிற்று. அவளுடைய தோழி ஒருத்தியின் தாத்தா சாவதற்கு முன் அந்த மாதிரிதான் விழித்தார். அவர் சாகும்போது வனஜா அருகில் இருந்தாள். அதே போல் இப்போது ராமசாமியும் மரண விழி விழித்தது வனஜாவின் உள்ளத்தை என்னவோ பண்ணியது. 'எல்லாம் இந்தக் கடன்காரனால் தான் வந்தது' என்று எண்

ணிக்கொண்டே சாமியப்பனை அப்படியே சாம்பராக்கிவிடுகிற மாதிரி வெறித்துப் பார்த்தாள் வனஜா. அவளுடைய பார்வையின் தீவிரத்துக்குரிய காரணத்தை யூகித்து உணர்ந்தவன்போல் சாமியப்பன் இரக்கமாக வனஜாவை நோக்கிவிட்டுத் தலையைக் கவிழ்த்துக்கொண்டான்.

"என்ன சார், திடீரென்று மயங்கி விழுந்து விட்டீர்களே! என்ன காரணம்? ரௌடி ராக்கப்பனை உங்களுக்குத் தெரியுமா?" என்று ஆவலுடன் விசாரித்தார் இன்ஸ்பெக்டர்.

"ஹஹ்ஹஹ்ஹா! ராக்கப்பனை யாருக்குத்தான் தெரியாது? கொலைகாரப் பாவி! யார் அவன்!...ஐயோ! அதோ ராக்கப்பன்! கத்தியை எடுத்துக்கொண்டு என் மேலே பாய்கிறானே! யாராவது காப்பாற்ற மாட்டீர்களா என்னை!...டேய்!... என்னவென்று எண்ணினாய்? கிணற்றில் தூக்கிப் போட்டு விடுவேனாக்கும்!" என்றபடி அவசரமாக எழுந்திருந்தார்.

அவருடைய மூளை திடீரென்று ஏற்பட்ட அதிர்ச்சியால் நிலைதடுமாறிக் கொதித்துக் கொண்டிருக்கிறதென்பதை அறிந்தார், இன்ஸ்பெக்டர். உடனே, கையை ஓங்கிக் கொண்டு படபடப்புடன் எழுந்திருந்த ராமசாமியை அவர் உடும்புப் பிடியாய்ப் பிடித்து ஒரு நாற்காலியில் உட்கார்த்தி வைத்தார். மிகவும் பலசாலியான இன்ஸ்பெக்டருக்கே வெறிபிடித்திருந்த அவரைப் பிடித்து உட்காரச் செய்வது மிகவும் கஷ்டமான காரியமாக இருந்தது.



"503! உடனே சைகிளில் போய் டாக்டர் சுந்தரத்தைக் கையோடு கூட்டிவா!" என்றார் இன்ஸ்பெக்டர். 503 திரும்பினார்..வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. இரண்டு நிமிஷங்கள் கழிந்தன. யாரோ ஒரு போலீஸ்காரர் விலங்கிடப்பெற்ற முரடன் ஒருவனைத் தரதரவென்று பிடித்து இழுத்துக்கொண்டு இன்ஸ்

பெக்டரின் அறையினுள் நுழைந்தார்.

503 இன்ஸ்பெக்டரிடம் விடைபெற்றுக்கொண்டு டாக்டரை அழைத்துவரக் கிளம்பிச் சென்றுர்.

"சார்! நான் மின்னலூர்க் கான்ஸ்டேபிள். இந்த ராக்கப்பனை நாங்கள் வெகு நாட்களாகவே பல குற்றங்களுக்காகத் தேடிக்கொண்டிருக்கிறேம். நீங்களும் தேடிக்கொண்டிருப்பதாக எங்களூர் இன்ஸ்பெக்டர் கேள்விப்பட்டார். எங்கள் பிராந்தியத்தைவிட உங்கள் பிராந்தியத்திலேயே இவன் அதிக மோசடிகள் பண்ணியிருப்பதால் உங்களிடமே இவனை எங்கள் இன்ஸ்பெக்டர் ஒப்படைக்கச் சொன்னுர்..." என்றுர் திருடனைத் தள்ளிக்கொண்டு வந்த போலீஸ்காரர்.

ராக்கப்பன் என்ற பெயரைக் கேட்டதுமே வனஜா சாமியப்பனை நோக்கினுள். அவன் கைகளும் கால்களும் இலேசாக நடுங்கிக்கொண்டிருப்பதை அவளால் பார்க்க முடிந்தது. அடுத்தாற்போல் அவள் பார்வை, ராமசாமியும் ராக்கப்பனும் ஒருவரையொருவர் கவனித்துக்கொண்டார்களா என்று அறிவதற்காக ராமசாமியின்மீது பதிந்தது. ராமசாமி ராக்கப்பனை அகலத் திறந்த கண்களால் விழித்துப் பார்த்துக்கொண்டிருந்தார். ஆனல் கூச்சல் கீச்சல் போடவில்லை. அமைதியாக உட்கார்ந்திருந்தார். கொஞ்சம் மன நிம்மதியுடன் ராக்கப்பன் பக்கம் திரும்பினுள். அவன் ராமசாமியைக் கவனித்ததாகவே தெரியவில்லை. ஏன்? சாமியப்பன் அதே அறையின் ஒரு மூலையில் நின்றுகொண்டிருப்பதைக்கூட அவன் பார்க்கவில்லை. அவன் தலையைக் குனிந்துகொண்டிருந்தான்.

"அது சரி, இந்தப் பயலை எந்த இடத்தில் பிடித்தாய்?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"எங்கள் ஊர்க் காளி கோவிலில் பிடித்தேன்! அந்த இடிந்துபோன காளி கோவிலில் திருடர் புழக்கம் இருப்பதாகத் தகவல் எட்டியது எங்களுக்கு. இன்ஸ்பெக்டரும் அந்தக் கோவிலின் மேல் ஒரு கண் வைத்துக்கொள்ளும்படி என்னிடம் எச்சரித்திருந்தார். அதன்படி நான் அந்தக் கோவிலின் பின் பக்கம் உட்கார்ந்துகொண்டிருந்தேன். காலை சுமார் ஏழு மணிக்கு இவன் கோவிலுக்கு வந்தான். ஏற்கனவே இதற்கு முன்னுல் இரண்டு மூன்று தடவை இவனை ஜெயிலில் பார்த்திருந்ததால் எனக்குச் சந்தேகம் உண்டாயிற்று. மறைந்தபடியே பார்த்தேன். இவன் குனிந்து எதையோ தேடினுன். அடிக்கடி தன்னை யாராவது கவனிக்கிருர்களா என்றும் சுற்றிப் பார்த்துக்கொண்டான். இவன் பல குற்றங்களுக்காகத் தேடப்பட்டுவரும் ராக்கப்பன்தான் என்பது சிறிது நேரத்துக்கெல்லாம் எனக்குப் புரிந்தது. அப்படியே திடீரென்று அவன் முன்னுல் கைத் துப்

பாக்கியுடன் குதித்தேன்...எங்கள் ஊரைவிட இந்தப் பக்கங்களிலேயே இவன் அதிகக் குற்றங்கள் செய்திருப்பதால் இன்ஸ்பெக்டர் உங்களிடம் இவனை ஒப்படைக்கச் சொன்னார்.'' என்று கூறினார் மின்னலூர்க் கான்ஸ்டேபிள்.

'' ஆமாம், காளி கோவிலில் எதைத் தேட வந்தாய்? ஹஉம். திருட்டுச் சொத்தையெல்லாம் அங்கேதான் மறைத்துவைத்திருக்கிறாயா?'' என்று ராக்கப்பனை மிரட்டிக் கேட்டார் இன்ஸ்பெக்டர்.

இன்ஸ்பெக்டரின் உறுமல், கர்ஜனை, மிரட்டல் ஒன்றுக்கும் ராக்கப்பன் அசைந்து கொடுக்கவில்லை. பேசும் நிலையைக் கடந்த ஞானியைப் போல் வாய்மூடி மௌனியாக நின்றிருந்தான். அவனிடமிருந்து உண்மையைக் கறப்பதற்காக முடிவில் தடியடி உற்சவம் நடந்ததென்பதைச் சொல்லத் தேவையில்லை. தடிதந்த வேதனை ராக்கப்பனின் வாயைத் திறக்கச் செய்தது! எல்லாவற்றையும் ஒளிக்காமல் கக்கிவிட்டான். இடிந்த காளி கோவிலில் ஒரு பையனிடமிருந்து வைரஜிமிக்கி ஒன்றையும் வெள்ளி டம்ளர் ஒன்றையும் கைப்பற்றியதையும், அதை எடுத்துக் கொண்டு போனதையும் சொன்னான். அப்படி மூட்டை கட்டும் மும்முரத்தில், எவரோ ஒரு ரயில் பிரயாணியிடமிருந்துதான் 'மூட்டையடி'த்த பணப்பையை நினைவுப் பிசகாகக் கோவிலிலேயே வைத்து விட்டதாயும், அதை எடுத்துக்கொண்டு போவதற்காகவே தான் மறுபடியும் கோவிலுக்கு வந்ததாயும் தெரிவித்தான்.

"சரி, அந்தப் பர்ஸ் எங்கே?'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''அதை அங்கே காணவில்லை, எசமான்! ஜிமிக்கியையும் வெள்ளி டம்ளரையும் என்னிடம் கோட்டைவிட்ட அந்தப் பையன் சுருட்டிக் கொண்டு போயிருப்பான்!'' என்று அடக்கமாகப் பதில் வந்தது.

திருடனைப் பிடித்துவந்த போலீஸ்காரரைப் பார்த்தபடி, "எதற்கும் அந்தக் கோவிலை சோதனை போட்டுவிடுங்கள். இவன் சொல்வதில் எனக்கு நம்பிக்கை இல்லை!'' என்றார் இன்ஸ்பெக்டர். அந்தப் போலீஸ்காரர் விடை பெற்றுச் சென்றார். ராக்கப்பன் தரைமீது கண்களைப் பதித்தபடியே தலை குனிந்து நின்றுகொண்டிருந்தான்.

இன்ஸ்பெக்டர், "ஏண்டா பய்யலே? இந்த ஜிமிக்கியைத்தான் உன் அப்பன் வைத்திருந்த மூட்டையிலிருந்து நீ கிளப்பினையாக்கும்?'' என்றார் சாமியப்பனைப் பார்த்து. அப்போதுதான் தலை நிமிர்ந்த ராகப்பன் நடுங்கியபடி நின்று கொண்டிருந்த சாமியப்பனைப் பார்த்தான். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

மேஜையிலிருந்த ஜிமிக்கியை ராக்கப்பனிடம் காட்டிய இன்ஸ்பெக்டர், "காளி கோவிலில் ஒரு பையனிடமிருந்து நீ பிடுங்கிய ஜிமிக்கி இதுதானு ?" என்று கேட்டார்.

"ஆமாம் !" என்று வியப்புடன் தலையசைத்தான் ராக்கப்பன்.

"இது எப்படி இங்கே வந்தது?" என்று கூறிய ராக்கப்பன் ஜிமிக்கியையும் சாமியப்பனையும் மாறிமாறிப் பார்த்தான். அவனிடம், காத்தாயிக்கு வைத்தியம் பார்ப்பதற்காக சாமியப்பன் ஜிமிக்கியை விற்க வந்தது, வந்த இடத்தில் அகப்பட்டுக் கொண்டது எல்லாவற்றையும் சொன்னுர் இன்ஸ்பெக்டர்.

தன்னிலையிழந்த ராக்கப்பன், "திருட்டுப் பயலே!" என்று ஆத்திரமாய்க் கத்தியபடியே சாமியப்பன் மீது பாய்ந்தான்.

"நீ என்ன பயலாம் ?" என்று ஏளனமாகக் கேட்ட இன்ஸ்பெக்டர் ராக்கப்பனைத் தடுத்து நிறுத்தினுர். எல்லோரும் 'கொல்' லென்று நகைத்தார்கள்.

ராக்கப்பன் இன்ஸ்பெக்டரின் பிடியிலிருந்து முரட்டுத்தனமாகத் தன்னை விடுவித்துக்கொண்டு மறுபடியும் சாமியப்பன் மீது தாவினுன். அதுவரை அமைதியாக—ஏதோ பிரமை பிடித்தவர் மாதிரி உட்கார்ந்திருந்த ராமசாமி, "அப்பா!... என்னைக் கொல்லாதே!...விட்டுவிடு! பழிவாங்காதே!" என்று கதறியபடி தாம் உட்கார்ந்திருந்த நாற்காலியிலிருந்து உருண்டு விழுந்தார். கையை ஓங்கிக் கொண்டு சாமியப்பனை நோக்கிச் சீறிப் பர்ய்ந்த ராக்கப்பன், திடுக்கிட்டுப் போய்ச் சத்தம் வந்த பக்கம் திரும்பிப் பார்த்தான். அவ்வளவுதான்! அவன் முகம் மானைக் கண்ட வரிப்புலிபோல் கொடூரமாக மாறிற்று. மூர்ச்சித்துக் கிடந்த ராமசாமியைச் சுட்டெரித்து விடுகிறவன்போல் முறைத்துப் பார்த்தான் ராக்கப்பன். அவன் பார்த்த பார்வையைக் கண்டு நடுங்கிய வனஜா சாமியப்பனை நிமிர்ந்து பார்த்தாள். சாமியப்பன் அச்சம் கலந்த கண்களால் அப்பனைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"உனக்கு இவரைத் தெரியுமா ?" என்று ராமசாமியைச் சுட்டிக்காட்டி, ராக்கப்பனை இன்ஸ்பெக்டர் விசாரித்தார்.

தன் கண்களில் ததும்பிய வெறியை நிமிஷத்தில் குறைத்துக் கொண்ட ராக்கப்பன், "எனக்குத் தெரியாது சார்! இவர் யாரோ, நான் யாரோ?" என்ருன் அமைதியாக.

"பின்னே உன் பேரைக் கேட்டதுமே மூர்ச்சித்து விழுந்து விட்டாரே !" என்ற இன்ஸ்பெக்டர் ராக்கப்பனைக் கூர்ந்து கவனித்தார். அவன், தன் முகத்தில் எவ்வித உணர்ச்சியையும் காட்டாமல், "இதென்ன சார் வம்பாயிருக்கிறது ? இவர் யாரென்றே எனக்குத் தெரியாது!" என்ருன்.

503 டாக்டருடன் திரும்பினுன். மயங்கிக் கிடந்த ராம சாமியை டாக்டர் பரிசோதித்தார். "திடீரென்று ஏற்பட்ட அதிர்ச்சியால் மூளே கலங்கி இருக்கிறது. நிறைய ஓய்வு தேவை. இந்த மூளைக் கலக்கம், தெளியாத பைத்திய வெறியாக முற்றி ளுலும் ஆச்சரியப்படுவதிற்கில்லை!" என்று ஆங்கிலத்தில் சொல்லிவிட்டுச் சென்ருர்.

டாக்டர் சொன்னது முழுக்க முழுக்கப் புரியாவிட்டாலும், தன் அப்பாவுக்கு மூளை புரண்டுவிட்ட தென்பதைத் தனக்குத் தெரிந்த அரைகுறை ஆங்கில அறிவு மூலம் வனஜாவினுல் யூகிக்க முடிந்தது. அவள் கண்கள் கண்ணீரைக் கக்கின.

* * *

'பாவம், ரமணி! ஜிமிக்கியையும், டம்ளரையும் பறி கொடுத்து விட்டான்! எங்கே, எப்படி எல்லாம் திண்டாடு கிருனே!...என்னிடம் சொல்லாமலே டம்ளரை எடுத்துக் கொண்டு ஓடியிருக்கிருனே, தடியன்!...ஐயோ! இந்த அப்பா வுக்கு இப்படியா மூளை கலங்கிக் கிறுக்குப் பிடிக்கவேண்டும்?' —இப்படி என்ன என்னவோ எண்ணியபடியே அப்பாவை வீடு நோக்கி அழைத்துச் செல்லும் போலீஸ் லாரியில் உட்கார்ந்திருந் தாள் வனஜா.

மயக்கம் தெளியாத ராமசாமியைக் கூடத்தில் ஒரு தனி யறையில் கிடத்தினுர்கள். ரமணி ஓடிப்போன வருத்தத்தில் ஏற்கனவே துயரத்தின் வடிவமாயிருந்த விசாலத்தின் இரு கண் களும் இரு நீர் வீழ்ச்சிகளாயின.

வனஜா போலீஸ் நிலையத்தில் நடந்ததை யெல்லாம் அம்மா விடம் சொன்னுள். விசாலத்தின் முகம் பிசாசை (அப்படி ஒன்று இருக்குமானுல்) நேரிலே பார்த்தவள்போல் வெளிறி விட்டது. அதுவும் ராக்கப்பன் ராமசாமியைக் கொடூரமாய்ப் பார்த்த விதத்தை வனஜா வர்ணித்துக் கொண்டே போன போது, "வனஜா! என்னை என்னவோ செய்கிறதே!" என்று புலம்பியவாறே நெஞ்சைப் பிடித்துக் கொண்டாள், விசாலம். பதறிப்போன வனஜா, அம்மாவை மெல்லப் பிடித்துச் சுவரின் மீது சாய்ந்தவாறு உட்காரச் செய்தாள்.

விசாலத்தின் படபடப்பு அடங்கியதும், "அம்மா! இந்த ராக்கப்பன் யாரென்று உனக்குத் தெரியுமா, அம்மா? ராக்கப் பன் என்ற பெயரைக் கேட்டதுமே அப்பா மூர்ச்சையாகி விட்டாரே, ஏன்?" என்று வனஜா அடக்கமட்டாத ஆவலுடன் விசாரித்தாள்.

நீண்ட பெருமூச்சுக்குப் பிறகு, "வனஜா! நீ சின்னவள். இந்த விஷயமெல்லாம் உனக்குத் தெரியக்கூடாதென்று இத் தனை நாட்களாகச் சொல்லவில்லை. இனிமேல் சொல்லித்தாளுக

வேண்டும். நான் உன் அப்பாவின் வாழ்க்கையில் நடந்த மிக முக்கியமான நிகிழ்ச்சியை இப்போது சொல்லப் போகிறேன். ஆனால், நீ அந்த இரகசியத்தை எவரிடமும் உளறி வைக்கக் கூடாது...'' என்று உடைந்த குரலில் ஆரம்பித்த விசாலம் தொண்டையைக் கனைத்துக் கொண்டாள்.

கல்யாண வீட்டிலே...

என் உறவினர் ஒருவர் வீட்டில் கல்யாணம். அதற்கு நான் போயிருந்தேன். கல்யாண வீட்டில் ஒலி பெருக்கிக் கருவிகள் வைத்து சினிமாப் பாட்டுக்களைப் போட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தப் பாட்டுக்களைக் கேட்டதும், என்னையும் அறியாமல், "ஐயோ! ஐயோ!" என்று அலறிவிட்டேன்.

"ஏண்டா, கழுதை! இது என்ன கல்யாண வீடா? கருமாந்திர வீடா? இங்கே வந்து 'ஐயோ! ஐயோ!' என்று கத்துகிறாயேடா! இங்கே 'ஐயோ' என்று கத்தலாமா?" என்று என் பக்கத்தில் இருந்த என் மாமா என்னைக் கண்டித்தார்.

"அட, சரிதான் போய்யா! அவனைப் போய்ச் சொல்லுகிறீரே! நீர் மட்டும் 'கருமாந்திர வீடு' என்று சொல்லலாமா? அவன் சொன்ன ஒரு 'ஐயோ' 'ஐயோ'வுக்கு நீர் எத்தனை 'ஐயோ' சொன்னீர்? சொல்லலாமா? இது என்ன கல்யாண வீடு என்று நினைத்தீரா, அல்லது இழவு வீடு என்று நினைத்தீரா?"

இப்படிப் பக்கத்திலிருந்த ஒருவர் இரைந்து கொண்டே 'கப்'பென்று என் மாமா வாயை மூடி அவர் மேற்கொண்டு பேச முடியாதபடி செய்துவிட்டார்.

இதைச் சொல்லும்போது, எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது. ஒரு வீட்டில் தடபுடலாகக் கல்யாணம் நடந்து கொண்டிருந்தது. பகல் விருந்து முடியப்போகும் சமயம். அப்போது, திடீரென்று வெளியூரிலிருந்து நாற்பது ஐம்பது விருந்

தினர் வந்துவிட்டனர். உடனே கல்யாண வீட்டுக்காரர், தலைமைச் சமையல்காரரைக் கூப்பிட்டு, "சாப்பாடு போதுமா?" என்று விசாரித்தார்.

"ஐந்தாறு பேர்தான் சாப்பிடலாம். ஐம்பது பேருக்குப் போதாது" என்றார் தலைமைச் சமையல்காரர்.

"சரி, சீக்கிரம் ஐம்பது பேருக்குச் சாப்பாடு தயார் செய்யும்" என்று கூறினார் கல்யாண வீட்டுக்காரர்.

"இது என்ன, பெரிய இழவாயிருக்கிறது? இந்த நேரத்தில் வந்து..." என்று ஆரம்பித்தார் தலைமைச் சமையல்காரர்.

"ஓய்! கல்யாண வீட்டில் இழவு, கிழவு என்று பேசாதிரும்" என்று எச்சரித்தார் வீட்டுக்காரர்.

"உங்களுக்கென்ன தெரியும்! ஐம்பது பேருக்குச் சமைப்பதென்றால் சும்மாவா இருக்கிறது! தாலி அறுந்துபோய் விடும், அறுந்து!" என்று விளக்கினார், தலைமைச் சமையல்காரர்.

இழவு, தாலி அறுதல் இந்த வார்த்தைகளைக் கல்யாண வீட்டில் எவ்வளவு தாராளமாக உபயோகிக்கின்றனர்?

அன்று கல்யாண வீட்டில் 'ஐயோ!' என்று நான் சொன்னதற்கு மட்டும் அவர்களுக்கு அவ்வளவு கோபம் வந்ததே, அதே கல்யாண வீட்டில் ஒலி பெருக்கி மூலம் வைத்த பாட்டுக்கள் என்ன அர்த்தத்தில் இருந்தன என்பதை யாராவது யோசித்தார்களா, அல்லது ஒருவராவது, 'கல்யாண வீட்டில் இந்த மாதிரி 'மயான காண்ட' ரிகார்டுகளை வைக்காதீர்கள்!' என்று சொல்லித் தடுத்தார்களா? காதிலே பாட்டு விழுந்ததும் தலையை மட்டும் ஆட்டி ரசிக்க ஆரம்பித்து விட்டார்கள். அந்தப் பாட்டு எந்த மாதிரியான சந்தர்ப்பத்தில் பாடவேண்டிய பாட்டு, எங்கே பாடப்படுகிறது என்று ஏன் அவர்கள் கொஞ்சம் கூட யோசிக்கவில்லை?

"எப்படி வாழ்வேன் இனிமேல்..."

இப்படி ஒரு பாட்டு. "சம்சாரம் சாகரம் துக்கம்' என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்களே, அது தெரியாமல் ஏன் நான் கல்யாணம் செய்து கொண்டேன்? எப்படி வாழ்வேன் இனிமேல்?" என்று மாப்பிள்ளை நினைக்கிறாரா? அவருடைய ஏக்கத்தைப் பிரதிபலிப்பதற்காகவா அந்தப் பாட்டைக் கல்யாண வீடுகளில்

போடுகிறார்கள்?

'ஏன் இந்த ஜன்மம் எடுத்தேன்? இறைவா, உன் திருவடி நிழலில் சேர்த்துக்கொள்!'—இது மற்றொரு பாட்டின் முற்பகுதி! எப்படியிருக்கிறது பார்த்தீர்களா? அத்துடன் போனாலும் பரவாயில்லையே!

"கட்டியழும்போது தாண்டவக்கோனே!" என்று ஒரு ரிகார்டையும் கல்யாண வீட்டில் போட ஆரம்பித்து விடுகிறார்கள். அட, படுபாவிகளா! கட்டியழுவதற்கு உங்களுக்குக் கல்யாண வீடுதானா கிடைத்தது? வேறு ஏதாவது சுடுகாடு கிடைக்கவில்லையா?

இன்னும் கொஞ்சம் போனால், 'அப்பா மகனே! ஐயோ மகனே! உன்னை அரவம் கடிக்கலாச்சோ?' என்ற சந்திரமதியின் புலம்பலைக்கூட 'ரிகார்ட்' எடுத்துக் கல்யாண வீடுகளில் போட்டாலும் போட்டு விடுவார்கள் போலிருக்கிறது!

வீடு தீப்பற்றிக் கொண்டது. விஷயத்தைச் சொல்லுவதற்காக ஆபீஸிற்கு வந்த வேலைக்காரன், ஆற அமர மெதுவாக வந்து எஜமானரிடம், "ஐயா, முக்கால் மணி நேரத்துக்கு முன்பு, தங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள மாட்டுக் கொட்டகையில் உள்ள வைக்கோற் போரில், எப்படியோ நெருப்பு விழுந்து பற்றிக்கொண்டு, கொஞ்சம் கொஞ்சமாகத் தீ அதிகமாகி வீட்டையும் பற்றிக் கொண்டதால் வீடு சாம்பலாகிவிட்டது" என்று ராகம் போட்டுச் சொன்னானாம்.

எஜமானருக்குக் கோபம் வந்து வேலைக்காரனை அடி அடியென்று அடித்துவிட்டு வீட்டை நோக்கி வேகமாக ஓடலானார். பக்கத்திலிருந்தவர்கள், "ஏண்டா, பைத்தியக்காரா! வீடு தீப்பற்றி எரிந்த விஷயத்தை இப்படியா வந்து சொல்லுவது? வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு, 'எஜமானே! என்ன சொல்லுவேன்? வீடு தீப்பற்றி எரிந்துவிட்டது' என்று சொல்ல வேண்டாமா?" என்றார்கள். அதே வேலைக்காரனுக்கு மற்றொரு சந்தர்ப்பம் வந்தது. எஜமானனிடம் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டுபோய் நின்றான். எஜமானர், "என்னடா, என்ன நடந்தது? சொல்லி அழு!" என்றார்.

"என்னத்தைச் சொல்லுவேன், எஜமான்? தங்கள் மகள் சௌந்திரம் இருக்கிறதே... அது...அது..." என்று அழுது கொண்டே ஆரம்பித்தானாம்.

"ஐயோ, சௌந்தரத்துக்கு என்னடா? ஏதாவது ஆபத்தா?" என்று பதறிக்கொண்டே கேட்டார் எஜமானர்.

"ஏன் கேட்கிறீர்கள் எஜமான்? சௌந்தரத்துக்கு தங்க விக்கிரகம் போல ஓர் ஆண் குழந்தை பிறந்திருக்கிறது." என்றான் அந்த மட வேலைக்காரன்.

அந்த வேலைக்காரனை விட மோசமாக சந்தர்ப்பத்துக்கு ஒவ்வாத பாடல்களைச் சிலர் ஒலி பெருக்கி மூலம் கல்யாண வீடுகளில் வைக்கிறார்களே, இதை நினைக்கும்போது தலையில் அடித்துக் கொள்ளலாம்போல் தோன்றுகிறதல்லவா? இவ்வளவு பெரிய முதுகு இருக்கும்போது யாராவது தலையில் அடித்துக் கொள்வார்களா? ஆகையால், நான் முதுகில்தான் அடித்துக்கொள்ளப் போகிறேன்!

முன்பு இருந்த பெரியவர்கள் இன்ன இன்ன வேளையில் இந்த இந்த இராகத்தைத்தான் பாடவேண்டும் என்று வகுத்திருந்தார்கள். பொழுது புலர்ந்து புள்ளினம் ஆர்க்கும் வேளையில் பூபாள இராகத்தைப் பாட வேண்டும் என்று நிர்ணயம் செய்திருந்தார்கள். காலை வேளையில் பாட ஓர் இராகம், மாலை வேளையில் பாட ஓர் இராகம், பாம்பை மயக்க ஓர் இராகம், பாலகனைத் தூங்க வைக்க ஓர் இராகம், இப்படி ஒவ்வொன்றுக்கும் ஓர் இராகம் என்று வைத்திருந்தார்கள்; அந்த அந்த நேரத்தில் அந்த அந்த இராகத்தைத்தான் பாட வேண்டும் என்று வகுத்திருந்தார்கள்.

ஆஹிரி இராகம் என்று ஓர் இராகம். அந்த இராகத்தில் பாடினால் சோறு கிடைக்காதாம். இதற்கு உதாரணமாக ஒரு கதையைக் கூடச் சொல்லுவார்கள்.

"ஆஹிரி இராகத்தில் பாடினால் சோறு கிடைக்காதா? அது எப்படிக் கிடைக்காமல் போய்விடுகிறது, பார்க்கிறேன்" என்று ஒரு பாடகர் முன்னேற்பாடாகக் கட்டுச் சாத மூட்டையுடன் கிளம்பினார். ஒரு மூங்கில் புதரண்டை வந்ததும் கட்டுச் சாத மூட்டையை ஒரு மூங்கில் மரத்தின் நுனியில் கட்டிவிட்டு ஆஹிரி இராகத்தை ஆலாபனம் செய்துபாட ஆரம்பித்து விட்டார்.

பாடகர் பாட்டைப் பாடி முடிக்கும்போது உச்சி வேளையாகிவிட்டது. 'சரி, சாப்பிடுவோம்' என்று திரும்பிக் கட்டுச் சாத மூட்டையைப் பார்த்தார். அவருக்குத் 'திக்' கென்று ஆகிவிட்டது. காலை வேளையில் மூங்கில் மரம் வளைந்தபடி இருக்கும். வெய்யில் ஏற ஏற நிமிர்ந்து நேராகிவிடும். மூங்கில் மரம் நேராகி விட்டதால் அவருடைய கட்டுச் சாத மூட்டையும் கைக்கு எட்டாத உயரத்தில் போய்விட்டது.

ஆஹிரி இராகத்தைப் பாடிய அந்தப் பாடகர் அன்று பூராவும் பட்டினி கிடந்தாராம்!

முன்பெல்லாம் — அதாவது என் பாட்டி காலத்தில் கல்யாண வீடுகளில் பெண்கள் நலங்குப் பாட்டு, ஊஞ்சல் பாட்டு முதலிய பாட்டுக்களைப் பாடுவார்களாம். நாயனக்காரர்களும் அவர்கள் பாடுவதை அப்படியே வாசிப்பார்களாம். இப்போது எங்கே அந்த மாதிரி நடக்கிறது? இதற்கு நேர்மாறாக இப்போது நாயனக்காரர்களும், 'வாழ்வே மாயம்' முதலிய சினிமாப் பாட்டுக்களைக் கல்யாண வீடுகளில் வாசிக்கிறார்கள்.

திருமணப் பரிசுக்காகச் சில புத்தகங்கள் இருக்கின்றனவே, அதைப் போல கல்யாண வீடுகளில் போடுவதற்கென்றே சில பாடல்களை 'ரிகார்ட்' எடுத்துப் போட்டால் என்ன? போடலாம். ஆனால், திருமணப் பரிசுக்கு என்று சில புத்தகங்கள் இருக்கும்போது, 'மரண தாண்டவம்', 'மயானத்தில் மாணிக்கம்' முதலிய புத்தகங்களைத் திருமணப் பரிசாகச் சிலர் இன்னும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்களே, அதைப் போலவே, 'மயான காண்ட' ரிகார்டுகளையும் கல்யாண வீடுகளில் சிலர் வைத்தால் அவர்களை என்ன செய்ய முடியும்?

★

எல்லாம் ஒன்றுதான்!

ஒருவர் தம் நண்பருக்கு ஒரு கடிதம் எழுதினார்; அதைக் கவரில் போட்டார். நேரே தபால் நிலையம் சென்றார். அங்கு ஒரே கூட்டமாக இருந்தது. கட்டு எடுக்கும் நேரத்துக்குள் தபால் தலை வாங்க முடியாது என்று அறிந்தார்.

உடனே, சுற்றுமுற்றும் பார்த்தார். ஒரு மூலையில் கோந்து இருந்தது. கையிலிருந்த இரண்டணாவில் ஒரு பாகத்தில் கோந்தைத் தடவினார். கவரில் தபால் தலை ஒட்டும் இடத்தில் அதை நன்றாக ஒட்டினார். தபால் பெட்டியில் போட்டுவிட்டார்.

தபால் நிலையத்தில் வேலை பார்ப்பவர்கள் அந்தக் கவரில் ஸ்டாம்புக்குப் பதில் நாணயம் இருப்பதைக் கண்டனர். 'பாவம், விஷயம் தெரியாதவன் செய்த வேலைபோலிருக்கிறது!' என்று நினைத்துச் சிரித்துக் கொண்டே அந்த நாணயத்தை எடுத்துக் கொண்டு அதற்குப் பதிலாக இரண்டணாத் தபால் தலையை ஒட்டி அனுப்பிவிட்டனர்.

கடிதம் தடையின்றி நண்பரை நாடிச் சென்றது.

'என் தம்பியைப்போல முரடன் இந்த உலகத்தில் எவனுமே இருக்கமாட்டான்' என்று கதையின ஆரம்பத்திலே கூறுகிறாள் சந்திரிகா. 'என் தம்பியைப்போல நல்லவன் இந்த உலகத்தில் வலைபோட்டுத் தேடினால்கூடக் கிடைக்கமாட்டான்' என்று கதையின் முடிவிலே கூறுகிறாள் அதே சந்திரிகா!

என் தம்பி

எஸ். கணபதி

தம்பியாம் தம்பி! என் தம்பியைப் போல ஒரு முரடன் இந்த உலகத்தில் எவனுமே இருக்கமாட்டான்! மகாப பொல்லாதவன்! பிடிவாதத்தின் பிறப்பிடம்; அழுகையின் அவதாரம். நான் ஒரு கவியாக இருந்தால் என் தம்பியைப் பற்றி இன்னும எப்படி எப்படியோ வருணித்துக் கொண்டே போவேன். அதனால், என் ஆத்திரம் அடங்கிவிடுமா?

இதோ என்னை நோக்கி வேகமாக ஓடி வருகிறான், பாருங்கள்— இவன்தான் என் 'அருமை'த் தம்பி! இப்பொழுது மணி ஐந்து ஆகிவிட்டதல்லவா? இப்போது நான் இவனைத் தூக்கி இடுப்பிலே வைத்துக்கொண்டு தெருவிலே ஊர்வலம் வரவேண்டும்! அப்படித் தூக்கிக்கொண்டு போனாலும், சும்மா இருக்கிறான் என்று நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை. என்னைக் காலால் உதைத்துக்கொண்டும், தலைப் பின்னலைப்பிடித்து இழுத்துக் கொண்டும் இருப்பான். அம்மா அருமையான பெண்ணுக்கு ஆசையோடு வாங்கி வைத்த பூவையெல்லாம், இந்த அழகான தம்பி தன் விஷமக் கையால் பிடுங்கிக் கிள்ளிக் கசக்கி என் தலை மேலேயே அர்ச்சனை செய்வான். நான் இவ்வளவையும் பொறுத்துக் கொண்டு

தானிருக்க வேண்டும்!

போகும் வழியில் மிட்டாய்க் கடையோ அல்லது பலூன் மற்றும் விளையாட்டுச் சாமான்கள் உள்ள கடையோ அவன் கண்ணில் தென்பட்டு விட்டால், வந்தது எனக்கு ஆபத்து! அவ்வளவுதான்; 'தொப்' பென்று என் இடுப்பிலிருந்து குதித்து,தான் பார்த்ததை வாங்கித் தந்தால்தான் கூட வருவேன் என்று பிடிவாதம் செய்வான். அம்மா என்னிடம் ஏதாவது காசு கொடுத்திருந்தால், அவனது அழுகைக்குப் பயந்து உடனே அவன் கேட்டதை வாங்கிக் கொடுத்து விடுவேன். இல்லாவிட்டால் என்ன செய்வது? என்ன சமாதானம் பண்ணிலும் வழிக்கு வரமாட்டான். நடுத்தெருவிலேயே உட்கார்ந்து 'ஓ' வென்று அழ ஆரம்பித்துவிடுவான்! அவனை மெதுவாக "அழாதேடா என் கண்ணே, நாளைக்கு நிச்சயமாக வாங்கித் தருகிறேன். என் ராஜா!" என்று 'தாஜா'ப் பண்ணித் தூக்கிக்கொண்டு போய் வீட்டில் சேர்ப்பதற்குள் போதும், போதும் என்றாகிவிடும் எனக்கு! உம், இப்படி ஒரு தம்பி வேண்டும் என்று நான் குறைப்பட்டேனு!

வீட்டில் அவன் பண்ணும் அட்டகாசங்களைச் சொல்லவே வேண்டாம்! அரை நிமிஷம்கூட நிம்மதியாக என்னைப் படிக்க விடமாட்டான்! நான் புத்தகத்தைக் கையில் எடுத்துவிட்டால் போதும்; எங்கிருந்தாலும 'ஓ' வென்று அழுது கொண்டே வந்து விடுவான். அப்பொழுதுதான் வேகமாக ஓடிக் கீழே விழுந்து முட்டியைக் காயப் படுத்திககொவ்வான். இல்லாவிட்டால் சமையலறைக் கதவின் இடுக்கில் தன் விரலைக் கொடுத்துத் தானே கதவை வேகமாகச் சாத்திக் கொண்டு, வலிக்கிறதா இல்லையா என்று சோதனை பண்ணிப் பார்ப்பான்! எலிப் பொறியில் கையை மாட்டிக்கொண்டு, 'வீல்வீல்'என்று அலறுவான்! 'அடி சந்திரிகா! குழந்தை அழருன்; என்னவென்று போய்ப் பாரேன். கொஞ்சம் சமாதானம் பண்ணு' என்று உடனே அம்மாவின் ஆக்ஞை பிறந்துவிடும். பிறகு நான் என்னத்தைப் படிப்பது?

நான், பள்ளிக்கூடம் போவதற்கு வேண்டிய உடைகளையெல்லாம் எடுத்து வைத்துவிட்டுக் குளிக்கப் போவேன். குளித்துவிட்டு வரும்போது என் பாவாடையைக் கீழ போட்டுக் கசக்கி அதன் மேல் 'ஜம்' மென்று அவன் உட்கார்ந்து கொண்டிருப்பான். என் மேல் சட்டை அவன் வாயில் படாத பாடு பட்டுக்கொண்டிருக்கும்! தன் பற்களால் சட்டையைக் கடித்து இழுத்துக் கொண்டிருப்பான்! எனக்கு அழுகையே வந்து விடும். என் தம்பியின் முதுகில் நாலு அறை வைக்கலாம் போல் தோன்றும். மெதுவாக அவனிடமிருந்து எல்லாவற்றையும் வாங்கி உடுத்துக் கொண்டுபோய்ச் சாப்பிட உட்காருவேன். அப்பொழுதும் என்னைச் சும்மா விடமாட்டான். நான் தண்ணீர் குடிக்கும் பொழுது தட்டைப் பிடித்துக் 'காகா' வென்று இழுப்பான்! இல்லாவிட்டால் என் தலையில் 'பட்பட்' என்று தட்டுவான்! எனக்குப் புரையேறி கண்

களிலிருந்து நீர் தாரை தாரையாகக் கொட்டும். அதைப் பார்த்து சந்தோஷப்படுவதில் அவனுக்கு ஒரு தனிப் பிரியம்!

நான் பள்ளிக்கூடம் போயிருக்கும்போது என் தம்பிக்கு வீட்டில் ரொம்ப வேலை அதிகம்! என் புத்தகங்களை யெல்லாம் கிழிப்பது, நோட்டுப் புத்தகங்களில் கண்டபடி பென்சிலால் கிறுக்குவது, இன்னும் எவ்வளவோ வேலைகள் அவனுக்கு! அவன் பென்சிலால் கிறுக்கியிருக்கும் நோட்டுப் புத்தகங்களை அம்மாவிடம் காட்டி முறையிடுவேன்.

"அட, குழந்தை எவ்வளவு அழகாகக் கோடுகளை அங்கு மிங்கும் இழுத்திருக்கிறான்! பிறகாலத்தில் இவன் ஒரு நல்ல சித்திரக்காரன் ஆவான்! நீயும் விழுந்து விழுந்து 'டிராயிங்' போடுகிறாயே! இதைப் போல் இருக்குமா உன் டிராயிங்?' என்று தன் அருமை மகனைப் புகழ ஆரம்பித்து விடுவாள் அம்மா.

இந்த வருங்கால ஓவியருக்கு சித்திரம் வரைய என் பாடப் புத்தகம்தான் அகப்பட்டதாக்கும்! இந்த ஓவியருடைய திறமையை என் ஆசிரியையும் கண்டு அதிசயப்பட்டால் எனக்கு ஆபத்து இல்லை; ஆனால், எனக்குப்பள்ளியில்கிடைப்பது அடிகளும், குட்டுகளும் தானே! என் தம்பி இவ்வளவு செய்கிறானே! பதிலுக்கு நான் அவனைத் தொடக்கூடாது. கொஞ்சம் அவனைக்கடிந்துகொண்டால்கூட அப்பா சீறி விழுவார். அம்மாவோ, "எண்டி, நாலு வயதுக் குழந்தைதானேடி அவன்!" என்பாள். நான் மட்டும் என்ன பெரிய மனுஷியா? எனக்கும் பத்து வயதுதானே ஆகிறது! ஆனால், நான் அவன் பண்ணும் அட்டகாசங்களுக்கெல்லாம் பொறுத்துப் போகவேண்டுமாம்! அதிகம் வளர்த்துவானேன்? இந்த வீடு வரவா எனக்கு

நரகமாகிவிட்டது! ஒரு நாளாவது நான் என் சிநேகிதிகளுடன் சந்தோஷமாக விளையாட முடிகிறதா? எப்போது பார்த்தாலும் பொதி சுமக்கும் கழுதையைப் போல் என் தம்பியை வைத்துக்கொண்டு திரிய வேண்டுமாம்! நாளையிலிருந்து கோடை விடுமுறை வேறு ஆரம்பமாகிறது. இனி மேல் நாள் முழுவதும் இப்படி அவதிப்பட வேண்டியதுதான்! எனக்கு அழுகைதான் வருகிறது!

2

'வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும்' என்று சொல்லுகிறார்களே சிலர், அது எவ்வளவு உண்மையானது என்பதை நேற்று என் மாமாவிடமிருந்து வந்த கடிதத்தைப் படித்துவிட்டுத்தான் அறிந்துகொண்டேன்! என் அருமை மாமா எனக்கு எழுதிய அக் கடிதத்தைத் திரும்பத் திரும்ப எனக்குள்ளேயே படித்து எல்லையில்லாத ஆனந்தம் அடைந்தேன்.

"அன்புள்ள சந்திரிகா,

அநேக ஆசிர்வாதங்கள். உனக்குக் கோடை விடுமுறை விட்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். நீ நம்முடைய ஊருக்கு வந்து நான்கு வருடங்கள் ஓடிவிட்டன. இங்கு பாபு, ரமணி, நீலா எல்லோரும் உன்னைப் பார்க்க வேண்டுமென்று துடிதுடிக்கிறார்கள். அவர்களுக்கும் இப்போது விடுமுறைதான். பட்டணத்துப் பெண்ணாகிய உனக்குப் பட்டிக்காட்டில் வந்து விடுமுறையைக் கழிப்பது கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும். இருந்தாலும், உன்னைப் பார்த்து நாளாகி விட்டதால், நீ கட்டாயம் இங்கு வந்து கொஞ்ச நாட்களாவது இருக்க வேண்டும் என்று நாங்கள் எல்லோரும் விரும்புகிறோம்.

உன் அன்புள்ள

மாமா"

என்றுமில்லாத ஆனந்தம் என் இதயத்தை நிரப்பியது. இந்த முரட்டுத் தம்பியின் தொந்தரவு இல்லாமல் கொஞ்ச நாட்களாவது மாமாவின் குழந்தைகளோடு விளையாடிக்கொண்டு சந்தோஷமாக இருக்கலாம் என்று நினைத்த என் உள்ளத்தின் உவகைக்கு அளவே இல்லை. அப்பாவும் சம்மதித்துவிட்டார். அம்மாவுக்கு மட்டும் 'குழந்தை பாலுவை யார் பார்த்துக்கொள்வார்கள்?' என்று கொஞ்சம் கவலைதான். ஆனால், நானா கேட்கிறவள்? அப்பா தன்னுடைய நண்பர் ஒருவருடன் என்னைச் சேர்த்து ஊருக்கு அனுப்பிவிட்டார். நான் வீட்டைவிட்டுக் கிளம்பும்போது தம்பி பாலு நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான். அவனுக்கு ஒன்றும் தெரியாது. 'அக்கா இல்லாமல் கொஞ்ச நாட்களாவது அவதிப்படு. அப்பொழுதுதான் உனக்கு அக்காவின் அருமை தெரியும்' என்று மனத்தில் நினைத்துக்கொண்டே வீட்டை விட்டுக் கிளம்பினேன்.

நான் மாமாவின் வீட்டிற்கு வந்து ஏறக்குறைய ஒரு மாதம் ஆகிவிட்டது. இங்கு எனக்கு ஒரு கவலையும் கிடையாது. ஒரு வேலை

யும் இல்லை. பாபு, ரமணி, நீலா இவர்களுடன் விளையாடிக் கொண்டே காலத்தை இன்பமாகக் கழித்தேன். தம்பி பாலுவைப் பற்றிய எண்ணமே என் உள்ளத்தில் எழவில்லை. பாலுவுக்கு இது ஒரு சரியான தண்டனை என எண்ணி மகிழ்ந்தேன். மாமாவின் வீட்டிலேயே, பட்டணத்துக்குப் போகாமல், எப்பொழுதும் இருந்துவிடலாமா என்று கூடத் தோன்றியது!

அன்று அப்பாவிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. கொஞ்சம் அலட்சியமாகவே கடிதத்தை வாங்கிப் பிரித்துப் படித்தேன்:

"அன்புள்ள சந்திரிகா,

ஆசீர்வாதம். நீ அங்கே சந்தோஷமாக விளையாடிக்கொண்டிருப்பாய் என்றே நினைக்கிறேன். ஆனால், உன் தம்பி பாலு எப்பொழுதும் உன் நினைவாகவே இருக்கிறான். அவன் யாருடனும் பேசுவது இல்லை. சாப்பிடுவது கூடக் கிடையாது. தூங்கும்பொழுது கூட, 'அக்கா, சந்தி...' என்றெல்லாம் பிதற்றுகிறான்! நீ இங்கிருந்து சென்ற பிறகு

குழந்தை பாலுவுக்கு இரு முறை ஜுரம் வந்துவிட்டது. எனவே நீ கூடிய சீக்கிரம் அங்கிருந்து புறப்பட்டுவிடு. குழந்தை பாலு நாளுக்கு நாள் துரும்பாகிக் கொண்டு வருகிறான். அவன் உடம்பைப் பார்க்கவே சகிக்க வில்லை. நீ வந்தால்தான் அவன் உடம்பு தேறும்.

உன் அன்புள்ள
அப்பா"

கடிதத்தைப் படித்த நான் சிறிது கலக்கமே அடைந்தேன். தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடாதா? ஆனால், அதெல்லாம் சில நிமிஷங்கள்தான், 'ஹும், இதெல்லாம் வெறும் பயமுறுத்தல். சும்மா பூச்சாண்டி காட்டுகிறார்கள். அந்த முடாவது, என் நினைவாக இருப்பதாவது! ஓகோ, அக்கா இல்லாததனால் உன் கைக்கு வேலை இல்லை போலிருக்கிறது! நான் அங்கே இருந்தால் என்னை சதா அடித்துக்கொண்டே பல்லைக் காட்டுவாய்! நன்றாகக் கஷ்டப்படு! ...ஒருவேளை, உன்னைப் பார்த்துக் கொள்ள அருமை அம்மாவால் முடியவில்லை போலிருக்கிறது! நான் அங்கே இருந்தால், என் தலையில் உன்னைக் கட்டிவிட்டு 'ஹாய்' யாக இருப்பாள், அம்மா. ஆனால், இப்பொழுது அது முடியவில்லை போலும்! அதற்காகத்தான் அப்பாவை இந்தப் 'பூச்சாண்டிக் கடிதம்' எழுதச்சொன்னாள் போலிருக்கிறது! ஹும், அதற்கெல்லாம் இந்த சந்திரிகாவா மசிகிறவள்? நான் இன்னும் ஒரு மாதம் இங்கே மாமா வீட்டில் இருந்துவிட்டுப் பள்ளிக்கூடம் திறந்த பிறகுதான் அங்கே வரப்போகிறேன்' என்று என்னென்னவோ எண்ணியது என் மனம். இரண்டு நாட்களில் நான் அப்பாவின் கடிதத்தை அறவே மறந்துவிட்டேன். பழைய படி மாமாவின் குழந்தைகளோடு ஆடிப்பாடி விளையாடிக்கொண்டு, தம்பி பாலுவை மறந்துவிட்டுக் குதூகலமாக நாட்களைக் கழித்தேன்.

3

அன்று நடுப்பகல். பகலவன் தன் முழுபலத்தையும் அந்தப் பட்டிக் காட்டு வீதிகளில் காட்டிக்கொண்டிருந்தான். தெருக்களில் ஈ காக்கை கூட இல்லை. ஆயாச மிகுதியால் அப்படியே நித்திரையில் ஆழ்ந்தேன் நான். எவ்வளவு நேரம் தூங்கினேனோ எனக்குத் தெரியாது!

"ஸார், தந்தி!" என்று வாசலிலிருந்து வந்த குரல் என் தூக்கத்தைக் கலைத்தது. கலவரமும் பீதியும் முகத்தில் பிரதிபலிக்க என் மாமா வாசலை நோக்கி ஓடோடியும் சென்றார். தந்திச் சேவகனிடமிருந்து தந்தியைத் தடுமாற்றத்துடனும், நடுங்கும் கைகளுடனும் வாங்கிப் பிரித்துப் படித்தார்.

"குழந்தை பாலு அபாய நிலையில் இருக்கிறான். சந்திரிகாவை உடனே அனுப்பவும்"

இதைக் கேட்டதும், என் தலைமேல் பெரிய கல் ஒன்று விழுந்தது போல் இருந்தது! என் நெஞ்சு என்னை அதல பாதாளத்தில் அமுக்கியது! என் இருதயம் படபடத்தது! மார்பு விம்மியது! கண்கள் மங்கின! நா எழவில்லை! உலகமே

இருண்டது! சோக மேலீட்டால் 'தடால்' என்று மூர்ச்சையுற்றுக் கீழே சாய்ந்தேன். மாமா என்னைத் தாங்கிக் கொண்டார். பிறகு நடந்தவை ஒன்றும் எனக்குத் தெரியாது.

மறுபடியும் கண்களைத் திறந்து பார்த்தபொழுது, சென்னைக்குச் செல்லும் ரயிலில், மாமாவின் அருகில் பிரயாணம் செய்துகொண்டிருப்பதை அறிந்தேன். ஜன்னலின் அருகே வந்து உட்கார்ந்துகொண்டேன். ரயில் 'டக டக டக...' வென்று ஓடிக்கொண்டிருந்தது. என் மனத்திலிருந்த தாங்கமுடியாத பாரத்தாலோ என்னவோ, வேதனை தாங்காமல் ரயில் 'கூ...கூ' வென்று கத்தியது. ஆனால், ரயிலுக்கு இருந்த சுதந்திரம்—கத்தக்கூடிய சுதந்திரம் கூட எனக்கு அப்பொழுது இல்லை! நான் 'ஓ'வென்று கத்தினால் மற்றவர்கள் சிரிக்கமாட்டார்களா? எனவே என் துக்கம் கண்ணீராய்க் கரைந்தது.

ஜன்னலின் வெளியே மரங்களும் மற்றுமுள்ள பொருள்களும் வேகமாக ஓடின. ஆனால், என் மனமோ என் தம்பி பாலுவைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டிருந்தது. ஏதோ ஒரு பெரிய குற்றம் செய்துவிட்டதுபோல் என் மனம் குறு குறுத்தது! பாலுவுக்கு ஒரு பெரிய தீங்கு இழைத்து விட்டதாகவே நான் எண்ணினேன். நான் ஊருக்குப்போனதும் என் தம்பியை உயிரோடு காண்பேனா! அல்லது அவனுடைய உயிரற்ற சடலத்தைத்தான் காண்பேனா! நான் அப்பாவின் முதல் கடிதத்தைக் கண்டதுமே புறப்பட்டுச் சென்னை சென்றிருந்தால், பாலுவுக்கு இவ்வித அபாயம் நேர்ந்திராதல்லவா? அப்பாவின் கடிதத்தைக் 'கற்பனைக் கடிதம்' என்று அலட்சியம் செய்ததாலல்லவா பாலுவுக்கு இக்கதி வந்தது! என்ன அறிவீனம்! கடவுளே, இந்தத் தடவை மட்டும் என்னை மன்னித்து விடுங்கள்! குழந்தை பாலுவைக் காப்பாற்றுங்கள்! இனிமேல் அவன் அருகிலேயே இருப்பேன்! அவன் என்னை அடித்தாலும், அணைத்தாலும் அவனை விட்டு ஒரு கணமும் பிரியமாட்டேன்!"—ஜன்னல் வழியாக வந்த காற்று என் முகத்தில் 'சில்'லென்று அடித்தது. என்னையும் அறியாமல் என் கண்கள் மூடிக்கொண்டன. ஜன்னல் கட்டையின் மேல் என் தலை சாய்ந்தது.

4

விடியற்காலை. 'கூ' வென்று கத்திய வண்ணம் ரயில் வண்டி எழும்பூர் ஸ்டேஷனில் வந்து நின்றது. ஒரு ரிக்ஷாவை அமர்த்திக் கொண்டு நானும் மாமாவும் வீட்டை யடைந்தோம். 'திக்திக்' என்று துடிக்கும் நெஞ்சைக் கையில் பிடித்துக் கொண்டு வீட்டிற்குள் சென்றேன். பாலு ஒரு கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தான். நான் ஊருக்குப் போவதற்குமுன் பார்த்த பாலுவா இவன்! அடையாளமே தெரியாதபடி அப்படி உருமாறி இருந்தான்! அவன் கண்கள் மூடியபடி இருந்தன. அப்பா, அம்மா, டாக்டர் ஆகியோர் பாலுவைச் சுற்றி நின்று கொண்டிருந்தனர். "ஐயோ பாலு!" என்று அலறிய

படியே அவன்மேல் விழப்போன என்னை டாக்டர் தடுத்து நிறுத்தினார். என் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்தோடியது.

டாக்டர் மெதுவாகப் பாலுவின் காதருகில், "பாலு, உன் அக்கா சந்திரிகாவந்துவிட்டாள்!"என்றார்.

பாலு தன் கண்களைத் திறந்து சுற்று முற்றும் பார்த்தான். என்னைக் கண்டதும் தன் கண்களை அகல விரித்து மெதுவாகப் பேசினான். "அக்கா! எங்கே அக்கா நீ இவ்வளவு நாளாய்ப் போயிருந்தாய்? நான் உன்னை இனிமேல் தொந்தரவு பண்ண மாட்டேன். அக்கா, இனிமேல் நான் உன்னை அடிக்கவே மாட்டேன்! அக்கா, நீ இல்லாமல் எனக்குப் பொழுதே போகவில்லையே! அக்கா, நீ இல்லாது போனால் நான்யாரோடு விளையாட முடியும்?"—பாலுவின் குழந்தை உள்ளம் என் கண்களைத் திறந்து விட்டது. உண்மையை உணர்ந்தேன்! பாலு சொல்வது எவ்வளவு மகத்தான உண்மை! அவனுக்கு நான் ஒருத்திதானே கூடப் பிறந்தவள்! என்னைத் தவிர அவன் வேறு யாரோடு சுதந்திரமாக விளையாட முடியும்! இது தெரியாமல் அவனுடைய விளையாட்டைத் தொந்தரவு என எண்ணி அவனை வெறுக்கவும் ஆரம்பித்தேனே! அன்புடன் பாலுவின் அருகில் போய் அவனை அணைத்துக்கொண்டேன். பாலு தன்னுடைய குட்டிக் கைகளால் என் கழுத்தை இறுகக் கட்டிக்கொண்டான். நான் அவன் ரோஜாக் கன்னங்களுக்கு மாறி மாறி முத்தம் கொடுத்தேன்.

பாலு மறுபடியும் பேசினான்: "அக்கா, நீ போயிருந்த போது அப்பா எனக்கு இரண்டு 'பாக்கெட் சாக்லெட்' வாங்கி வந்தார். நீ வந்த பிறகு இரண்டு பேரும் சேர்ந்து தின்னலாமென்று நான் அப்படியே வைத்திருக்கிறேன். அக்கா...இந்தா உனக்கு ஒரு 'பாக்கெட்'. இன்னொரு 'பாக்கெட்' எனக்கு. ஆனால், நான் தூங்கும் சமயம் பார்த்து நீ எங்கேயும் போய்விட மாட்டாயே!" என்று கேட்டான்.

"மாட்டேன் கண்ணு! இனிமேல் எங்கேயும் போகமாட்டேன்! உன் பக்கத்திலேயே எப்போதும் விளையாடிக் கொண்டு இருப்பேன்!" என்றேன் நான், உணர்ச்சியும் சந்தோஷமும் பொங்க.

"பாலுவுக்கு இனிமேல் ஆபத்து ஒன்றும் இல்லை சார். என் வேலை முடிந்து விட்டது" என்று கூறி விட்டு டாக்டர் விடை பெற்றுக் கொண்டார்.

ஒரு வாரத்தில் பாலு பழைய படி ஓடி ஆடி விளையாட ஆரம்பித்து விட்டான். அவன் உடம்பும் தேறி விட்டது. நானும் பாலுவை விட்டு இணைபிரியாமல் இருக்கிறேன். என் தம்பியைப் போல நல்லவன் இந்த உலகத்தில் வலை போட்டுத் தேடினாலும் கூடக் கிடைக்க மாட்டான்! நான் முதலில் சொன்ன தெல்லாம் முழுக்க முழுக்கத் தப்பு!

★

வேப்பம்பூ

'புவியரசன்'

"ஏண்டா இன்னுமா தூங்குகிறாய்? இன்றைக்கு வருஷப் பிறப்பல்லவா? எழுந்திரு" என்று ராமுவைத் தட்டி எழுப்பினாள் அவன் தாய்.

வாரிச் சுருட்டிக்கொண்டு படுக்கையில் இருந்து எழுந்த ராமு, சோம்பல் முறித்துக் கொண்டே தோட்டத்துப் பக்கம் போனான். அங்கே வேப்ப மரத்தில் பூக்கள் கொத்துக் கொத்தாய்ப் பூத்திருந்தன. அவற்றை அண்ணாந்து பார்த்த படியே நின்றிருந்தான்.

"என்ன ராமு, மரத்தைப் பார்க்கப் பார்க்கப் பயமாய் இருக்கிறதா?" என்றாள், அப்பொழுது தான் அங்குவந்த சுசீலா.

"பயமா! வேப்பம் பூதானே வேண்டும்? இப்பொழுதே பறித்துத் தருகிறேன்" என்று சொல்லிக்கொண்டே மரம் ஏறத் தயாரானான் ராமு.

"ராமு... ராமு...... வேப்பம் பூ வேண்டாம். காலையிலேயே என் அப்பாவாங்கிக்கொண்டு வந்துவிட்டார். போன வருஷம் வேப்பம் பூ பறித்து நீ பட்டபாடு போதும்! என்னால் நீ கை கால்களை உடைத்துக் கொள்ள வேண்டாம். முதலில் பல்தேய்த்துக்கொள்" என்றாள் சுசீலா. ராமு பல்தேய்க்க ஆரம்பித்தான்.

* * *

அன்று சித்திரை முதல் நாள். வருஷப் பிறப்பு. காலையிலேயே குளித்துவிட்டுப் புது உடைகளை உடுத்துக் கொண்டு ராமுவின் வீட்டுக்குப் போகத் தயாரானாள் சுசீலா.

"சுசீலா, எங்கே போகிறாய், அவசரமாய்?" என்று கேட்டாள் அவள் தாயார்.

"எங்கும் இல்லையம்மா. ராமு வீட்டுக்குத்தான்"

"அப்படியே அவனைக் கொஞ்சம் வேப்பம்பூப் பறித்துத் தரச் சொல்லி வாங்கிக் கொண்டு வா" என்றாள், அம்மா.

"சரி"— ஓட்டமும் நடையுமாய் ராமுவின் வீட்டுக்கு ஓடினாள் சுசீலா.

ராமுவும் குளித்து விட்டுச் சட்டையைப் போட்டுக் கொண்டிருந்தான். "டேய் ராமு, கொஞ்சம் வேப்பம்பூ பறித்துக் கொடேன். இன்றைக்கு வருஷப் பிறப்பல்லவா?" என்றாள் சுசீலா.

"வா, தோட்டத்துக்குப் போவோம்" என்று அவளை அழைத்துக்கொண்டு தோட்டத்துக்குப் போனான் ராமு. தோட்டத்தில் ஒரு வேப்பமரம் பூத்துக் குலுங்கும் பூக்களுடன் காணப்பட்டது. ராமு மரத்தின் அருகில் சென்று அண்ணாந்து பார்த்தபடியே நின்றான்.

"என்ன ராமு, மரத்திலே ஏறப் பயமாயிருக்கிறதா! நான் ஏறட்டுமா?" என்றாள், சுசீலா.

"பயமா! இதோ ஒரு நிமிஷத்தில் ஏறி விடுகிறேன் பார்" என்று மரத்தின்மேல் ஏறத்தொடங்கினான் ராமு. சிறிது நேரத்திற்குள் மரத்தின் உச்சியை அடைந்து விட்டான். உச்சாணிக் கிளையில் இருந்து கொண்டு, "சுசீலா, நான் மரத்தை உலுக்குகிறேன். கீழே விழும் பூக்களை நீ பொறுக்கிக் கொள்கிறாயா?" என்று, கீழே நின்று அவனையே அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கும் சுசீலாவைப் பார்த்துக் கேட்டான்.

"உம்..." என்று தலையாட்டினாள் அவள்.

ஒரு கிளையைப் பிடித்து உலுக்கினான் ராமு. பூக்கள் கீழே உதிர்ந்தன. சுசீலா அவற்றைப் பொறுக்கிக்கொண்டாள். சுசீலா குனிந்து குனிந்து பூக்களைப் பொறுக்கும் போது, அவள்மேல் பூக்கள் விழும்படி கிளையை ஆட்டுவான் ராமு. அவள் கோபமாக அவனைப் பார்ப்பாள். அவன் சிரிப்பான். இதிலே அவனுக்கு ஓர் ஆனந்தம். இப்படியே இரண்டு, மூன்று தடவை செய்தான்.

ஒரு தடவை அப்படிச் செய்யும் போது, அவன் கால் வைத்து நின்றுகொண்டிருந்த கிளை திடீரென்று முறிந்து விட்டது! கிளையுடன் ராமுவும் கீழே விழுந்தான். இதைப் பார்த்த சுசீலா, 'வீல்' என்று கத்திவிட்டாள். அவள் கதறலைக்கேட்டு வீட்டிலிருந்த எல்லோரும் ஓடி வந்தனர். கீழே விழுந்த ராமு, சுய உணர்வு பெற்று எழ ஒரு மணி நேரம் பிடித்தது. ஆனாலும், அவனால் நடக்க முடியவில்லை. கீழே விழுந்த வேகத்தில் அவனது வலதுகால் எலும்பு முறிந்து விட்டது. அதன் பிறகு வைத்தியரிடம் காண்பித்து அவனுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. கொஞ்சம் கொஞ்சமாக அவனது கால் குணமடைந்து வந்தது.

சுசீலா ராமு வீட்டுக்குவந்து அடிக்கடி அவனுடன் பேசிக்கொண்டிருப்பாள்.

'நம்மால் அல்லவா ராமுவின் கால் இப்படி ஆகிவிட்டது!' என்று எண்ணிச் சில சமயம் சுசீலா வருத்தப்படுவாள். மாலையில்

பள்ளியில் இருந்து வந்ததும், பள்ளியில் நடந்த சங்கதிகளை ஒன்று விடாமல் அவனிடம் சொல்லுவாள். வேறு யாருடனும் அவள் விளையாடப் போவதில்லை.

சில நாட்கள் சென்றன. ராமுவின் கால் சரியாகிக் கொண்டு வந்தது. கொஞ்சம் எழுந்து நிற்கப் பழகினான். பிறகு, தினமும் மாலை நேரத்தில் அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு தோட்டத்தில் கொஞ்ச தூரம் நடக்கச் சொல்லிப் பழக்கப் படுத்துவாள் சுசீலா.

இப்படியே நாட்கள் சென்றன. ராமுவின் கால் இப்பொழுது முன்போலவே ஓடி ஆடி விளையாடும்படி குணமடைந்து விட்டது. இப்பொழுதுதான் சுசீலாவுக்குத் தன்மேல் இருந்த பழி தீர்ந்ததுபோல் இருந்தது. அவளது மனம் ஆனந்தத்தில் திளைத்தது.

* * *

தோட்டத்தில் பல் துலக்கிக் கொண்டிருந்த ராமு, "சுசீலா, அதோ பார்த்தாயா, என்னால் முறிக்கப்பட்ட கிளை மறுபடியும் நன்றாக வளர்ந்து விட்டது!" என்று உச்சிக் கிளையைக் காட்டினான்.

"ஆம், அந்தக் கிளையால் முறிக்கப்பட்ட உன் காலும்தான் இப்போது நன்றாக வளர்ந்துவிட்டது!" என்று கூறிவிட்டுக் கலகலவெனச் சிரித்தாள், சுசீலா.

199267
சென்னை-600008

சொன்னபடி நடப்பவன்!

ஓர் அம்மா, தன்னுடைய குறும்புக்கார மகனுக்கு, "எந்த விஷயத்தையும், நாளைக்கு என்று ஒதுக்கி வைக்கக்கூடாது. எதையும் அன்றைக்கே முடித்து விட வேண்டும், தெரிகிறதா?" என்று அன்புடன் புத்திமதி கூறினாள். உடனே அச்சிறுவன் "இனி நீ சொன்னது போலவே செய்கிறேன்" என்று கூறிக் கொண்டே எழுந்து எங்கோ ஓடினான். "எங்கே ஓடுகின்றாய்?" என்று கூறிக் கொண்டே தன் மகனைப் பிடித்து, இழுத்தாள் அந்த அன்னை. "நீ நாளைக்குச் சாப்பிடுவதற்காக சில கேக்குகளை அலமாரியில் வைத்திருக்கின்றாயே, அதை எடுத்து இப்பொழுதே சாப்பிட்டுவிடப் போகின்றேன். எந்த விஷயத்தையும் நாளைக்கு என்று ஒதுக்கி வைக்கக் கூடாது!" என்று கூறிக் கொண்டே அலமாரியை நோக்கி ஓடினான், அந்தத் தாயார் சொற்படி நடக்கும்' சிறுவன்!

Edited, Printed and Published by Rama. Arunachalam
at Shanti Press, 135, Coral Merchant St., Madras-1.
Hon. Editor : AL. Valliappa.

ஜூலை இதழில்

ஆரம்பமாகிறது!

இந்த இதழில்...

கணிதம் பயிலும் கதாசிரியர் - சிறுவர்க்கு எழுதும் பெரியோர்

ஒரே லட்சியம் - தி. ஜ. ர.

வல்லவனுக்கு வல்லவன் - ஈசாப் கருத்து

வேடிக்கைக் கதைகள் ....

புத்தகத் திருவிழா - சுந்தரம் ஸ்ரீநிவாஸன்

பாலர் கவியரங்கம் ....

கண்ணன் தந்த பொம்மை - கே. கே. கோமளா

சுகுமாரன் (தொடர் கதைப் பாடல்) - கே. கண்ணுச்சாமி

கலை அனுபவம் - சு. சுப்பிரமணியன்

வனஜாவின் அண்ணன் (தொடர் கதை) - ஜோதிர்லதா கிரிஜா

கல்யாண வீட்டிலே... - இளிச்சவாயன்

என் தம்பி - எஸ். கணபதி

வேப்பம்பூ - 'புவியரசன்'